Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 47 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 15 2023

## ஈகைச்சுடர்
# அன்னை பூபதி
## 35 ஆம் ஆண்டு நினைவு நாள்

நாட்டுப்பற்றாளர் நாள்
ஏப்ரல் 19 2023



அன்னை **பூபதி கணபதிப்பிள்ளை**

Annai Poopathy Kanapathipillai

கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்

மண்ணில்: 03.11.1932

ஈகைச்சாவு: 19.04.1988

உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**































**விளம்பரத்துக்கு**

**அழையுங்கள்:**

**437.345.4203**






## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**நாம்
ஒன்றுபட்ட மக்களாக,
ஒரே தேசிய சக்தியாக,
அணிதிரண்டு.
எமது எதிரியின்
சாவலை
எதிர்கொள்ள
வேண்டும்.**






# சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# இயக்கத்தின் வேலைகளை விடுதலைத்துடிப்புடன் செய்தவர் மேஜர் ஜொனி




எங்களால் என்றுமே மறக்க முடியாத அந்த இருள் சூழ்ந்த நாட்கள்.

இங்கே “அமைதி தேடுகின்றோம்” என வந்து - அக்கிரமங்கள் புரிந்த இந்தியத் துப்பாக்கிகளின் ஆட்சிக்காலம்.

வன்னியில் கருப்பட்ட முறிப்பு என்ற சிற்றூர்ப் பொறுப்பாளனாக ஜொனி இருந்தான்.

ஒரு நாள் அப்போதைய எமது பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த மிதி வண்டியில் போய்க்கொண்டிருக்கிறான். அவன் சென்றுகொண்டிருந்த பாதை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் சந்திக்கின்ற மூலை. மிதிவண்டி வளைவில் திரும்பவும் பதுங்கியிருந்த இந்தியப் படையினர் அவன் மீது பாயவும் சரியாக இருந்தது.

எதிர்பாராத தாக்குதல் - கண்ணிமைப்பொழுதிற்குள் அவன் செயற்பட்டான். தன்னைப் பிடிக்க வந்த படையினர் மீது வண்டியைத் தூக்கி வீசினான் அருகில் பதுங்கியிருந்தவர்கள் மீது கைக்குண்டுகளை வீசினான். தப்பி விடுகிறான் ஜொனி.

இந்தச் சம்பவத்தில் 2 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.

இப்படியாக அந்த ஊரில் ஜொனி அரசியல் வேலை செய்த நாட்களில் அடிக்கடி இந்தியப் படையினரைச் சந்தித்திருக்கிறான். அவை ஒவ்வொன்றும் மயிர்க்கால்களைக் குத்தி நிமிர வைக்கும் சம்பவங்கள். அப்போதெல்லாம் அவன் ஒரு புலிவீரனுக்கே இருக்கக்கூடிய சாதுரியத்துடன் தப்பிவிடுவான்.

அந்த ஊரில் மிகவும் நெருக்கடியான அந்தக் காலகட்டத்தில், கடினமான ஒரு சூழ்நிலைக்குள் நின்று அவன் போராட்டப் பணிகளை ஆற்ற வேண்டியிருந்தது. இந்தியப் படையினரும், இந்திய அடிவருடிகளும் எங்கும் நிறைந்திருந்த அந்த நாட்களில் கிராமங்களிலோ, நகரங்களிலோ அரசியல் வேலை செய்வதென்பது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை.

காடுகள், ஆறுகள், குளங்கள், வயல்வெளிகளினூடாக மைல் கணக்கான தூரங்களிற்கு அவனது கால்கள் நடக்கும். தனது பொறுப்பாளர்களால் ஒப்படைக்கப்படும் வேலைத் திட்டங்களை, இவ்வாறாகச் சிரமப்பட்டுத்தான் அவன் செவ்வனே செய்து முடிப்பான்.

கருதப்பட்ட முறிப்பு என்ற அந்த ஊர், எங்களது போராளிகளின் அணிகள், பொருட்கள், ஆயுதங்கள், ஆவணங்கள் என்பவற்றோடு முக்கிய தகவல்களையும் பரிமாறுகின்ற பிரதான இடங்களுள் ஒன்றாக இருந்தது. போராட்டத்தின் பெறுமதிமிக்க இவ்வகையான வேலைகளுக்காக, இந்த ஊருக்கு வருகின்ற போராளிகளை ஜொனி மிகுந்த இடர்களுக்கு நடுவில் பாதுகாத்துப் பராமரித்திருக்கிறான்.

இந்தியர்கள் வளைத்து நிற்கும் போதே கிராமத்துக்குள் நுழைந்து, போராட்டக் கருத்துக்களடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிவிட்டோ, பிரசுரங்களை விநியோகித்துவிட்டோ மிகச் சாதுரியமாகத் தப்பி, அவர்களின் முற்றுகைக்குள்ளிருந்து ஜொனி வெளியேறிய சம்பவங்கள் பல உண்டு.

மாணவர்கள், பெண்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் எனச் சமூகத்தின் எல்லா மட்டத்தினருக்குள்ளும் நுழைந்து, ஜொனி போராட்டக் கருத்துக்களை விதைத்தான். இதன்மூலம் இளைஞர்களையும், பெண்களையும் பெருமளவில் போராட்டத்தோடு இணைத்தான்.

1989 ஆம் ஆண்டு எமதுதேசம் மாவீரர் நாளை முதற்தடவையாக அனுஸ்டித்த போது, கருப்பட்ட முறிப்புப் பகுதியில் அதனைச் சிறப்பாக நடத்தினான். தம்மை நோக்கி இந்தியர்களின் துப்பாக்கி முனைகள் நீண்டிருந்தபோதும், அந்த மக்கள் உணர்வுபூர்வமாக அந்நாளை அனுஸ்டித்தனர். அந்த அளவுக்கு ஜொனி அவர்களோடு இரண்டறக் கலந்து, அவர்களைப் போராட்டத்தின்பால் ஈர்த்திருந்தான்.

அவனையும், தோழர்களையும் ஆபத்து நெருங்கி வந்த பல சந்தர்ப்பங்களில், அவன் நேசித்த இந்த மக்கள் தான் அவரகளுக்குக் கவசமாக நின்றிருக்கின்றார்கள்.

1990 இன் ஆரம்பம். இந்தியர்கள் எங்கள் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இவனது திறமையான செயற்பாடு காரணமாக இவன் மல்லாவிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். போர் நின்றிருந்த அந்த நாட்களில் மக்களிடையில் அரசியல் வேலைத்திட்டங்கள் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட போது, ஜொனி அவ்வேலைகளைச் சிறப்பாகச் செய்துடித்தான்.

கிராம அபிவிருத்தி வேலைகள், சிறுவர்களுக்குக் கல்வி வசதிகள் செய்தல், பெண்களுக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் என இவனது செயற்பாடுகள் வளர்ந்தன. அந்த நாட்களில் சின்னக் குழந்தைகள் முதல் ஆச்சி அப்புவரை, மக்கள் ஒவ்வொருவரோடும் இவன் நெருக்கமான உறவுகளை வளர்த்திருந்தான். அவர்களால் என்றுமே ஜொனியை மறந்துவிட முடியாத அளவுக்கு அது இருந்தது.

1990இன் நடுப்பகுதி. சிறீலங்காப் படையினருடன் இரண்டாவது ஈழப் போர் ஆரம்பித்தது. சண்டைக்குப்போக வேண்டும் என்ற ஜொனியின் ஆவலைப் பூர்த்திசெய்யும் களமாக, அது அமைந்தது.

மாங்குளம் இராணுவ முகாம்மீதான முதலாவது தாக்குதல் தொடுக்கப்பட்டது. எனினும், வெற்றியீட்டமுடியாமல் போய் விட்ட அந்தத் தாக்குதலின் போது, ஜொனி காலில் காயமடைந்தான்.

காயம் மாறி, வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டுப் பணியாற்றிக்கொண்டிருந்த போதும், ‘என்றைக்காவது ஒரு நாள் இந்த முகாமை நிர்மூலமாக்கியே ஆகவேண்டும்.’ என்ற வேட்கையே, அவனுள் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அந்த நாளும் வந்தது. இரண்டாவது தடவையாகவும், இறுதியானதாகவும் மாங்குளம் இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், ஜொனி பெரும் பங்காற்றினான். அந்தத் தாக்குதலின் வெற்றி ஜொனியைப் பூரிப்படைய வைத்தது.

இந்தத் தாக்குதல் முடிந்து சிறிது காலத்தின்பின், அவனது நீண்டநாள் கனவு நனவானது. அரசியல் வேலையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு அவன் சமர்முனைக்கு அனுப்பப்பட்டான். அந்த நாட்களில் அவனைக் காண்கின்றபோது ஓர் ஆத்மதிருப்தி அவன் முகத்தில் தெரிந்தது. ஒரு சின்னக்குழந்தை மிகமிக ஆசையோடு எதிர்பார்த்த ஒரு பொருளை வாங்கிக்கொடுக்கும் போது, அக் குழந்தைக்கு ஏற்படும் மகிழ்வோடு, அவன் சண்டைக் களங்களில் உலாவினான்.

எவ்வளவு ஆர்வத்தொடும் திறமையோடும் அவன் அரசியல் துறை வேலைகளைச் செய்தானோ, அதைவிட அதிக ஆர்வத்தோடும் அவன் படைத்துறை வேலைகளில் ஈடுபட்டான். அரசியல் வேலைகளைச் செய்யும்போது, ஒரு சிற்றூர்ப் பொறுப்பாளனாக இருந்து பின்னர் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளனாக வளரும் அளவுக்கு அவனுள் இருந்த ஆற்றல், சண்டைகளின் போதும் வெளிப்படத் தவறவில்லை.

நீண்டகாலமாக அரசியல் வேலை செய்துகொண்டிருந்த அவனுக்கு, அந்தச் சண்டைக்களங்கள் புதிய உற்சாகத்தைக் கொடுத்தன. போர் அரங்கிலே ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நின்று... ஓய்வின்றி உறக்கமின்றி அவன் போரிட்டான்.

ஜொனி 1969ஆம் ஆண்டு, ஓகஸ்ட் திங்கள் 19ஆம் நாள் பிறந்தான்.

அப்பாவும் அம்மாவும் இவனுக்குச் செல்லமாக இட்ட பெயர் ஜெகதீஸ்வரன். குடும்பத்தில் 3 ஆண்களும் 4 பெண்களுமாக 7 உடன்பிறப்புகளுக்குப் பின்பு, இவன் பிறந்தான். இவனுக்குப் பின்பு ஒரு தங்கை. எவருடனும் அதிகம் பேசாத சுபாவமுடைய ஜொனி, ஆடம்பர வாழ்வு முறைக்கும் புறம்பானவனாக இருந்தான்.

மீசாலை இவனது ஊர். வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற இவனுக்கு, சமூகத்திற்குச் சேவை செய்ய வெண்டும் என்ற சிந்தனையும், ஆர்வமும் இயல்பாகவே இருந்தன. சின்ன வயதிலிருந்தே பொது வேலைகளில் ஈடுபடுவான்.

மீசாலையின் புழுதி படிந்த தெருக்களில், வயல் நிலங்களில், தோட்ட வெளிகளில்... எங்கும் அவனது சேவை பரந்திருந்தது.

பாடசாலையில் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் திறமைமிக்கவனாக ஜொனி இருந்தான். அங்கு மாணவர் தலைவனாக இருந்த அவன், திறமையான செயற்பாடுகளுக்காகப் பரிசுகளும் பெற்றிருக்கிறான்.

இந்திய இராணுவம் எமது தாயகத்தை ஆக்கிரமித்திருந்த அந்தக் காலம், இவனுக்குள் ஒரு புயலையே வீசச் செய்தது. இயல்பாகவே மக்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்ற சுபாவமுடையவனாக இருந்த ஜொனி, அன்றைய நெருக்கடியான நாட்களில், ஊரில் எமது போராளிகளுக்கு உற்ற துணையாக நின்றான்.

வீட்டாரிற்கும் வெளியாட்களுக்கும் தெரியாமல், மறைமுகமாக இயக்கத்திற்கு வேலை செய்துகொண்டிருந்த ஜொனி, 1989 இன் முற்பகுதியில் போராட்டத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டான்.

இரணைமடுவில் வன்னியின் அடர்ந்த காடுகளின் நடுவில் தனது பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய இவனுக்கு, எல்லாப் புலிவீரர்களுக்கும் இருப்பதைப் போல, சண்டைக்குப் போகவேணும் என்ற ஆசை இருந்தது.

ஆனாலும், இயக்கம் அரசியல் வேலைகளை வழங்கியபோது, திறமையுடன் அதனைச் செய்யத் தொடங்கினான்.

எங்கள் தேசத்தில் 1991 ஆம் ஆண்டின் சிறப்பான நிகழ்வு அதுதான்.

ஆனையிறவுப் பெருஞ்சமர்...

அந்த நீண்ட சண்டைகளின்போது, ஜொனி உயிர்த்துடிப்புடன் களங்களில் போரிட்டான்.

அந்தச் சமரின் இறுதி நாட்களில் ஒன்று. ஒரு மாலை நேரம் ஐந்து மணிப் பொழுது. எங்கள் காவலரணிற்கு வந்த ஜொனி எம்மோடு மகிழ்ச்சியாகக் கதைத்துக்கொண்டிருந்தான். நீண்ட நேரம் அன்பான உரையாடல். நேரம் போனதே தெரியவில்லை. இருண்டுவிட்டதால் தனது காவலரணிற்குப் போவதற்காக எழுந்தான்.

தட்டுவன்கொட்டிப் பகுதியில் இவனது அரண்கள் இருந்தன. அப்பகுதியின் பொறுப்பாளனாகவும் இவன்தான் இருந்தான்.

எழுந்தவன், திரும்பிச் சொன்னான்...

“என்ர பொயின்ரைக் கடந்து ஆமி வாறதெண்டால் என்ர உடம்புக்கு மேலாலதான் வருவான்”

அவன் சொல்லிவிட்டுப் போனபோது நாங்கள் எவருமே அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

அன்று இரவு கடந்து மறுநாள் விடிந்து விட்டது. நேரம் ஓடியது. காலை 11 மணியை நெருங்கியபோது விமானங்கள் இரைய, குண்டுகளை அதிரச் சண்டை தொடங்கிவிட்டது.

ஜொனியின் காவலரண் பகுதியை நோக்கி படை நகரத்துவங்கியது. வானிலிருந்து குண்டுகள் பொழிய, எறிகணைகள் கூவிவர, கனரக வாகனங்கள், கனரன ஆயுதங்கள் சகிதம் எதிரி மெல்லமெல்ல முன்னேறினான். அது ஒரு கடுமையான மூர்க்கத்தனமான சண்டையாக இருந்தது. தங்களில் சிலர் பிணங்களாய்ச் சரிய, எதிரி அங்குலம் அங்குலமாக நகர்ந்து வந்தான். அந்த நீண்ட சண்டை முடிந்த போது... எங்கள் ஜொனி... அவன் வரவில்லை. இன்றுவரை அவன் வரவேயில்லை முதல்நாள் எம்மிடம் அவன் சொல்லிவிட்டுப் போனதைப் போல ஆனால், அவனோடு பழகிய அந்த இனிய நாட்களின் நினைவுகள் என்றும் எம்மோடு பசுமையாய் வாழும். இந்த இலட்சியப் பயணத்தில் அவனது நினைவுகள், எம்மோடு துணையாய் வரும்.



விடுதலைப்புலிகள் - சித்திரை 1993






# வடக்கு கிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்காதே! சங்கானையில் போராட்டம்

ஏப்ரல் 01, 2023

வட கிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளைக் கண்டித்தும் அதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் மாபெரும் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சங்கானைச் சந்தியில் இன்றைய தினம் சனிக்கிழமை காலை இப் போராட்டம் நடைபெற்றது.

இதன் போது வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து, கிண்ணியா எங்கள் சொத்து, நெடுந்தீவு எங்கள் சொத்து, கச்சதீவு எங்கள் சொத்து, அழிக்காதே அழிக்காதே தமிழினத்தை அழிக்காதே, தொல்லியல் திணைக்களமே வெளியேறு, வெளியேறு வெளியேறு படைகளே வெளியேறு, எங்கே எங்கே உறவுகள் எங்கே, தமிழர்களின் தீர்வு சுயாட்சியே, எடுப்பது பிச்சை அறுப்பது எங்களின் கழுத்தையா உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ல் தாங்கியவாறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








# 14 வருடங்களின் பின்னர் குற்றமற்றவர்கள் என மூன்று தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை!

ஏப்ரல் 03, 2023

14 வருடங்களாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 தமிழ் அரசியல் கைதிகள் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் இன்றைய தினம் திங்கட்கிழமை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் இருந்த யாழ்ப்பாணம் வேலணையை சேர்ந்த இ.திருவருள் (வயது 45), கரவெட்டியை சேர்ந்த ம. சுலக்சன் (வயது 34), முள்ளியவளையை சேர்ந்த க. தர்சன் (வயது 33) ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூப்பிக்கப்படாத நிலையில், குறித்து மூவரையும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் விடுவித்து, அவர்களை விடுதலை செய்தார்.

மூன்று அரசியல் கைதிகள் சார்பிலும் மன்றில் முன்னிலையான சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து விளக்கமறியலிலும், தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டிருந்த மூவரும் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக சதித் திட்டம் தீட்டிய குற்றம் இவர்களுக்கு எதிராக சாட்டப்பட்டிருந்தது. இவர்கள் ஏற்கனவே வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியற்றது என நீதிமன்றம் தீர்மானித்தது.



அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன. அந்த சாட்சியங்கள் இவர்களது குற்றத்தை நிரூப்பதற்கு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூப்பிக்கப்படவில்லை. இதன் காரணமான அனைத்து குற்றங்களிலும் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றம் முன்பாக வருகை தந்திருந்த தமது குடும்பத்தினருடன் கட்டியணைத்து தமது மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் வெளிப்படுத்தியதுடன் தமது விடுதலைக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

# கருநாட்டுக்கேணி தமிழர் காணிகளில் சிங்களக் குடியேற்ற முயற்சி தமிழ் மக்கள கடும் எதிர்ப்பு!

ஏப்ரல் 03, 2023



முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசச்செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியிலுள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்களக்குடியேற்றம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினாலேயே இந்த சிங்கள குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் அவ்வாறு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை பார்வையிடுவதற்கு, மகாவலி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் 03.04.2023 இன்று கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு வருகைதந்திருந்தனர்.

இந் நிலையில் குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டிற்கு முன்னாள் வடமாகாணசபை துரைராசா ரவிகரன் மற்றும், காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

கடந்த 1973, 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட இக் காணிகளில் தாம் குடியிருந்ததுடன், பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டு வந்ததாகவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

தமது பூர்வீகமான இக்காணிகளில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோது இடமளிக்க முடியாதெனவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப்பாசன வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்குச்சொந்தமான மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்புச்செய்து அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்களை மேலும் அதிர்ப்திக்குள்ளாக்குவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி பொதுமக்களின் காணியில் புத்தர் சிலை நிறுவ முயற்சி!

ஏப்ரல் 03, 2023

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்மாலைக் குடா பகுதியில் பௌத்த மதகுருக்களால் சிறுபான்மை இன மக்களின் காணிக்குள் அத்துமீறி அடாத்தாக புத்தர் சிலை வைக்க முற்பட்ட போது அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியுள்ளது.

குறித்த சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம் பெற்றுள்ளதுடன் ஒரு வாரகாலமாக இந்த நிலமை தொடர்ந்தும் இடம் பெற்று வருகிறது.

குறித்த காணிக்குள் நுழைந்த பௌத்த மதகுரு தனது மெய்ப்பாதுகாவலுடன் சென்றிருந்த வேலையில் பொது மக்களை மெய்பாதுகாவலர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் செய்துள்ளார்.

புல்மோட்டை அரிசி மலை விகாரையினை சேர்ந்த பௌத்த மதகுருவே இவ்வாறான சண்டித்தன வாய்த் தகராறில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.





# தமிழர்களின் எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்க நாம் எந்த எல்லைக்கும் போகத் தயார்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஏப்ரல் 03, 2023

தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்களைப் பாது காப்பதற்கு தாம் எந்த எல்லைக்குப் போகவும் தயாராக உள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராங்களில் ஒன்றான முல்லைத்தீவு - கருநாட்டுக்கேணியில் தமிழர்களின் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் மேற் கொள்ளும் முயற்சிஒன்று 03.04.2023இன்று மேற் கொள்ளப்பட்டது.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப் பகுதித் தமிழ் மக்களும், ரவிகரனும் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் பூர்வீக எல்லைக் கிராமமான கருநாட்டுக்கேணித் தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளை ஆக்கிரமிப்புச் செய்து அங்கு சிங்களக் குடி யேற்றம் மேற்கொள்ளும் முயற்சிகள் தற்போது முனைப் புப் பெற்றுள்ளன.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள, தமிழ் மக்களின் பூர்வீக காணி களை அபகரித்து அங்கு 180சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான முயற்சிகள் இங்கு இடம்பெறுவதாக அறிகின்றோம்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரான கீர்த்தி தென் னக்கோன் என்னும் நபருடைய வழிகாட்டுதலின் அடிப் படையில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையே இந்த சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட் டுள்ளது.

இந்தப் பகுதிகளிலுள்ள காணிகள் அனைத்திலும் எமது தமிழ்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்துவந்தனர்.

இந்நிலையில் கடந்த 1973மற்றும், 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் அவர்களுடைய கைகளிலே இருக் கின்றன.

இந்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி எனப்படுகின்ற இந்த எல்லைக் கிராமங்கள், பூர்வீக பழந்தமிழ் கிராமங்களாகும்.

இங்கு வாழ்ந்த மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளிலிருந்து சிங்கள இனவெறி இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்டபின்னர் இங்குள்ள தமிள் மக்கள் நெற்பயிற்செய்கைக்காக பயன்படுத்திய நீர்ப் பாசனக்குளங்கள் அவற்றின் கீழான வயல் நிலங்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந் நிலையில் தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டுக்கு முன்னர் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்திய உந்திராயன் குளம், மறிச்சுக்கட்டிக்குளம், ஆமையன்குளம் ஆகிய குளங்களையும் அவற்றின் கீழான வயல் நிலங்களையும் தற்போது சிங்களவர்களே பயன்படுத்தி வருகின்றார்கள்.

இதுதவிர தமிழ் மக்களுடைய மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக் கப்பட்டுவருகின்றது.

அத்தோடு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணித் தமிழ்மக்கள் தமது மானாவாரி விவசாய நிலங் களில் பயிற்செய்கை நடவடிக்கை செய்யும்போது மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் போன்ற அரச திணைக் களங்களால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சிங்கள மக்களாலும் கூட இடையூறுகள் ஏற்படுத்தப் படுகின்றது.

எமது எல்லைக்கிராமங்களிலுள்ள தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும்பான்மையினத்தவர்களால் தாக் கப்படுவதும், தமிழர்ளுடைய கால்நடைகள் திருடப்படு கின்ற சம்பவங்கள் கூட ஒருபுறம் இடம்பெறுகின்றன.

இவ்வாறாக எல்லைக்கிராமங்களிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பலவித அழுத்தங்களுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர்.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடி யிருப்புக்காணிகளில் கூட சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளின் ஊடாக, இங்கு வாழும் ஆதிக்குடிகளான தமிழ் மக்களை முற்று முழுதாக அப்புறப்படுத்திவிட்டு, தமிழர்களின் எல்லைக் கிராமங்களில் சிங்களவர்களை குடியேற்றவேண்டும் என்ற நோக்குடனேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்த ஆக்கிரமிப்பு முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எமது தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக்கிராமங் களை பாதுகாப்பதற்கு நாம் எந்த எல்லைக்கும் போகத் தயாராக உள்ளோம் - என்றார்.

# "சிவதோஷம் – குல நாசம்" நாடு நாசத்தை நோக்கி செல்லும்– சிறீதரன்

ஏப்ரல் 04, 2023

இனவாதத்தின் உச்சம் தமிழர்களின் மத உரிமைகளை யும் விட்டு வைக்கவில்லை. சிவ தோஷம்-குல நாசம் என்ற வாக்குக்கு அதிக பலம் உள்ளது, சிவன் மீது கை வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கி செல்லும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான கட்டளைச்சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வவுனியா வெடுக்குநாறி காட்டுப்பகுதியில் தமிழ்ர்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த ஆதிலிங்கேஷ்வர ஆலயத் தின் சிவலிங்கங்கள் விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட் டுள்ளன.

அம்மன் விக்கிரகத்தின் கழுத்து பகுதி வெட்டப்பட்டு வீசியெறியும் அளவிற்கு இந்த நாட்டில் இனவாதம் மேலோங்கியுள்ளது.

ஒரு இனத்தினர் காலம் காலமாக கடைபிடித்த மத நம்பிக் கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறை வடையவில்லை. தமிழர்களின் இருப்பும்,சைவத்தின் இருப்பும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது கவலைக் குரியது.

முல்லைத்தீவு குருந்தூர் மலை பகுதியில் இருந்து சிவ சின்னங்கள், சூலம் மற்றும் சிவலிங்கம் பெரும்பான்மை சமூகத்தால் அழிக்கப்பட்டது.

குருந்தூர் மலையில் விகாரை நிர்மாணிக்கும் பணி களுக்கு முல்லைத்தீவு மாவட்டம் பல தடவைகள் தடை உத்தரவு பிறப்பித்தும், நீதிமன்றத்தை மதிக்காமல் விகாரை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் மாத்திரமே நீதிமன்றங்கள் சுயாதீனமாகவும், தைரியமாகவும் செயற்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் பிறப்பிக்கும் உத்தரவை எவரும் குறிப்பாக பெரும் பான்மை தரப்பினர் மதிப்பதும் இல்லை, செயற்படுத் துவதுமில்லை.

வவுனியா வெடுக்குநாறி பகுதியில் தமிழர்கள் 1957 ஆம் ஆண்டு காலமும் சிவ வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இந்த பகுதி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லை அத்துடன் தொல்பொருள் அளவையியல் வரை புக்குள் உள்வாங்கப்படவில்லை, இவ்வாறான பின்னணி யில் இந்துக்களின் மத உரிமைகளுக்கு தொல்பொருள் திணைக்களம் இடையூறு விளைவிப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இனவாதம் மற்றும் பௌத்தவாதம் பற்றி மேலோங்கி கருத்துரைக்கின்ற தரப்பினர் தான் ஆதிலிங்கேஷ்வரர் ஆலயத்திற்கு தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள். தமிழர்களின் காணி உரிமையும் பறிக்கப்படுகிறது, மத உரிமைகளும் பறிக்கப்படுகிறது.

'சிவன் தோசம் - குல நாசம்' என்ற வாக்குக்கு இந்துக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது. சிவன் தலையில் கை வைக்கப்பட்டுள்ளது, ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கி செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. உள்ளக பொறிமுறை ஊடாக தீர்வு காண்பதாக சர்வதேசத் திற்கு பொய்யுரைத்து விட்டு,பன்னாட்டையும் ஏமாற்றும் செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகிறது.

உடைக்கப்பட்ட சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்களை மீள் அமைப்பதாக இரு அமைச்சர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை வெடுக்குநாறி பகுதிக்கு விஜயம் செய்தார்கள். இந்த விவகாரம் சட்ட விசாரணைக்கு உட்பட்டுள்ளது, ஆகவே சட்டத்தின் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டு விட்டு திரும்பி விட்டார்கள்.



உடைக்கப்பட்ட சிலைகள் மற்றும் சிவலிங்கத்தை மீள் அமைப்பதற்கு எவ்வித சட்ட தடைகளும் காணப்பட வில்லை. உண்மையில் இந்த அமைச்சர்கள் ஆடையுடன் திரிகிறார்களா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரிமுனை பகுதியில் 100 ஹேக்கர் காணி இறால் பண்ணை செய்கைக்காக அளக்கப்படுகிறது. 3700 ஆண்டுகாலமாக கௌதாரி முனை பகுதியில் வாழும் தமிழர்கள் இந்த செயற்பாட்டுக்கு கடுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவிகரித்து சிங்கள குடியேற்றத்தை அமைக்கும் அரசாங்கத்தின் நோக்கத் திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல் வாதிகள் துணை செல்வது கவலைக்குரியது என்றார்.

# தொல்பொருள் திணைக்களம் கடும் இனவாத கொள்கையுடன் செயற்படுகிறது!

## செல்வராசா கஜேந்திரன்

ஏப்ரல் 05, 2023

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம் சிங்கள மயமாக்கலுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இது தொல்பொருள் திணைக்களமல்ல, கடும் இனவாத போக்கான திணைக்களம். முப்படைகளின் ஆதரவுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இருப்புக்கள் இல்லாதொழிக்கப்படுகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான கட்டளைகள் மீதான விவாதத்தின் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் இருப்பையும், அடையாளங்களையும் அழிக்கும் வகையில் சிங்கள குடியேற்றங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. வடக்கில் கருநாட்டுக்கேணி பகுதியில் சிங்கள குடியேற்றத்தை அமைக்க மகாவலி அதிகார சபை மேற்கொண்ட முயற்சிக்கு தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாற்றுப்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் பருவகால மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது வழமை. ஆனால் தற்போது இவர்களுக்கு நாயாறு கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் சொந்த வீடுகளை தமிழ் நிலங்களை ஆக்கிரமித்து கட்டிக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.இந்த செயற்பாடு தமிழரின் இன பரம்பலை முழுமையாக அழிக்கும்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஷ்வரர் ஆலயம் 5000 ஆண்டுகால புராதன தொன்மையை கொண்டுள்ளது. ஆரம்ப கால தமிழர்கள் சிவ வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த மலையின் சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்கள் அழிக்கப்பட்டு தற்போது வழிபாடுகளுக்கும் தடையேற்படுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள வெடியரசன் கோட்டை தமிழரின் பாரம்பரியத்தை பறைசாற்றும் தொன்மையை கொண்டுள்ளது ஆனால் தற்போது இந்த கோட்டையை பௌத்தத்துடன் தொடர்புப்படுத்தி தொல்பொருள் திணைக்களம் பொய்யான அறிவிப்புக்களை விடுத்துள்ளது. மறுபுறம் கச்சத்தீவும் சிங்கள மயமாக்கத்தில் இருந்து விடுபடவில்லை.

யாழ்ப்பாணம் தம்பாட்டி கிராமத்தின் காணிகள் கடற்படைக்கு கையளிக்கும் முயற்சிகள் மக்கள் போராட்டத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. முப்படைளின் ஆதரவுடன் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட வகையில் சிங்கள மயமாக்கப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் புல்மோட்டை பகுதியில் முஸ்லிம் சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழும் பொன்மலைகுடா பகுதியில் புத்தர் சிலை வைக்கும் முயற்சிகள் பெரும்பான்மை தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போது அப்பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தியுள்ளார்கள். அவ்விடத்தில் இருந்து பிக்குகளின் மெய்பாதுகாவலர்கள் பொது மக்களை துப்பாக்கியை காண்பித்து அச்சுறுத்தியுள்ளார்கள். பௌத்த பிக்குகளுக்கு துப்பாக்கி ஏந்திய மெய்பாதுகாவலர்களை வழங்கியது யார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.



நாட்டில் புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்காமல் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒத்துழைப்பு வழங்குகிறது சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு தமிழ் முஸ்லிம் சமூகத்தை முழுமையாக கருவறுக்கும் செயற்பாடுகள் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகிறது.

சரத் வீரசேகர கடும் இனவாத பொய்களை சபையில் குறிப்பிட்டுள்ளார். குருந்தூர் மலையில் மனசாட்சி இல்லாமல் இந்து மத அடையாளங்கள் அழிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களம் என்பது பௌத்தர்களின் அடையாளங்களை மாத்திரம் பாதுகாப்பது அல்ல என்பதை பொறுப்பான அமைச்சர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆகவே தொல்பொருள் திணைக்களத்தை முற்றாக வெறுக்கிறோம் இது இனவாத திணைக்களம் நாங்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல ஆகவே இனவாத தலைவர்களை தெரிவு செய்வதை சிங்கள மக்கள் இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# அநீதிகளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் தடுக்க வேண்டும்!

நல்லை ஆதின முதல்வர்

ஏப்ரல் 05, 2023

சைவ சமயத்திற்கும் தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகளை தென்னிலங்கை அரசியல் வாதிகள் தடுத்து நிறுத்தவேண்டும் என நல்லை ஆதின முதல்வர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாது விடின் வடக்கு விஜயத்தின் போது சைவதலைவர்கள் சந்திப்புக்களை தவிப்பார்கள் மேலும் இந்தியா ஆதி சமயமான சைவத்தையும், சைவ ஆலயங்களையும் பாதுகாக்க முன்வரவேண்டும் என வைவ சமய அமைப்புக்கள் தீர்மானம் எடுத்துள்ளதாக அறிவித்துள்ளார்கள் எனத் தெரிவித்து நல்லை ஆதின முதல்வர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சைவ சமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள். கோவில் நிர்வாகத்தினைச் சேர்ந்த ஆகியோரால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், ஆதீன முதல்வரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாக இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராக இனரீதியான, மதரீதியான கலாச்சார ரீதியான ஒடுக்கு முறைகள்.

தமிழ் பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் தென்னிலங்கை அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தமிழ் மக்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தலைமைகள் பல தடவைகள் இதற்கெதிராகக் குரல் எழுப்பி வந்தும் இதற்கான தீர்வுகள் இலங்கை அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளுக்குப் பின் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை உருவாக்கப்பட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் தமிழர்களின் பூர்வீக தாயகம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு சில அதி காரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக அமுல்படுத்தப் படவில்லை.

அத்துடன் கொடுக்கப்பட்ட அதிகாரங்களும் இலங்கை அரசால் மீளப்பெறப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களை அடிமையாக்கும் முயற்சியாகவே நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மற்றும் ஆயுதப் போராட்டம் நிறைவடைந்த பின் வடக்குகிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர் தாயகப்பகுதிகளில் தமிழர் அல்லாதோரை மிக வேகமாகக் குடியேற்றுவதும், தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள்.

கோவில்களை அழிப்பதும், தொல்பொருட் திணைக்களம், வனவளத்திணைக்களம், வனஜீவராசித் திணைக்களம் போன்றவற்றினூடாக தமிழ் பகுதிகளில் உள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதும் மிகவேகமாக நடைபெறும் அன்றாட நிகழ்வுகளாக நாம் கருதுகிறோம்.

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு தமிழர் தரப்பால் பலதரப்பட்ட முறைப்பாடுகள் செய்தும், நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுத்தும் எந்தவித பயனையும் நாம் அடையமுடியவில்லை.

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பாக நீதி வழங்கும் முறைமையில் தமிழ் மக்களுக்கு பாரிய சந்தேகம் நிலவுகின்றது. ஒரேநாடு ஒரேசட்டம் என்ற கொள்கை பின்பற்றப்படுவதில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்கிறார்கள்.

இலங்கையில் மதமாற்ற தடைச்சட்டம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

சமீபத்தில் கிறீஸ்தவ போதகராகிய சக்திவேல் ஆனையிறவில் நடராசர் வடிவ சிலை வைக்கப்பட்டதைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டதுடன் சிவபூமியாக வடக்கு கிழக்கை சிலர் ஆக்க முயற்சி செய்கிறார்கள் என எள்ளி நகையாடியமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.



இலங்கைக்குரிய ஒரு சைவத்தமிழ் பெயர் சிவபூமி. அவரது கூற்றை சபையினர் முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தியா ஆதிச்சமயமாகிய சைவசமயத்தையும் சைவாலயங்களையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தென்னிலங்கையில் இருந்து வரும் அரசியல் தலைவர்கள் மேற்குறித்த பிரச்சினைகளுக்கு பதில்தராவிடில் அவர்கள் வடக்கே வரும் போது அவர்களின் சந்திப்புக்களை சைவசமயத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும். மேற்குறித்த தீர்மானங்கள் யாவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயம் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை வந்தடைய உள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு,தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம் பௌத்த மயமாக்கலுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவும் அவர் தெரிவித்தார்.

# ஊர்காவற்துறை தம்பாட்டிப்பகுதியில் கடற்படைக்கு காணி சுவீகரிப்பு முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது!

ஏப்ரல் 4, 2023

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அப்பகுதி மக்களின் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது.





தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமை நிரந்தமாக அமைக்க நாரந்தனை வடக்கு ஜே/56 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணியை சுவீகரிக்க காணியை அளவீடு செய்யும் பணி இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நில அளவையாளர் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களால் போராட்டம் நடத்தினர்.

காணியை அளவீடு செய்ய வருகை தந்த நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

# ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் மணற்கேணி எல்லைக்கிராமம் காணிகளைத் துப்பரவாக்க அனுமதி கோரும் காணி உரிமையாளர்கள்!

ஏப்ரல் 06, 2023

ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களில் ஒன்றான, முல்லைத்தீவு - மணலாறு, மணற்கேணிப் பகுதிக்குரிய தமிழ் மக்கள் சிலர், மணற்கேணிப் பகுதியிலுள்ள தமது காணிகளை துப்பரவுசெய்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி தருமாறு முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தைக் கோரியுள்ளனர்.

அந்தவகையில் மணற்கேணிப்பகுதி காணி உரிமையாளர்கள் சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகைதந்து, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரனை 06.04.2023இன்று சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.



குறித்த கலந்துரையாடலின்போதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் ஊடாக, காணி ஆவணங்களைச் சமர்ப்பித்து, காணிகளைத் துப்பரவுசெய்வதற்குரிய கோரிக்கையினை மாவட்டசெயலகத்திற்கு வழங்கும்போது, அதற்குரிய அனுமதியை விரைவாக வழங்க முடியுமென முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மணலாறு - மணற்கேணி கிராமம் என்பது, தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் ஊடறுத்துப் பாய்கின்ற பறையன் ஆற்றிற்கு அருகே அமைந்துள்ள வடக்கிற்குரிய, தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமமாகும்.

மணற்கேணிப் பகுதியில் கடந்த 1984ஆம் ஆண்டிற்கு முன்னர் 36தமிழ் குடும்பங்கள் பூர்வீகமாக இருந்ததாகவும், இதனைவிட குறித்த பகுதியில் 200இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுக்கு வயல் நிலங்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அந்தவகையில் 1984ஆம் அண்டிற்கு முன்னர் மணற்கேணிப் பகுதியில் பாரிய கால்நடை மற்றும், விவசாயப் பண்ணைகளுடனும், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்பவற்றுடனும் இங்கு வாழ்ந்த மக்கள் மிகவும் செளிப்பாக வாழ்ந்தார்கள் எனக் கூறப்படுகின்றது.

இவ்வாறு செழிப்பாக வாழ்ந்த மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இராணுவத்தினரால் இப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

இந் நிலையில் தற்போது மணற்கேணி உள்ளிட்ட எல்லைக்கிராமங்களில் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கள் மிகத் தீவிரமாக முனைப்புப் பெற்றுள்ளன.

இவ்வாறான சூழலில் கடந்த 26.03.2023 அன்று மணற்கேணி உள்ளிட்ட எல்லைக் கிராமங்களுக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கொக்குத்தொடுவாய் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து கள ஆய்வு ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கள ஆய்வின்போது மணற்கேணி உள்ளிட்ட எல்லைக்கிராமங்களில் பௌத்த மயமாக்கல் மற்றும், சிங்கள ஆக்கிரமிப்புமுயற்சிகள் தீவிரப்படுத்தப்படுவதும் இனங்காணப்பட்டது.

குறிப்பாக மணற்கேணி மற்றும், அதனை அண்டிய எல்லைக்கிராமங்களில் உள்ள தமிழர்ளின் பூர்வீக காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் துப்பரவு செய்யப்படுவதும், தமிழர் வழிபாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டிருப்பதும், தமிழர்களின் பூர்வீக தொல்பொருள் எச்சங்கள் உள்ள இடங்கள் விகாரைக்குரிய இடங்களாக கூகுள் வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளமையும் இனங்காணப்பட்டிருந்தது.

அதன்படி மணற்கேணி மற்றும் அதனை அண்டிய எல்லைக்கிராமங்களிலுள்ள தமிழர்களின் வரலாற்று எச்சங்கள் உள்ள இடங்கள் அக்கரவெலிய விகாரை, வண்ணமடுவ விகாரை, மகாப்பிட்டிய விகாரை என விகாரைக்குரிய இடங்களாக கூகுள் வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில் இவ்வாறாக பௌத்த, சிங்கள ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் மணலாறு - மணற்கேணி எல்லைக்கிராமத்திற்குரிய மக்கள் சிலரே இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து, முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு வருகைதந்து தமது காணிகளைத் துப்பரவுசெய்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி கோரியிருந்தனர்.




இக்கலந்துரையாடலில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், கொக்குத்தொடுவாய் மத்தி கமக்கார அமைப்புத் தலைவர் கிருஸ்ணபிள்ளை சிவகுரு ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடல் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெறுவதற்கு முன்பு மணற்கேணி என்னும் இடத்திலே மத்திய தரத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளுடைய உரிமையாளர்களில் சிலர் வருகை தந்திருந்தனர்.

குறித்த காணிகளைத் துப்பரவுசெய்து பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த செயற்பாடுகளை, கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் தான் மேற்கொள்ளவேண்டும்.

எனவே கரைதுறைப்பற்று பிரதேசசெயலகம் ஊடாக, காணி ஆவணங்களைச் சமர்ப்பித்து, காணிகளைத் துப்பரவுசெய்வதற்குரிய கோரிக்கையினை மாவட்டசெயலகத்திற்கு வழங்கும்போது, நாம் அதற்குரிய அனுமதியை விரைவாக வழங்கி, குறித்த காணிகளில்பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடியதாக இருக்குமென அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

இதுதவிர வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சிலர் சட்ட விரோதமான முறையில் மணற்கேணிப் பகுதியில் காணி துப்பரவு செய்வதான முறைப்பாடும் எமக்குக் கிடைத்துள்ளது.

எனவே நாம் அதுசம்பந்தமாகவும், குறித்த கரைதுறைப்பற்று பிரதேசசெயலகத்திற்கு அறிவித்தல் வழங்கி, அவ்வாறான நடவடிக்கைகள் இருப்பின், நாம் அவ்வாறான செயற்பாடுகளுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் - என்றார்.

# திருகோணமலை திருக்கடலூர் தமிழ் மக்கள் மீது சிங்கள குடியேற்ற வாசிகள் தாக்குதல்!

ஏப்ரல் 06, 2023



திருகோணமலை, திருக்கடலூர் மற்றும் விஜிதபுர கிராம தமிழ் மக்கள் மீது சிங்கள குடியேற்றவாசிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலை கட்டுப்படுத்தும் முகமாக அங்கு காவல்துறை மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள இனத்தவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கடற்பரப்பில் தமிழ் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து அப்பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் மோதல் மூண்டிருந்தது.

தமிழ் மீனவர்களை இலக்கு வைத்து சிங்கள மீனவர்கள் காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் ஆதரவுடன் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

விஜிதபுர என்ற சிங்கள குடியேற்றத்திலுள்ளவர்களே திருகடலூர் என்ற தமிழ் கிராமத்தினை சேர்ந்த தமிழ் மீனவர்கள் மீது கல் வீசி தாக்கியதில் திருகடலூரை சேர்ந்த தமிழ் மீனவர்களே காயம் அடைந்துள்ளனர்.

# நான்கு பிள்ளைகளுக்கு மேல் பெறுபவர்களுக்கு ஊக்க தொகை வழுங்கும் செயற்திட்டத்தை சைவ மகா சபை ஆரம்பித்துள்ளது!

ஏப்ரல் 06, 2023




நான்கு பிள்ளைகளுக்கு மேல் பெற்று, தமிழில் பெயர் வைக்கும் தம்பதியினருக்கு ஊக்க தொகை வழுங்கும் செயற்திட்டத்தினை சைவ மகா சபை பங்குனி உத்தர நாளான நேற்றைய நாள் புதன்கிழமை ஆரம்பித்துள்ளது.

அந்நிலையில் சமய, சமூக, மது ஒழிப்பு செயற்பாடடாளரான சாந்தை பண்டதரிப்பை சார்ந்த கடம்பன் அசுவினி தம்பதியினர் ஐந்தாவது குழந்தையான சிவாத்மிகலனை பெற்றெடுத்தமைக்காக ஊக்க தொகை மற்றும் சத்துமா என்பன சைவ மகா சபை தலைவர் சண்முகத்தினத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

5 வருடங்களிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் கொரோனா பொருளாதார நெருக்கடியால் சிறிது காலம் தடைப்பட்டு இருந்தது.

இத்திட்டத்திற்கு பங்களிக்க விரும்பும் நல்லுள்ளங்கள் சைவ அறப்பணி நிதிய வங்கி கணக்கு ஊடாக உதவ முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை பச்சனூர் மலையில் பௌத்த ஆக்கிரமிப்புக்குள்ளாகும் 200 வருட பழமையான பிள்ளையர் ஆலயம்!

ஏப்ரல் 07, 2023

திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள 64 ஆம் கட்டை மலையில் (பச்சனூர் மலை) அமைத்து வரும் பௌத்த விகாரைகள், அம்பாள் வழிபாட்டு எச்சங்கள் இருந்த இன்னொரு பகுதியும் இன்று (07) பௌத்த துறவிகளால் விசேட பூசைகள் நடைபெற்றதாக மூதூர் இந்து மத குருமார் சங்கத் தலைவர் பாஸ்கர சர்மா தெரிவித்தார்.





200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் மலையின் மீது பௌத்த விகாரை அமைத்து அங்கு அம்பாள் வழிபாடுகள் நடைபெற்றதற்கான எச்சங்கள் காணப்பட்ட இடத்தை இந்துக்களுக்கு வழங்குவதாக ஏற்கனவே ஒப்புக்கொண்ட பௌத்த துறவிகள் இன்று அப்பகுதியை சுத்தம் செய்து கிரியைகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

மேலும் 2 வருடத்திற்கு முன் இவ்விடத்திற்கு வந்தவர்களுக்கு அனுமதி வழங்கி விகாரை அமைக்கப்படுகிறது.



200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலயத்தை கட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் விசனம் தெரிவித்தார்.

# தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கு மக்களின் பரம்பரை காணிகள் அபகரிப்பு!

## சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

ஏப்ரல் 12, 2023

தொல்பொருள் தொடர்பான நடவடிக்கைகளின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலங்காலமாக வாழ்ந்து வருபவர்களின் வீடுகள் மற்றும் அவர்களது விவசாய நிலங்கள் அபகரிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதாகவும் அது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திருகோணமலை அரிசிமலை, பொன்மலை குடா பிரதேசத்துக்கு சென்ற மதத் தலைவர்களுக்கு அமைச்சு பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளின் பாதுகாப்பு எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும் அவர் சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி எம்பி இம்ரான் மஹ்ரூப் கேள்வியொன்றை முன்வைத்த சந்தர்ப்பத்திலேயே அவரது கூற்றுக்கு ஆதரவாக ரவூப் ஹக்கீம் எம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்ரான் மஹ்ரூப் எம்பி தமது கேள்வியின் போது:

திருகோணமலை அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் பௌத்த பிக்கு ஒருவர் பௌத்த சிலையொன்றை வைக்க முற்பட்டார். இதன் போது ஏற்பட்ட சம்பவம் தற்போது சமூக வலைத்தலங்களில் வைரலாகி வருகிறது. இந்த மதகுருவுக்கு அமைச்சுப் பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள், அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தயும் உள்ளனர். மக்களின் எதிர்ப்பினாலே சிலை வைக்கும் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.

அத்துடன் தொல்பொருள் நடவடிக்கையின் போது எமது பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த மக்களின் வீடுகள், அவர்களின் விவசாய காணிகளும் அபகரிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. அது தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? என அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க, மேற்படி சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் கிடைக்கவில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து உங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

அத்துடன் தொல்பொருள் நடவடிக்கையின் போது ஏதாவது முறைகேடு இடம்பெற்றிருந்தால் அதுதொடர்பில் தகவல் வழங்கினால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ரவூப் ஹக்கீம் குறுக்கிட்டு, திருகோணமலை



அரிசிமலை பொன்மலை குடா பிரதேசத்துக்கு சில மதத் தலைவர்கள் அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளுடன் சென்றுள்ளனர். எதிர்ப்பு தெரிவித்த மக்களை நோக்கி துப்பாக்கிகளை நீட்டி அச்சுறுத்தியுள்ளனர்.

அமைச்சு பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் எந்த அடிப்படையில் மதத்தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியும்? எனவும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அமைச்சு பாதுகாப்பு பிரிவு, பௌத்த கலாசார அமைச்சுக்கு உட்பட்டதல்ல. அந்த கேள்வியை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடமே கேட்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு!

ஏப்ரல் 12, 2023

இந்திய இராணுவத்துக்கு எதிராக இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த தியாகி

அன்னை பூபதியின், உண்ணாவிரத அறப் போராட்டத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, உண்ணாநோன்பின் 25ஆம் நாளான இன்று புதன் கிழமை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பணியாளர்கள், மற்றும் விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

1988 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படைக்கு எதிராகக் குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு - அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது.

"உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்."

"புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்." ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மர நிழலில் 1988 மார்ச் 19ஆம் திகதி அன்னை பூபதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

மகாத்மா காந்தியின் அகிம்சை போராட்டாத்தால் விடுதலை பெற்ற பாரத நாடு என வரலாறு கூறப்படும் இந்திய நாடு, அன்னை பூபதியின் அகிம்சைவழி போராட்டத்தைக் கணக்கில் எடுக்கவில்லை.

அன்னை பூபதி நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.







கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45, மணிக்கு அன்னை பூபதி உயிர் நீத்தார்.

# அழிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் அத்திபாரங்கள் பிடுங்கப்படுகின்றனவா?

## முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. ஸ்ரீநேசன்

ஏப்ரல் 13, 2023

பௌத்த பிக்குகளின் கோரிக்கையில் படையினரின் பலப பிரயோகத்துடன் தமிழர் தாயக நிலங்களிலுள்ள கலாசாரப் பதிவுகள், படிமங்கள் அழிக்கப்பட்டு அகற்றப்பட்டு அவ் விடங்களில் புத்தர் சிலைகள், விகாரைகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

இதனை பௌத்த பிக்குகளின் கோரிக்கையில்,

தமிழர் தேச அத்திவாரங்களைப் பிடுங்குவது போல் கலாசார அழிப்புகளை திட்டமிட்டு மேற்கொள்கின்றனர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. ஸ்ரீநேசன் தெரிவித் துள்ளார்

மட்டக்களப்பில் வைத்து புதன்கிழமை (12.4.2023) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழர் களுக்கு எதிரான செயற்பாடுகளை சிங்கள அடிப்படைவாத ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர்.

தற்போது பாரிய தமிழின அழிப்பின் பின்னர், தமிழர் தேச அத்திவாரங்களைப் பிடுங்குவது போல் கலாசார அழிப் புகளை தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

தமிழின ஒடுக்கு முறையானது அச்சுறுத்தல், மிரட்டல், இன அழிப்பு, சொத்தழிப்பு, வெளியேற்றல், அகதிகளாக் கல், நாட்டை விட்டு அகற்றல், ஆக்கிரமித்தல், சிங்கள மயமாக்கல் என்ற பொறிமுறைகளில் நடைபெற்றன.

1948 இல் இருந்து இன்று வரை அப்பொறிமுறைகள் நடை பெறுகின்றன. 2009 இல் இன அழிப்புப் பொறி முறை அதியுச்சமாக நடை பெற்றது.

கடத்தல், கப்பம் பறித்தல்,காணாமல் ஆக்குதல், வதைத் தல் வன்புணர்வாடல், அழித்தல், சடலங்களைக் காணாமல் ஒளித்தல், சாட்சியங்களை அழித்தல், மிரட்டல் என்ற அடிப்படையில் அது தொடர்ந்தது. இப்படியாகத் தமிழர் தேசம் பேரின அராஜகர்களால் முடியுமான வரை அழிக்கப்பட்டது.

தற்போது அழிக்கப்பட்ட தேசத்தின் அத்திவாரக்கற்கள் பிடுங்கப்படும் இறுதிச் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்றன.

பௌத்தசாசன, மகாவலி, வனவள, வனசீவராசிகள் அமைச்சுகள் போன்றவற்றின் வழிப்படுத்தலில் தொல் லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வன வளத்திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம் போன்ற வற்றின் செயற்படுத்தலில், பௌத்த பிக்குகளின் கோரிக்கையில் படையினரின் பலப் பிரயோகத்துடன் தமிழர் தாயக நிலங்களிலுள்ள கலாசாரப்பதிவுகள் படிமங்கள் அழிக்கப்பட்டு அகற்றப்பட்டு அவ்விடங்களில் புத்தர் சிலைகள், விகாரைகள் அமைக் கப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் தமிழர்களின் விடுதலைப்புலிகள் என்ற பலமான சக்தி மௌனிக்கப்பட்டதன் பின்னர், சிங்கள பௌத்த மயமாக்கல் பொறிமுறை தீவிரமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

வவுனியாவில் வெடுக்கு நாறிமலை, முல்லைத்தீவில் குருந்தூர், மலை, மட்டக்களப்பில் குசலான மலை, நெலுக் கல் மலை, திருகோணமலை கன்னியா, கோணேஸ்வரர் ஆலயம், அம்பாறையில் சங்கமான்கண்டி, மாணிக்கமடு, கஞ்சி குடிச்சாறு போன்ற இடங்களில் தமிழர் கலாசார அத்திவாரங்களைப் பிடுங்கி எறிந்துவிட்டு சிங்கள பௌத்த கலாசாரத்தினை செயற்கையாக நடுகின்ற பலவந்தமான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அரசின் அதிகாரம், பௌத்த பிக்குகளின் ஆணை, படை யினரின் கெடுபிடிகள், அடக்கு முறைகள் மத்தியில் தொல் லியல் என்ற போர் வையில் ஆக்கிரமிப்புகள் நடை பெறுகின்றன.

தமிழர்கள் தமிழ்த் தேசியக்கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகள், மதத்தலைவர்கள் 24 மணித்தியாலம் களும் விழிப்புடன் இருந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் பலமான போரியல் சக்தி பலவீனமான பின்புதான் இப்படியான ஆக்கிரமிப்புகள் தீவிரம் அடைந் துள்ளன.

எனவே தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள்? என்பதற்கான நியாயத்தினை தற்போது பேரினவாதிகள் மீண்டும் இளைய சந்ததியினருக்கு வெளிக்காட்டி வருகின்றனர்.

தமிழ் இளைஞர், யுவதிகளை போராட்டத்தை நோக்கித் தள்ளியவர்கள் சிங்களப் பேரினவாதிகளேயன்றித் தமிழர்கள் அல்லர்.

தமிழர்களின் அகிம்சையான போராட்டத்தை சிங்கள அரசு ஒடுக்கியதால், இளைஞர்கள் அகிம்சையில் நம் பிக்கை இழந்து ஆயுதங்களை ஏந்த வேண்டி ஏற்பட்டது. இப்போது சிங்கள இனவாதம் அதனையே மீண்டும்



செய்து வருகின்றது. குட்டக் குட்ட குனிந்து கொடுப்பவன் மடையன் என்பார்கள்.

அன்று சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து முப்பதாண் டுகளாகக் குட்டுப்பட்ட தமிழர்கள் நிமிர்ந்த போது அது ஆயுதப் போராட்டமாக வெடித்தது என்பதை அதிகார வர்க் கம் மறக்கக் கூடாது. 2009 இன் பின்னர் மீண்டும் தமிழர் களுக்கு குட்டுகள் விழுந்த வண்ணம் உள்ளன.

14 ஆண்டுகளாக மீண்டும் குட்டுகள் தொடர்கின்றன. யுத்த சகதிக்குள் மறைந்து போன உண்மைகள் நீதிகள் இன் னும் வெளிக்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னும் வழங்கவில்லை.

அன்பின் வடிவான கௌதம புத்தரின் கிழக்கில் ஆக்கிரமிப் பின் அடையாளங்களாக மாற்றப்பட்டுள்ளன.அடுத்த தேர் தலுக்கான அடிப்படைவாத செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன.

சிங்கள பௌத்தத்தின் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் கலாசாரங்கள் பிடுங்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கல தீவிரமடைந்துள்ளன.

இணக்க அரசியல், அபிவிருத்தி அரசியல், மண்மீட்பு அர சியல் என்று புலம்பி பதவி சுகம், பணசுகம் அனுபவிக் கிறார்கள் தமிழின எடுபிடி அரசியல்வாதிகள். தினமும் போராட வேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப் பட்டுள்ளார்கள்.

அவர்களை மீண்டும் அடக்கி ஒடுக்குவதற்கும், பயங்கர வாதிகளாக சித்திரிப்பதற்கும் பயங்ரமான சட்டத்தைக் கொணர சிங்கள அதிகார வர்க்கம் துடிக்கிறது. அதற்குத் தலைகளாட்ட தமிழர் விரோதத் தமிழ் அமைச்சர்கள் தயாராகிவிட்டார்கள். அவர்களுக்கோ சலுகைகளில் கொண்டாட்டம், மக்களுக்கோ உரிமைக்கான போராட்டம் தொடர்கிறது. என தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் தொடர்கின்றன!

ஏப்ரல் 13, 2023

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர் களுக்கு எதிரான பல்வேறு அச்சுறுத்தல்களும் அடக்கு முறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இன்றையதினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் பல்வேறு தரப்பினராலும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன.

கடந்தகாலங்களில் ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு இதுவரையும் நீதி கிடைக்காமல் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இந்த நிலையில், சட்டரீதியாக அணுக வேண்டிய விடயங் களுக்கு ஊடகங்களுக்குள்ளே அத்துமீறி நுழைந்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்தை அச் சுறுத்துவதும் வன்முறையில் ஈடுப்படுவதும் மக்களின் குரலை நசுக்குவதற்கு சமனானது, இதை நான்




ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பல்வேறு நெருக்கடிக்குள் மக்களுக்காக தமது செயற் பாடுகளை முன்னெடுத்துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வதே அறம் ஆகும்.

மக்களுக்கான பணியை முன்னெடுத்துவரும் ஊடகங் களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் செயற்பாடுகளை நிறுத்து வதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழர் எம் மரபுரிமைகளை பாதுகாப்போம்!

ஏப்ரல் 13, 2023

தமிழர் எம் மரபுரிமைகள் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் அடையாள உண்ணாநோன்பு போராட்டத் திற்கும், தமிழர் தாயகம் தழுவிய கையெழுத்துப் போராட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பால் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள அறிக்கையில்,

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள நிர் மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத் தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2.குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப் படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றி யமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும் பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமை யான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக் கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற் பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்பு போராட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது.

எம் மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள்,

சமூக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்



கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக் கப்படும் இந்த எழுச்சி போராட்டத்தின் மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு, ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங் கப்படாவிடுத்து தொடர் போராட்டங்களை பல்வேறு பரிணா மங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது.

# யாழ். தீவுப்பகுதிகளை கையகப்படுத்தும் நோக்கில் தீவக அதிகார சபை!

ஏப்ரல் 14, 23

வடக்கில் உள்ள தீவுகளை இலக்கு வைத்து உருவாக்கப் படவுள்ள தீவக அதிகார சபையை தடுத்து நிறுத்தா விட்டால் பல மோசமான பின் விளைவுகளை வடபகுதி மக்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் எச்சரிக்கை விடுத்தார்.



யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி தீவுகளை கையகப்படுத்தும் நோக்கில் இலங் கையில் உள்ள தீவுகளை ஒரு அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதாக தெரிவித்து ஓர் அதிகார சபையை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றது.

வட பகுதியில் குறிப்பாக யாழ். குடாவில் 15க்கு மேற்பட்ட வளமான தீவுகள் காணப்படுகின்ற நிலையில் அதனை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவோ அல்லது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான திட்டத் தின் அடிப்படையில் குறித்த அதிகார சபையை உருவாக்க முயல்கிறார்கள்.

மகாவலி அதிகார சபையை உருவாக்கி எவ்வாறு சிங்கள குடியேற்றங்களை வடபகுதியில் ஏற்படுத்தினார்களோ அதே போன்று தீவக அதிகார சபையை உருவாக்கி தமிழர்களின் தீவுகளை கையகப்படுத்தும் தந்திரத்தை அரசாங்கம் செய்ய உள்ளது.

தீவக அதிகார சபை உருவாக்கப்பட்டால் பிரதேச சபை பிரதேச செயலகம் மாவட்ட செயலகம் மற்றும் ஆளுநர் செயலகம் என்பன தலையிட முடியாத சூழ்நிலை உரு வாகும்.




அது மட்டுமல்லாது வடமாகாண சுற்றுலா அதிகார சபை மூலம் கிடைக்கப் பெறுகின்ற வருமானம் மாகாணத்தை விட்டு மத்திக்குச் செல்வதோடு மாகாண அதிகாரங்கள் செயலிழந்து போகும்.

குறித்த அதிகார சபை செயற்படுத்தப்படும் ஆனால் தீவகப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் தொழிலுக்கு செல்வதில் வரை யறைகள் மட்டும் பாடுகள் ஏற்படுத்தப்படலாம்.

ஆகவே குறித்த விடையம் தொடர்பில் தமிழ் மக்கள் சார்ந்து பயணிக்கின்ற அரசியல் கட்சிகள் விழிப்பாக இருந்து வர போகும் ஆபத்தை முன்கூட்டியே தடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்

# முழங்காவில் பகுதியில் மகிழுந்து மீது சிறீலங்கா காவல்துறை துப்பாக்கிச் சூடு ஒருவர் படுகாயம்!

ஏப்ரல் 14, 2023

யாழ்ப்பாணத்தில் இருந்து முழங்காவில் பகுதியூடாக மன்னார் நோக்கி பயணித்த மகிழுந்து மீது காவல்துறை மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று (13) இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இதன் போது நவாலி மானிப்பாயை சேர்ந்த செல்வ மகேந் திரன் கமலரூபன் (வயது-36) என்பவர் படுகாயமடைந் துள்ளார்.

யாழில் இருந்து மன்னார் நோக்கி நேற்று இரவு 9.30 மணியளவில் பயணித்த சமயம் முழங்காவில் பகுதியில் காவல்துறை வீதிச் சோதனைக்காக வழி மறித்தும் நிறுத்தாமல் சென்ற போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குறித்த நபர் மன்னார் முருங்கன் வரை பயணித்துள்ளார்.

பின் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காவல்துறை மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# கனடாவில் குடியேற விரம்புவோருக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தி!

ஏப்ரல் 04, 2023

கனடாவில் குடியேற காத்திருப்போருக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்தியொன்றை பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடொ வெளியிட்டுள்ளார்.

முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு குடியேறிகளை வரவேற்பதற்கு கனடா தயாராக உள்ளது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த நடைமுறைகள் சரியான கிரமமான அடிபபடையில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் கனடாவிற்குள் பிரவேசிக்க அனுமதியில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட எட்டு குடியேறிகள் கனேடிய எல்லைப் பகுதி நதியொன்றில் சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த மரணங்கள் பெரும் கவலையளிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு முறைமையில் நம்பகத்தன்மையை பேண வேண்டிய கடப்பாடு கனடாவிற்கு உண்டு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோதமான முறைகளில் எல்லைகளை கடப்பதற்கு எத்தனிக்க வேண்டாம் என பிரதமர் ட்ரூடோ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கிரமமான முறையில் பெருந்தொகை குடியேறிகளுக்கு கனடாவில் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவுகள் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி!

ஏப்ரல் 04 2023

கனடாவின் பிரின்ஸ் எட்வர்ட் தீவுகளில் நடைபெற்ற தேர்தலில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

தீவுகளில் தேர்தல் பிரச்சாரங்கள் சுகாதார காப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் பிரின்ஸ் எட்வர்ட் தீவுகளின் முதல்வர் டென்னிஸ் கிங் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது.

மொத்தமாக 27 தொகுதிகளில் முதல்வர் டென்னிஸ் கிங், தலைமையிலான முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 22 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி மொத்தமாக 56 வீத வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளது.

லிபரல் கட்சியினால் மூன்று ஆசனங்களையும் கிரீன் கட்சியினால் இரண்டு ஆசனங்களையும் மட்டுமே வென்றெடுக்க முடிந்துள்ளது.

தற்பொழுது முதல்வர் பதவியை வகித்து வரும் டென்னிஸ் கிங் மீண்டும் பிரின்ஸ் எட்வர்ட் தீவுகளின் முதல்வராக பதவி ஏற்றுக் கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மக்களுக்கு ஆற்றிய சேவை




களைப் போன்று எதிர்வரும் நான்கு ஆண்டுகளிலும் சிறந்த சேவையை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதாக முதல்வர் டென்னிஸ் கிங் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் குறித்து பொலிசார் அறிவிப்பு!

ஏப்ரல் 05, 2023

கனடாவில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பிணையில் விடுதலை செய்யப்படும் நபர்களினால் வன்முறைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மாகாண முதல்வர்களுடன் அவசர சந்திப்பு ஒன்று நடாத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளது.

அவசர சந்திப்பு ஒன்றுக்கு அனுமதி வழங்குமாறு மாகாண பொலிஸ் பிரதானிகள், மாகாண முதல்வர்களிடம் எழுத்து



மூலம் கோரியுள்ளனர்.

அண்மைய நாட்களாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்தக் குற்றச் செயல்களின் பின்ணியை கவனத்திற் கொண்டால், அநேகமான சம்பவங்களின் பின்னணியில் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நான்கு வருடங்களுக்கு முன்னதாக பிணை வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்களின் பின்னர் இந்த சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ரொறன்டோவில் நான்கு இலட்சம் மக்கள் மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில்!

ஏப்ரல் 06

ரொரன்டோவில் சுமார் நான்கு லட்சம் மக்கள் மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

ரொறன்ரோவில் குடும்ப மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாத மக்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு உயர்வடைந்துள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலப் பகுதியில் ரொறன்டோவைச் சேர்ந்த சுமார் நான்கு லட்சம் மக்கள் குடும்ப மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாத நிலை



உருவாகியுள்ளது.

கடந்த 2020ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையில் குறைந்தபட்சம் 72000 பேர் குடும்ப மருத்துவர்களின் சேவையை இழந்துள்ளனர்.

சில இன சமூகங்கள் மற்றும் வருமானம் குறைந்தமக்கள் அதிகளவில் மருத்துவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குடும்ப மருத்துவர்களின் சேவையை பெற முடியாத காரணத்தினால், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நாட்களின் எண்ணிக்கை உயர்வடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடாவில் 42 பேர் திடீர் கைது!

ஏப்ரல் 11, 2023

கனடாவில் பல்வேறு குற்ற செயல்களுடன் தொடர்புடைய 42 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த 42 பேருக்கு எதிராகவும் சுமார் 400 குற்றவியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

சுமார் ஓராண்டு காலமாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 173 துப்பாக்கிகளை போலீசார் மீட்டுள்ளனர்.

டொரன்டோ போலீசார் யோக் பிராந்திய போலீசார், டர்ஹம்ம் போலீசார், ஒன்றாரியோ மாகாண போலீசார், கனடிய எல்லை பாதுகாப்பு பிரிவினர் மற்றும் அமெரிக்க பாதுகாப்பு பிரிவு என்பன கூட்டாக இணைந்து இந்த நபர்களை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களிடமிருந்து பாரிய அளவிலான போதை பொருட்கள் பணம் மற்றும் ஆயுதம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இந்த போதைப்பொருள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றவாளி கும்பல்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி போதைப் பொருள் மற்றும் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

போலீசாரினால் இவ்வாறு ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இந்த விசாரணைகளில் பெரும் எண்ணிக்கையிலான சந்தேக நபர்களை கைது செய்ய



முடிந்தது என போலீசார் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் விசேட அறிவிப்பு!

ஏப்ரல் 12, 2023

கனடாவில் வட்டி வீதம் தொடர்பில் மத்திய வங்கி விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவி வரும் பணவீக்கம் காரணமாக சில காலமாகவே மத்திய வங்கி வட்டி வீதங்களை உயர்த்தி வந்தது.

இந்த நிலையில், இன்றைய மத்திய வங்கி வட்டி வீதம் தொடர்பில் அறிவிப்பினை வெளியிட்டது.

இதில் வட்டி வீதங்களில் மாற்றம் எதுவுமில்லை என அறிவித்துள்ளது. இதன்படி, வங்கி வட்டி வீதம் 4.5 வீதமாக தொடர்ந்தும் நீடிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் பொருளாதார வளர்ச்சி குறித்து எதிர்வுகூறப்பட்டதனை விடவும் சாதகமான நிலை உருவாகியுள்ளது.

இந்த ஆண்டில் 1.4 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் பணவீக்கம் 5 வீதமாக காணப்பட்டதுடன், இந்த ஆண்டு நடுப் பகுதியில் இது 3 வீதமாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வங்கி வட்டி வீதம் தொடர்பில் மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் 7ம் திகதி அறிவிக்கப்பட உள்ளது.




# ஒன்ராறியோ வான் பகுதியில் பாரிய தீ விபத்து பாரியளவு சேதம்!

ஏப்ரல் 12, 2023

கனடாவின் ஒன்ராறியோ வான் பகுதியில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இரண்டு மில்லியன் டொலருக்கு மேற்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுமானம் செய்யப்பட்டு வந்த வீட்டுத் தொகுதியொன்றில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

வானின் டெஸ்டன் மற்றும் பேன் வெலி பகுதியில் சுமார் இருபது வீடுகள் இவ்வாறு தீ விபத்தில் சேதமாகியுள்ளன.

வெப்பநிலையுடன் கூடிய காலநிலை மற்றும் பலத்த காற்று காரணமாக இவ்வாறு வீடுகள் தீப்பற்றிக் கொண்டுள்ளன.

தீ விபத்து காரணமாக வீடுகள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் உட்பட அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் தடை செய்யப்பட்ட இராசயணங்கள்!

ஏப்ரல் 13, 2023

கனடாவில் பத்து ஆண்டுகளுக்கு முன்பே தடை செய்யப்பட்டுவிட்ட இரசாயணங்கள் சில, குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் உட்பட, அன்றாடம் பயன்படுத்தப்படும் சில பொருட்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயம் கவலையை ஏற்படுத்துவதாக உள்ளது.

ரொரன்றோ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில், புற்றுநோயை உருவாக்கக்கூடிய இரசாயணங்கள், குழந்தைகள் விளையாடும் பொம்மைகள் முதல், அன்றாடம் பயன்படுத்தும் மின்னணுப் பொருட்கள் வரை பல பொருட்களில் இருப்பது தெரியவந்துள்ளது.

Chlorinated paraffins என்று அழைக்கப்படும் இரசாயணங்கள், குழந்தைகளின் பொம்மைகள், கைகழுவ பயன்படுத்தும் சோப் மற்றும் ஹெட்போன்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுவும், இந்த இரசாயணங்கள், கைக்குழந்தைகள் விளையாடும் பொம்மைகளில், குறிப்பாக குழந்தைகள் வாயில் வைத்துக்கொள்ளும் பொம்மைகளில் (Teething Toys) அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வை தலைமையேற்று நடத்தும் Steven Kutarna தெரிவிக்கிறார்.

Chlorinated paraffins என்று அழைக்கப்படும் இந்த இரசாயணங்களை தயாரிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும், பயன்படுத் துவதற்கும், இறக்குமதி செய்வதற்கும், கனடா 2013ஆம் ஆண்டே தடை விதித்துள்ளது.

இந்த இரசாயணம், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதுடன், ஆய்வக விலங்குகளில் புற்றுநோயை உருவாக்



குவது தெரியவந்துள்ளதால், அது மனிதர்கள் உடல் நலத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என கனடா சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழக செய்திகள்



# நிலக்கரி சுரங்க விவகாரம் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம்!

ஏப்ரல் 04, 2023

தமிழ்நாட்டின் டெல்டா பகுதி விவசாயிகளின் நலன் காக்க, நிலக்கரிக்கான ஏல ஒப்பந்த நடைமுறை யிலிருந்து டெல்டா பகுதிகளை விலக்கிட வலியுறுத்தி ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டின் முக்கிய உணவு உற்பத்தி மண்டலமான காவிரி டெல்டாப் பகுதிகளில் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி தொடர்பாக சமீபத்திய ஏல அறிவிப்பு ஏற்படுத்தக் கூடிய ஒரு தீவிரமான பிரச்சனையை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக முதலமைச்சர், குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு அரசிடம் ஒப்புதல் பெறப்படவில்லை, மாநில அரசுடன் கலந்தாலோசனையும் செய்யப்படவில்லை. இத்தகைய முக்கிய மான விஷயத்தில் மாநிலங்களுடன் எந்த ஆலோசனையும் நடத்தாமல் ஒன்றிய அரசின் நிலக்கரி அமைச்சகம் தன்னிச் சையாக செயல்படுவது துரதிர்ஷ்டவசமானது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் மைக் கேல்பட்டி, கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாத் தோப்புக்கு கிழக்கே உள்ள பகுதி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் வடசேரி ஆகிய இந்த மூன்று பகுதிகளும் தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில் உள்ளவை ஆகும்.

இதில் வடசேரி மற்றும் சேத்தியாத்தோப்பின் கிழக்குப் பகுதிகள் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டம் 2020 இன் கீழ் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத் திற்குள் வருகின்றன. அதே நேரத்தில் மைக்கேல்பட்டி ஒன்றியம் காவிரி டெல்டாவின் மிகவும் வளமான பகுதியை ஒட்டிய ஒரு பெரிய நெல் விளையும் பகுதியில் அமைந்துள்ளது.

இந்த நிலக்கரி சுரங்கம் தமிழ்நாடு மக்களின் உணவுப் பாது காப்பு பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளதாலும், தமிழ் நாட்டில் உள்ள மூன்று சுரங்கத் வட்டாரங்கள் வடசேரி, மைக்கேல்பட்டி, சேத்தியாத்தோப்பு கிழக்கு ஆகிய மூன்றையும், ஏலத்தின் 7வது/17வது தவணையில் இருந்து விலக்கிட வேண்டும் என்றும், அதற்கான உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.



இந்த விவகாரத்தில் பிரதமர் உடனடியாக தலையிட்டு நிலக்கரி அமைச்சகத்தின் அறிவிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமையை சரி செய்து தேவையற்ற போராட்டங்களையும், குழப்பங்களையும் தவிர்க்க நடவடிக்கை வேண்டும் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நிலக்கரி ஒப்பந்தம் இரத்து! அனைவருக்கும் நன்றி.

## விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ஆர். பாண்டியன்

ஏப்ரல் 08. 2023

தஞ்சாவூர் - காவிரி டெல்டா பகுதிகளிலப் நிலக்கரி எடுக்கும் ஒப்பந்தத்தை ஒன்றிய அரசு இரத்து செய்துள்ள நிலையில், முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் பி.ஆர்.பாண்டியன் தெரிவித்துள்ளார்

தமிழ்நாட்டில் எழுந்த பலத்த எதிர்ப்பின் காரணமாக, காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரி எடுக்கும் ஒப்பந்தத்தை கைவிட்ட தாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மன்னார்குடியில் காந்தி சிலை அருகே செய் தியாளர்களை சந்தித்த விவசாய சங்க தலைவர் பி.ஆர். பாண்டியன், தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், ஒன்றிய அரசு காவிரி டெல்டாவில் புதிதாக நிலக்கரி சுரங்கம் அமைப் பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 4ம் திகதி போராட்டத்தை நடத்தினோம்.

இதனை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதி நிலக்கரி திட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தினார். 5ம் திகதி சட்டமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகள் ஒட்டுமொத்தமாக கவன ஈர்ப்பு தீர்மானம் மூலம் திட்டத்தை கைவிட ஒன்றிய அரசை வலி யுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது. தமிழக பாஜக தலை வரும், நிலக்கரி துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

இந்த நிலையில் ஒன்றிய அரசின் நிலக்கரி சுரங்கத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி காவிரி டெல்டாவில் வடசேரி, வீராணம், சேத்தியாதோப்பு கிழக்கு மைக்கேல்பட்டி உள்ளிட்ட கிணறுகள் அமைப்பதற்கு விடப்பட்ட ஒப்பந்தம் இரத்து செய்யப் படு வதாகவும், திட்டத்தை கைவிட உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.



இதற்கு துணை நின்ற முதலமைச்சர், எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், விவசாயிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார்.

# இலங்கை இந்துக்களுக்கு நீதி கோரி இந்தியா டில்லியில் போராட்டம்!

ஏப்ரல் 07, 2023

இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதி கோரி இந்தியாவின் டில்லியில் இந்து அமைப்புகள் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தன.

இதில் ஆலயங்கள் இடிக்கப்படுவது மற்றும் இந்துக்களுக்கு தீங்கு இழைக்கப்படுவது ஒரு கலாசார இனப்படுகொலை எனவும் இந்து அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போதைய அரசு தொல்லியல் ஆய்வு, வளர்ச்சி மற்றும் உற்பத்தி பணிகள் என்ற பெயரில் கோவில்களின் தோற்றத்தைக் கெடுத்து, அவற்றை இடிப்பது சகிக்க முடியாத குற்றமாக கருதப்படுவதாக போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் இது இந்துக்களுக்கும், இந்தியாவுக்கும் எதிரான தீங்கிழைக்கும் செயல் என இந்துப் போராட்டக் குழுவின் சர்வதேசத் தலைவர் ஸ்ரீ அருண் உபாத்யாய், கண்டனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்திய அரசும் இந்தப் பிரச்சினையை உணர்ந்து இந்தியா செல்லவிருக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக ஆட்சேபிக்க வேண்டும் என தெரிவித்தார்.






www.sangathamil.ca

# திருச்சி சிறப்பு முகாமில் இருந்து 7 ஈழத் தமிழர்கள் விடுதலை!

ஏப்ரல் 06, 2023



இந்தியா, தமிழகம் - திருச்சி மத்திய சிறை வளாகத்தில் அமைந்துள்ள சிறப்பு முகாமில் இருந்து நேற்று 7 இலங்கைத் தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெளிநாடுகளில் இருந்து போலி கடவுச்சீட்டு மற்றும் விசா காலம் முடிந்தும் தமிழகத்தில் தங்கியவர்கள் அனைவரையும் தமிழக அரசு சிறப்பு முகாம்களில் வைத்து பராமரித்து வருகிறது.

இவர்களில் பெரும்பாலானவர்களின் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் அவர்கள் தங்களுடைய தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படவில்லை.

இந்தநிலையில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக சிறப்பு முகாமில் தொடர் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த ஏழு பேருக்கு விடுதலைக்கான உத்தரவு ஆவணங்கள் கிடைத்ததை அடுத்து, அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

# பஞ்சாப் மாநில இராணுவ முகாமில் துப்பாக்கி சூடு நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தார்கள் இறந்த இரண்டு படையினர் தமிழ்நாட்டைச்சேர்ந்தோர்!

மார்ச் 13. 2023



பஞ்சாப் - இராணுவ முகாமில் இன்று அதிகாலையில் நடந்த துப்பாக்கி சூட்டில் நான்கு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலம் பதிண்டா இமுகாமில் இன்று அதி காலை திடீரென துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டுள்ளது. அப்போது சக வீரர்கள் அங்கு சென்று பார்த்த போது 4 இராணுவ வீரர்கள் உயிரிழந்து கிடந்துள்ளனர்.

இது தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பஞ்சாப் மாநிலம் பதிண்டாவில் உள்ள இராணுவ முகாமில் ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் தங்கியுள்ளனர். இங்கு நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடந்த துப்பாக்கி சூட்டில் சாகர் பன்னே (25), கமலேஷ் (24), யோகேஷ்குமார் (24), சந்தோஷ் நகரல் (25) ஆகிய 4 வீரர்கள் பலியானார்கள். அவர்கள் பீரங்கி படை பிரிவை சேர்ந்தவர்கள்.



இதையடுத்து சம்பவம் நிகழ்ந்த பதிண்டா இராணுவ முகாம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இராணுவ உயர் அதிகாரிகள் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போது, உயிரிழந்த 4 இராணுவ வீரர்களில் 2 பேர் தமிழர்கள் என தெரிய வந்துள்ளது.

அவர்களில் யோகேஷ் குமார் என்பவர் தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், கமலேஷ் சேலம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் இந்திய ராணுவத்தில் கடந்த 2019ம் ஆண்டு, பணியில் சேர்ந்துள்ளனர்.

யோகேஷ் குமார் மற்றும் கமலேஷ் ஆகியோர் இராணுவ முகாமில் பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம், அவர்களது குடும்பத்தார் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

உலக செய்திகள்

# அகதிகளுக்கு நிரந்தர விசா வழங்க கோரி ஆவுஸ்திரேலியாவின் பல பகுதிகளில் போராட்டம்!

ஏப்ரல் 04, 2023

ஆவுஸ்திரேலியாவில் பல ஆண்டுகளாக நிச்சயத் தன்மையற்ற சூழலின் கீழ் சிக்கியுள்ள அகதிகளுக்கு நிரந்தர விசாக்களை வழங்க கோரி அந்நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அனைத்து அகதிகளுக்கும் நிரந்தர விசா, 10 ஆண்டுகள் போதாதா? புகலிடம் கோருவது குற்றமல்ல என கைகளில் பதாகைகள் ஏந்தி சிட்னி, கான்பரா, மெல்பேர்ன் உள்ளிட்ட நகரங்களில் நடந்த போராட்டங்களில் பலர் பங்கேற்றிருக்கின்றனர்.

அத்துடன், அகதிகளை அரசியல் கைதிகளை போல் நடத்துவதாக ஆஸ்திரேலிய அரசின் மீது போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

“நான் பத்தாண்டுகளாக இணைப்பு விசாவில் காத்திருக்கிறேன். 19 ஆயிரம் அகதிகளுக்கு அரசு விசா வழங்கியது நல்ல விஷயம் தான், ஆனால் விசா வழங்கப்படாத 12 ஆயிரம் அகதிகளில் நானும் ஒருவன்,” என வங்கதேச அகதி பஹர் உடின் தெரிவித்திருக்கிறார். இவர் கடந்த 2012ம் ஆண்டில் படகு வழியாக ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

“எங்களது தாய்நிலம் எங்களுக்கு பாதுகாப்பற்றதாக இருப்பதால் அங்கிருந்து வெளியேறினோம். நாங்கள் இப்போது ஆவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள். இங்கு கடுமையாக உழைக்கிறோம், வரி செலுத்துகிறோம். எனது விசா நிலையின் காரணமாக எதிர்காலமற்று கிடக்கிறேன்,” எனக் கூறியிருக்கிறார் ஈராக்கிலிருந்து வெளியேறிய அல்-




கிலாபி.

ஆவுஸ்திரேலியாவில் உள்ள அகதிகளுக்கு மட்டுமின்றி ஆவுஸ்திரேலியாவை படகு மூலம் அடைய முயன்று இந்தோனேசியாவில் சிக்கியுள்ள 7 ஆயிரம் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார் அகதிகள் நல செயல்பாட்டாளரான ஜன் ரிண்டோல்.

“இணைப்பு விசாக்களில் சிக்கியுள்ள பெரும்பாலான புகலிடக்கோரிக்கையாளர்கள் ஈராக், ஆப்கானிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் தோல்வியடைந்த ஆவுஸ்திரேலியாவின் வெளியுறவுக் கொள்கையால் பாதிக்கப்பட்டவர்கள்,” என ஜன் ரிண்டோல் தெரிவித்திருக்கிறார்.

# ‘நாங்கள் மிருகங்கள் அல்ல’ அகதிகளை அணுகும் முறையை ஆவுஸ்திரேலியா மாற்ற வேண்டும் எனக் கோரிக்கை!

ஏப்ரல் 06, 2023

தஞ்சக்கோரிக்கையாளர்களை அணுகும் முறையினை மாற்ற வேண்டும் என ஆஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்பு முகாமில் சிறைப்படுத்தப்பட்டிருந்த அகதிகள் ஆவுஸ்திரேலிய அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவின் கடல்கடந்த தடுப்பு முகாம்கள் செயல்படும் பப்பு நியூ கினியா, நவுரு தீவுகளில் சிறைப்படுத்தப்பட்டிருந்த 30 க்கும் மேற்பட்ட அகதிகளின் அனுபவங்கள் சமீபத்தில் இணையத்தில் வெளியிடப்பட்டது.

அந்த வகையில், நவுரு முகாமில் சிறைப்படுத்தப்பட்டிருந்த ஈரானிய பெண் அகதியான சோன்யா அந்த அனுபவம் பயங்கரமானது என்கிறார்.

“நாங்கள் ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொள்ள வேண்டும் என முகாம் அதிகாரிகள் விரும்பினர். எங்களை யாரும் கண்டுகொள்ளவில்லை. நாங்கள் மிருகங்கள் அல்ல, மனிதர்கள்,” என சோன்யா கூறியிருக்கிறார்.

மேலும், “நாங்கள் படகு வழியாக தஞ்சமடைந்தவர்கள் என்பதால் குடிவரவு அதிகாரிகள் நாங்கள் எங்கிருந்து வந்தோமோ அங்கே திரும்பிச் செல்ல சொன்னார்கள்,” என சோன்யா குறிப்பிட்டுள்ளார்.

ஆவுஸ்திரேலிய வரலாற்றின் கறுப்பு பக்கங்களை அகதிகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டுகிறது எனக் கூறுகிறார் வழக்கறிஞர் ஜெனிபர் கனிஸ்.



“உடல் ரீதியான வன்முறை, பாலியல் ரீதியான வன்முறை, இனவாதம், பாகுபாடு, தன்னைத் தானே வருத்திக் கொள்ளுதல் ஆகியவற்றைக் கொண்ட தடுப்பு முகாம் வாழ்க்கையின் பயங்கரத்தை அகதிகளின் வாக்கு மூலங்கள் எடுத்துக் காட்டுகிறது,” என வழக்கறிஞர் ஜெனிபர் கூறியிருக்கிறார்.

ஆவுஸ்திரேலியாவில் தற்காலிக விசாக்களில் உள்ள 19 ஆயிரம் அகதிகளுக்கு நிரந்தரமாக தங்குவதற்கான உரிமை வழங்கப்படும் என ஆஸ்திரேலிய அரசு சமீபத்தில் அறிவித்திருந்தது. அதே சமயம், முந்தைய அரசாங்கத்தின் இணைப்பு விசாக்கள் அல்லது காலாவதியான விசாக்கள் தொடர்பான அதிவேக பரிசீலனையில் நிராகரிக்கப்பட்ட 12 ஆயிரம் அகதிகளுக்கு இந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

# இமயமலையில் இரு மடங்கு வேகமாக உருகும் பனிப்பாறைகள்!

ஏப்ரல் 06. 2023

உலகில் வாழும் மொத்த யானைகளின் எண்ணிக்கையை விட 1000 மடங்கு அதிகமான பனிப்பாறைகளை இமயமலை கடந்த 20 வருடமாக இழந்து வருவதாக ஆராச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இமயமலை இயற்கையின் அருட்கொடைகளில், ஒன்று என்று கூட சொல்லலாம். அபப்டிப்பட்ட இந்த இமயமலையில் ஏராளமான பனிப்பாறைகள் உள்ளன.

இந்த பனிப்பாறைகள் மூலமாகத்தான் கோடானக்கோடி மக்கள் குடிநீர் ஆதாரங்களை பெற்று வருகின்றனர்.

ஆனால் உலக வெப்பமயமாதலால் இந்த பனிப்பாறைகள் வேகமாக அதுவும் இரு மடங்கு வேகமாக உருகத் தொடங்கி இருக்கின்றன.

அந்த வகையில் ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக, இமயமலையில் பனிப்பாறைகளின் அதிகபடியான இழப்பை ஆவணப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக இணைந்து நடத்திய ஆய்வில் 2000



முதல் 2020 வரை இப்பகுதியில் உள்ள ப்ரோக்லேசியல் ஏரிகள் எண்ணிக்கையில் 47 சதவீதமும் பரப்பளவில் 33 சதவீதமும், அளவு 42 சதவீதமும் அதிகரித்தன.

இதனால் நிலப்பரப்பின் மேற்பரப்பிற்கு கீழே உள்ள பனிப்பாறைகள் அதிகபடியாக உருகி வருவதாகவும் இது சுமார் 57 கோடி யானைகளின் எடைக்கு சமம் அதாவது உலகில் வாழும் மொத்த யானைகளின் எண்ணிக்கையை விட 1000 மடங்கு அதிகம் என்று கூறியுள்ளனர்.

இந்த ஆய்வு குறித்து நேச்சர் ஜியோசயின்ஸ் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் மத்திய இமயமலையில் மிகப்பெரிய அளவில் உருகிவரும் பனிப்பாறைகள் குறித்து மதிப்பிடப்பட்டுள்ளது.

அங்கு பனிப்பாறை உருகுவதால், அருகிலுள்ள ஏரியில் நீர்வரத்து மிக வேகமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீருக்கடியில் நிகழும் பனிப்பாறை மாற்றங்களை செயற்கைக்கோள்களால் காண இயலாமல், குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன.

ஏனென்றால் பயன்படுத்தப்பட்ட செயற்கைக்கோள் தரவு மூலம் ஏரி நீரின் மேற்பரப்பை மட்டுமே அளவிட முடியும். ஆனால் நீருக்கடியில் உள்ள பனியை தண்ணீரால் மாற்ற முடியாது.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வறிக்கையில் தெரிவிக்கையில், பனிப்பாறை -நீரியல் மாதிரிகளுக்கு முக்கியமான தரவுகளை வழங்குவதாகவும், மலைப் பகுதியில் நீர் வள மேலாண்மைக்கு ஆதரவளிக்கிறது என்றும் கூறியுள்ளனர்.

# இலங்கை மனித உரிமைகளை மீறும் அதிகாரம் கொண்டது பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்!

## மனித உரிமை கண்காணிப்பம்

ஏப்ரல் 07, 2023

இலங்கை அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அடிப்படை மனித உரிமைகளை முறையாக மீறுவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிப்பதாக மனித உரிமை கண்காணிப்பகம் இன்று குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே இந்த யோசனையை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும்.

அத்துடன் எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் தரத்தை நிலைநிறுத்துகிறது என்பதை ஆலோசனைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிராக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான விமர்சனங்களைத் தொடர்ந்து, அதனை மாற்றியமைக்க இலங்கை அரசாங்கம் உறுதியளித்தது.

எனினும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக, சொத்து சேதம், திருட்டு அல்லது கொள்ளை போன்ற குற்றங்களை உள்ளடக்கிய பயங்கரவாதத்தின் வரையறையை இந்த யோசனை விரிவுபடுத்துகிறது.

பொதுக்கூட்டங்கள் மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கான உரிமைகளையும் இது கட்டுப்படுத்துகிறது.

இந்தநிலையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், அமைதியான விமர்சகர்களை மௌனமாக்குவதற்கும் சிறுபான்மையினரை குறிவைப்பதற்கும், இலங்கை அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய இயக்குனர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

2023, மார்ச் 22 அன்று வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு யோசனை, 1979 இல் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து பரவலான சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையான தடுப்புக்காவல்களுக்கு வழிவகுத்த இழிவான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) மாற்றும் நோக்கம் கொண்டது.

இந்த புதிய யோசனையில் சில முன்னேற்றங்களும் உள்ளதாக கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில், அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, உரிமைகளை மதிக்கும் சட்டத்தை கொண்டு வருவதற்கு பலமுறை உறுதியளித்துள்ளன.




அந்த வகையில், இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது 2018 இல் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் உருவாக்கப் பட்டுள்ளது.

எனினும் இந்த பயங்கரவாத எதிர்ப்பு யோசனை சர்வதேச தரநிலைகள் எதையும் முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சர் கையொப்பமிட்ட உத்தரவின் பேரில், அதிகாரிகள், சந்தேகத்துக்குரிய ஒருவரை, ஓராண்டு வரை காவலில் வைக்க முடியும்.

எனினும் முன்மொழியப்பட்ட புதிய யோசனை, காவல் துறை துணை ஆய்வாளர்களுக்கு தடுப்புக் காவல் உத்தரவுகளை வழங்க அதிகாரம் அளிக்கிறது, இது துஷ்பிரயோக அபாயத்தை அதிகரிக்கிறது என்று கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட புதிய யோசனை, “நியாயமான காரணங்கள்” இருப்பதாக அவர்கள் நம்பினால், யாரையும் தடுக்க, கேள்வி கேட்க, தேட மற்றும் கைது செய்ய அல்லது எந்த ஆவணம் அல்லது பொருளையும் நீதிமன்ற உத்தரவில்லாமல் கைப்பற்ற காவல்துறை மற்றும் இராணுவத்திற்கு விரிவான அதிகாரங்களை வழங்குகிறது.

1976 ஆம் ஆண்டு முதல் இலங்கை மரணதண்டனைக்கு தடை விதித்தாலும், கொலை என்ற பயங்கரவாத குற்றத்திற்கு மரண தண்டனையை இந்த யோசனை அனுமதிக்கிறது என்றும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த யோசனையின்படி, காவல்துறையினரிடம் அளிக்கப்படும் வாக்குமூலங்கள் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, சந்தேகப்படும்படியான பெண்களை பெண் அதிகாரிகளால் தேட வேண்டும் என்பன உள்ளிட்ட சில புதிய முறையான பாதுகாப்புகள் உள்ளன.

கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை அறிவிப்பதற்கும், கைதி புரிந்துகொள்ளும் மொழியில் ஆவணங்களின் மொழிபெயர்ப்புகளுக்கான அணுகலை வழங்குவதற்கும், தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரை 14 நாட்களுக்கு ஒரு முறை நீதிவானிடம் முன்னிலைப்படுத்துவதற்கும், புதிய நடைமுறைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சட்டமூலத்தின் கீழ் முன்மொழியப்பட்ட சுயாதீனமான இரண்டு நிறுவனங்கள், சட்டத்தால் சுயாதீனமாக இருக்காது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய இயக்குனர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RightBroker=RightMortgage

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

LILAND INSURANCE INC.

**LIFE INSURANCE**

Mortgage Insurance Line of Credit Insurance

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

## 20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி

*இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை* **Cash Back Value** *பெறமுடியும்.*

## Living Benefits / Income Replacement

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

## Super Visa, RRSP Loan, RESP (Education)

*கொடிய நோய்களுக்கான காப்புறுதி* (Critical Illness) for 25 Sickness
*நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.*

(24 Yrs Experience)

## INCOME TAX

E-FILING Tax

REFUND within 10 Days

- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration

வருமான வரித்திணைக்களகத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

**Philip Chandran**

Liland Insurance

**416-450-9043**

philipsam0715@hotmail.com

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

*INSURANCE IS LIKE YOUR MUM AND DAD*

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# அன்னை பூபதியின் தியாகம் உலக வரலாற்றில் ஒப்பற்றது!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தமிழீழம்,
19.04.1990

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத்தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து, எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

எமது புனித விடுதலைப்போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத்துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது, உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தைத் தலைகுனியவைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை, தமிழீழத் தாய்குதலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனாலேதான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நிறைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்பு முனைகளுக்கு முகம் கொடுத்து, வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது, வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரா தூரமானதென்றால், மிகவும் ஆபத்தான தென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன் முதலாக எமது போராட்ட வராற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தம் ஏவி விடப்பட்டபோது, எமக்காகக் குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்திய தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணை போயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப்பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத்தீயை அணைய விடாது போராடினோம், இறுதியில் நாம் வெற்றி கண்டோம். இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம்தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

இந்த வெற்றியானது தமிழீழ மக்களாகிய உங்கள் வெற்றி, உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி, உங்கள் இயக்கமாகிய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வெற்றி.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத்திருப்பத்தில் நின்றுகொண்டிருக்கிறது. மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்ட எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில் இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த எமது தியாகிகளைவும் மக்களையும் நினைவில்நிறுத்தி அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைத் செலுத்துவோமாக.

வே. பிரபாகரன்
தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.

குறிப்ப: அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு தலைவர் விடுத்த அறிக்கை


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# தமிழர் இதயமெங்கும் வேரோடி விட்ட விருட்சம்

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது.
ஒரு அக்கினி.

ஒப்பற்ற விடுதலைத் தீயென
பிரபஞ்சமெங்கும் தன்னையே
பிரகடனஞ் செய்தபடி...

அண்டங்களின் உச்சியில்
அமர்ந்திருக்கிறது
ஒரு
அக்கினி
அமைதிப்படையின்
அராஜகத்திற்கு
முற்றுப்புள்ளி வைக்க
முழங்கிய சங்கு
அந்த
பாரத அரசின்
கண்மூடித்தனத்தால்
கண்மூடிவிட்டது.

அகிலத்தின் செவிகளையே
அதிர வைத்த
இந்த
சங்கின் சப்தத்தால்...
நிச்சயம்
ஒரு சுதந்திர மண்டலம்
ஜனனமாகும்.

தமிழ் நெஞ்சங்களை
தட்டி எழுப்பிய
ஒப்பற்ற முழக்கத்தின்
உரிமைக் காரியாம்
இவளின்
கல்லறையை
கௌரவித்து வைப்போம்.

இவளின் கல்லறையில்
கற்களைப் பதிக்காதீர்கள்
உலகிலுள்ள
ஒலி அலைகள் அனைத்தையும்
ஒன்று சேர்த்து வாருங்கள்
விடுதலை முழக்கத்தால்
வீடு கட்டுவோம்.

விழிகாணாத் தொலைவிலுள்ள
விண் கோள்களும்
இவளின்
விடுதலை முழக்கத்தை
செவிமடுக்கட்டும்.

தாயே...
மனிதக் குழந்தையின் பிரசவிப்பில்
மரணம் உன்னை
மணக்க வந்து
மானபங்கப் பட்டதாம்.

சமாதானக் குழந்தையின்
பிரசவிப்பில்
உன்னைச்சந்திக்க
சாவுக்கேன்
சந்தர்ப்பமளித்தாய்?

உன்
ஆவி பிரிந்த
அந்த
அவல நொடிப் பொழுதில்
உலகத்தின் உயிரினமெல்லாம்
ஒன்றுகூடி அழுத
ஓர் அதிசயம் நடந்தது.

சமாதானத்திற்கான நோபல் பரிசா?
இவளுக்கா!
சீ... எடுத்தெறியுங்கள்
கண்டவற்றையெல்லாம் ஏன்
காவித் திரிகிறீர்கள்?
இப்போதுதான்
உண்மையான நோபல் பரிசு
உருவாகியிருக்கிறது.

உலக சமாதானத்தின்
உன்னத பரிசாக
இனிவரும் நாட்களில்
இவளையே வழங்குவோம்.

அலைகள்
அடித்துப் புரளுகின்றனவா?
சமுத்திரங்களில் இவளின்
சாம்பலைக் கரையுங்கள்!
மேகங்கள் ஒன்றோடொன்று
மோதிக் கொள்ளுகின்றனவா?
இவளின்
சமாதான முழக்கத்தை
வானத்திற்கு வழங்குங்கள்!

புயற் காற்றா?






அது இனி வரவே வராது
காற்று முழுவதிலும்
இவளின்
சமாதான மூச்சல்லவா
சங்கமித்திருக்கிறது.

அமைதி மண்டலத்தின்
அத்திவாரமாக
புதைகுழி சென்ற
பொக்கிசமே...!
நீ
ஆராய்ச்சியாளர்களுக்கு
அதிசயம்!

ஈழத்தமிழரின்
இதயமெங்கும்
வேரோடிவிட்ட
விருட்சம்

படுகொலைகளை நிறுத்தக் கோரி
உன்னையே
பலி கொடுத்தாய்
பசியோடு வயிற்றைப்
பற்றி எரிய விட்டாய்.

உன் மரணச் செய்தி கேட்டு
உலகின்
மனச்சாட்சியே
மனவருத்தப்பட்டது.

இங்கிதம் தெரியாத – அந்த
இந்தியப்படையோ
உன்...
சமாதியில் ஏறி நின்று
சண்டை போட்டது.

இந்திராவின் இளைய மகன்
இப்போது
இரண்டாம் கட்சியில்
இருக்கிறார்.

அவர்
வெளியே உலாவ விட்ட
வேட்டை நாய்களையெல்லாம்
வி.பி. சிங் இப்போ
வீட்டுக்கு அழைத்து விட்டார்.

கௌரவமாகத் திரும்பிப் போகிறோமாம்.
"கல்கட்" கூறியிருக்கிறார்
கௌரவத்திற்கும்
களங்கத்திற்கும்
வேறுபாடு விளங்காதவன்.

சூரியனிடம் சொல்லுங்கள்
வெப்பத்தை
வெளியிட வேண்டாமென்று
கங்கைகளை
காவிச் செல்லா வேண்டாமென்று
பூமிக்குச் சொல்லுங்கள்
உணவுப் பொருட்களை
உற்பத்தி செய்யும்படி.

நீரும் உணவும்
அவளின்
நினைவுச் சின்னமல்லவா?

காப்பாற்றி வைத்திருக்கும்படி
உலகின்
கடைசி உயிருக்கும்
கட்டளை பிறப்பியுங்கள்.

இவளின் மரணம்
மக்கள் யுத்தத்தின் ஜனனம்.

அதோ...
இவளின்
சுதந்திரப் பாதையில்
சுவடுகளைப் பதிக்க
கோடி மக்கள்
கொடி பிடித்து வருகின்றார்கள்.

விடுதலைப் புலிகள். மகளிர் முன்னணி
-1992 –


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




# குடாரப்பு தரையிறக்கம்!

## தமிழர் சேனையின் மாபெரும் தரையிறக்க நடவடிக்கை 26.03.2000




### ஆனையிறவு படைத்தள வெற்றி:

ஆனையிறவுப் படைத்தளத் தாக்குதல் இலங்கை இராணுவத்தினரின் ஆனையிறவு ஆக்கிரமிப்பிற்கெதிராக 2000 ஆம் ஆண்டு மார்ச் 26, ஞாயிற்றுக்கிழமை மாலை நேர அளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல் ஆகும். ஓயாத அலைகள் மூன்று என்ற நடவடிக்கை மூலம் ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

35 நாட்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆனையிறவுப் படைத் தளமானது பத்தாயிரத்திற்கும் அதிகமான இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பில் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது.

குடாரப்புவில் தரையிறக்கப்படுவதற்கென வெற்றிலைக் கேணியில் இருந்து கடல்வழியே தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவிலான படை நகர்வொன்றை முன்னெடுத்தனர். கடற்புலிகளின் படகுகளில் 1200 வரையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் தாளையடி முகாம் மீதிருந்து வரும் தாக்குதல்களையும் எதிர்நோக்கிச் செல்லும் சூழலிற்குத் தள்ளப்பட்டும் மேலும் குடாரப்புப் பகுதியில் தரை யிறங்கும் குறிக்கோளுடன் சென்றனர்.

**குடாரப்பு தரையிறக்கச் சமர்**

ஈழப்போராட்டவரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய சாதனைகளில் இது முக்கியமானது. மிகப்பெரிய நாடுகளின் படைத்துறைக்கு ஈடான உத்தியுடனும் வளத்துடனும் ஒரு மரபுவழித் தரையிறக்கத்தை தமிழரின் விடுதலைச்சேனை நிகழ்த்தியிருந்தது. அதன்மூலம் வெல்லப்பட முடியாததாக




பலராலும் கருதப்பட்ட மிகமுக்கிய இராணுவத் தளமான ஆனை யிறவும் அதைச்சுற்றியிருந்த மிகப்பெரும் படைத்தளமும் புலிகளால் மீட்கப்பட்டது.

**சவால்களை ஏற்றுச் சமர் செய்யக்கூடாதென்பது கெரிலாப் போராளிகளுக்கான பொதுவிதி.**



ஓயாத அலைகள் மூன்று என்ற தொடர் நடவடிக்கையில் முதலிரு கட்டங்களும் வன்னியின் தெற்கு மற்றும் மேற்குமுனைகளில் முன்னேறியிருந்த படையினரை விரட்டி

மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டிருந்தது. மூன்றாம் கட்டம் மூலம் வன்னியின் வடக்கு முனையில் கட்டைக்காடு, வெற் றிலைக்கேணி உள்ளடக்கிய கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப் பட்டன. அதைத்தொடர்ந்து பரந்தன் படைத்தளமும் கைப்பற்றப் பட்டது.

கைப்பற்றப்பட்ட கடற்கரைப் பகுதியிலிருந்து நாலாம் கட்டத்துக் கான பாய்ச்சல் தொடங்க இருந்தது.

26.03.2000 அன்று மாலை வெற்றிலைக்கேணிக் கடற்கரை யில் போராளிகள் அணிவகுத்து நிற்கிறார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஈழப்போராட்டத்தில் பாரிய திருப்பு முனையை ஏற்படுத்திய போரியற் சாதனையொன்றை நிகழ்த்த அவர்கள் ஆயத்தமாகி நின்றார்கள். வெற்றிலைக் கேணியிலிருந்து கடல்வழியாக எதிரியின் கட்டுப்பாட்டி லிருக்கும் தாழையடி உட்பட்ட மிகப்பலமான கடற்கரையை மேவிச்சென்று குடாரப்புப் பகுதியில் புலிகளின் அணிகள் தரை யிறங்க வேண்டும் தரையிறங்கிய அணிகள் ஆனையிறவுத் தளத்துக்கான முக்கிய வினியோகப்பாதையான கண்டி வீதியைக் குறுக்கறுத்து நிலைகொள்ள வேண்டும் என்பதே திட்டம்.

தரையிறக்கம் செய்யப்பட வேண்டிய படையணி மிகப்பெரியது. ஆயிரத்து இருநூறு வரையான போராளிகளை ஒரேயிரவில் தரையிறக்க வேண்டும். தரையிறக்கத்தைத் தடுக்க எதிரி சகலவழிகளிலும் முயல்வான். கடலில் முழுக்கடற்படைப் பலத் தோடும் எதிரி தாக்குவான். கடற்கரையிலிருந்தும் டாங்கிகள் மூலம் நேரடிச்சூடு நடத்தி கடற்புலிகளின் படகுகளை மூழ்கடிப் பான். விடிந்துவிட்டால் எதிரியின் வான்படையின் அகோரத் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

மிக ஆபத்தான பணிதானென்றாலும் அதைச்செய்தே ஆக வேண்டும். கடற்புலிகள் அந்தப்பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்துமுடித்தனர். மாலை புறப்பட்ட படகணி ஆழக்கடல் சென்று இரண்டுமணிநேரப் பயணத்தில் தரையிறங்க வேண்டிய பகுதியை அண்மித்தது. எதிர்பார்த்தது போலவே கடலில் கடும்சண்டை மூண்டது. இரவு 8.30 க்கு கடலில் சண்டை தொடங்கியது. 16 டோறாப் பீரங்கிப் படகுகள் அடங்கிய தொகுதியுடன் சண்டை நடந்தது. தாக்குதலணிகளைத் தரை யிறக்கவேண்டிய படகுகளுக்கு எதுவித சேதமும் ஏற்படா வண்ணம் கடற்புலிகளின் தாக்குற்படகுகள் சண்டை செய்தன.

கடுமையான சண்டைக்கிடையில் விடிவதற்குள் வெற்றிகரமாக அணிகள் கடற்கரையில் தரையிறக்கப்பட்டன. முதற்கட்டமாக தரையிறக்க அணிகளைக் காவிச் சென்ற ஏழு வினியோகப் படகுகளும் வெற்றிகரமாகக அணிகளைத் தரையிறக்கின. தரையிறங்கிய அணிகள் தொண்டமானாறு நீரேரியைக் கடந்து அதிகாலைக்குள் கண்டிவீதியைக் குறுக்கறுத்து நிலை கொண்டனர். அவர்கள் தரையிறங்கிய நேரத்தில் ஏற்கனவே உட்புகுந்திருந்த கரும்புலிகள் அணி பளையிலிருந்த ஆட்லறித் தளத்தைக் கைப்பற்றி பதினொரு ஆட்லறிகளைச் செயலிழக்கச் செய்திருந்தனர்.

தரையிறங்கி நிலைகொண்ட அனைத்து அணிகளையும் கேணல் பால்ராஜ் நேரடியாக களத்தில் நின்று ஒருங்கிணைத்து வழிநடத்தினார். அவருக்குத் துணையாக துணைத்தளபதிக ளாக சோதியா படையணித் தளபதி துர்க்கா, மாலதி படையணித் தளபதி விதுஷா, சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதி (பின்னர் பிறிதொரு நேரத்தில் சாவடைந்த) லெப். கேணல் ராஜசிங்கன், விக்ரர் கவச எதிர்ப்பணிக்குத் தலைமை தாங்கிக் களமிறங்கியிருந்த இளங்கீரன் ஆகியோர் செயலாற்றினர்.



புலிகள் இயக்கம் இப்படியொரு தரையிறக்கத்தைச் செய்யுமென்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். இவ்வகையான முயற்சிகள் புலிகளின் சக்திக்கு அப்பாற்பட்டது என்பதோடு தற்கொலைக்கு ஒப்பானது என்றே எல்லோரும் கருதியிருந்தனர். உண்மையில் தற்கொலைக்கு ஒப்பானது தான். வன்னித் தளத்தோடு நேரடி வழங்கலற்ற நிலையில் பெருந்தொகைப் போராளிகள் எதிரியின் பகுதிக்குள் சிறிய இடமொன்றில் நிலையெடுத்திருப்பது தற்கொலைக்கு ஒப்பானது தான். தரையிறங்கிய அணிக்கான உணவு வினியோகத்தைக் கூடச் செய்யமுடியாத நிலை.

கடலில் மிகக்கடுமையான எதிர்ப்பை எதிரி கொடுத்தான். தரையிறக்கம் தொடர்பான செய்தியை அறிந்தபோது முதலில் திகைத்தாலும், அவ்வளவு பேரையும் கொன்றொழிப்பது என்பதில் எதரி தெளிவாக இருந்தான். தன்னால் அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழிக்க முடியுமென்று எதிரி நம்பினான். புலிகளின் போரிடும் வலுவுள்ள முக்கிய அணிகள் அங்கிருந்ததும், முக்கியமான போர்த்தளபதிகள் அங்கிருந்ததும் அவனுக்கு வெறியேற்றியது. அந்தத் தரையிறக்க அணியை முற்றாக அழித்தால் புலிகளின் கதை அத்தோடு முடிந்துவிடுமென்று கணித்திருந்தான்.

வெற்றிலைக்கேணியிலிருந்து குடாரப்புவரை அரச படையினரின் மிகவலுவான படைத்தளப் பகுதியாக இருந்தது. தரையிறக்கத்தின் முன்பே, கடல்வழியான தொடர்ச்சியான வினியோகம் சாத்தியப்படாதென்பது தெளிவாக உணரப்பட்டது. ஆகவே தரைவழியாக வினியோகத்தை ஏற்படுத்தவேண்டுமென்பதே நியதி. அதன்படி வெற்றிலைக்கேணியிலிருந்து கடற்கரை வழியாக குடாரப்பு வரை நிலத்தைக் கைப்பற்ற வேண்டும். தரையிறங்கிய அடுத்தநாளே தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதிகளைக் கைப்பற்றி குடாரப்பு வரை தொடர்பை ஏற்படுத்தும் சமர் தொடங்கிவிட்டது.



**தாளையபடியில் சிங்களவரிடமிருந்து பிடிக்கப்பட்ட காவலரண்களில் போராளிகள் நிலைகொண்டுள்ளனர்**

இத்தாவில் பகுதியில் கண்டிவீதியைக் குறுக்கறுத்திருந்த புலியணிகளை முற்றாக அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எதிரிப்படையோடு கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இத்தாவிலில் நிலைகொண்டிருக்கும் படையணிக்கு வினியோகத்தை ஏற்படுத்த புலியணிகள் கடுமையான சண்டையைச் செய்தன. இரண்டுநாள் எத்தனிப்பின் முடிவில் தாளையடி உட்பட்ட மிகப்பலமான படைத்தளங்களைக் கைப்பற்றி தரையிறக்க அணிக்குரிய தரைவழியான வழங்கலை உறுதிப்படுத்திக்கொண்டனர் புலிகள்.

அதுவரை சரியான வினியோகமில்லாது, இருந்தவற்றை மட்டும் பயன்படுத்தி நிலத்தைத் தக்கவைத்துக்கொண்டிருந்த தரையிறக்க அணி ஆசுவாசப்படுத்திக்கொண்டது. அணிகள் சீராக்கப்பட்டு தொடர்ந்து சண்டை நடந்தது. கண்டிவீதியைக் குறுக்கறுத்திருக்கும் புலிகளை முற்றாக அழிப்பதற்கு எதிரி தனது முழுவளத்தையும் பயன்படுத்தினார். கவசவாகனங்கள்,



ஆட்லறிகள், படையணிகள் என்று சகலதும் பயன்படுத்தினான். மிகமிக மூர்க்கமாகத் தாக்கினான். ஆனாலும் புலிவீரரின் அஞ்சாத எதிர்ச்சமரில் தோற்றோடினான்.

கவசப்படைக்குரிய பல வாகனங்கள் அழிக்கப்பட்டன் சேதமாக்கப்பட்டன. புலியணி நிலைகொண்டிருந்த பகுதி சிறியதாகையால் மிகச்செறிவான ஆட்லறிச்சூட்டை நடத்துவது எதிரிக்கு இலகுவாக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பநம் ஏற்பட்டபின் அவ்வழியால் சென்றவர்கள் அப்பகுதியைப் பார்த்திருப்பர். அழிக்கப்பட்ட கவசவானங்கள் வீதியோரத்தில் நிற்பதையும் இத்தாவில் பகுதியில் ஒருதென்னைகூட உயிரோடின்றி வட்டுக்கள் அறுக்கப்பட்டு மொட்டையாக நிற்பதையும் காணலாம். அவ்வளவுக்கு அகோரமான குண்டுத்தாக்குதல் புலியணி மீது நடத்தப்பட்டது. ஆனாலும் அப்பகுதியைத் தொடர்ந்து தக்கவைப்பதில் உறுதியாக இருந்து வெற்றியும் கண்டனர் புலிகள். ஆனையிறவுத்தளம் முற்றாகக் கைப்பற்றப்படும்வரை முப்பத்துநான்கு நாட்கள் இத்தாவில் பகுதியில் நிலைகொண்டு அதைத் தக்கவைத்துக்கொண்டனர் கேணல் பால்ராஜின் தலைமையிலான புலியணியினர்.



**வரலாற்றுப்புகழ் வாய்ந்த மாமுனைத் தரையிறக்கத்தில் நீருக்குள்ளால் 120 அஅ கனரகப் பீரங்கியை இழுத்துச்செல்லும் பெண்புலிகள்...**

தரையிறங்கிய சிலநாட்களுக்குள் ஆனையிறவைக் கைப்பற்றும் முயற்சியொன்றைப் புலிகள் மேற்கொண்டு அது தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் சிலநாட்களில் வேறொரு திட்டத்தைப் போட்டு மிகஇலகுவாக, மிகக்குறைந்த இழப்புடன் ஆனையிறவுப்பெருந்தளம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனர் புலிகள். இயக்கச்சியைக் கைப்பற்றியதோடு தானாகவே எதிரிப்படை ஆனையிறவிலிருந்து தப்பியோடத் தொடங்கி விட்டது. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பின்வாங்கல் போலன்றி அனைவரும் தங்கள்தங்கள் பாட்டுக்குச் சிதறியோடினர். தாம் பயன்படுத்திய ஆட்லறிகள் முழுவதையும்கூட அழிக்க முடியாத அவசரத்தில் விட்டுவிட்டு ஓடினர். அவர்களுக்கு இருந்த ஒரே பாதையான ஆனையிறவு - கிளாலி கடற்கரைப்பாதை வழியாக ஓடித்தப்பினர்.

முடிவில் ஆனையிறவு தமிழர்களிடம் வீழ்ந்தது. ஆனையிறவு மட்டுமன்றி மிகப்பெரும் நிலப்பகுதி - கண்டிவீதியில் முகமாலை வரை - கிழக்குக் கடற்கரையாகப் பார்த்தால் சுண்டிக்குளம் முதல் நாகர்கோவில்வரை என்று மிகப்பெரும் நிலப்பகுதி மீட்கப்பட்டது. அனைத்துக்கும் அடிநாதமாக இருந்தது அந்தத் தரையிறக்கம்தான்.

சிங்களப்படையே அப்படியொரு தரையிறக்கத்தைச் செய்ய முனையாது. 1996 இல் அரசபடையால் அளம்பிலில் அவ்வாறு செய்யப்பட்ட தரையிறக்கமொன்று பெருத்த தோல்வியில் முடிவடைந்து இராணும் மீண்டும் தப்பியோட நேரிட்டது. ஆனால் புலிகள் மிகவெற்றிகரமாக படையணிகளைத் தரையிறக்கி ஒருமாதத்துக்கும் மேலாக மிகக்கடுமையான எதிர்த்தாக்குதலைச் சமாளித்து நிலைகொண்டிருந்ததோடு இறுதியில் எதிரியை முற்றாக வெற்றிகொண்டனர்.

**கரும்புலி அணியினரால் தகர்க்கப்பட்ட ஆட்லறிகள்... பளை ஆட்லறித்தளத் தகர்ப்பு**



26.03.2000 அன்று இரவு விடுதலைப்புலிகளின் சிறிய அணியொன்று மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது. முதல் நாளே கடல்வழியாக எதிரியின் பகுதிக்குள் ஊடுருவிவிட்டிருந்தனர் அவ்வணியிலுள்ளவர்கள். அதுவொரு கரும்புலியணி. ஆண்போராளிகளும் பெண்போராளிகளும் அதிலிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பளையை அண்டிய பகுதியில் இரகசியமாக நகர்ந்துகொண்டிருக்கின்றனர். அப்போது ஆனையிறவு எதிரியின் வசமிருந்தது. அன்று இரவுதான் வரலாற்றுப் புகழ்மிக்க குடாரப்புத் தரையிறக்கம் நடைபெற இருந்தது. இவர்கள் நகர்ந்துகொண்டிருக்கும் அதேநேரத்தில் கடலில் தரையிறக்க அணிகளைக் காவியபடி கடற்புலிகளின் படகுகள் நகர்ந்துகொண்டிருந்தன.

குறிப்பிட்ட கரும்புலி அணிக்குக் கொடுக்கப்பட்ட பணி, பளையிலுள்ள பாரிய ஆட்லறித்தளத்தை அழிப்பதுதான். பின்னொரு சமரில் வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர் வர்மனின் தலைமையில் அவ்வணி பளை ஆட்லறித்தளத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. முழுவதும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதி. எந்தநேரமும் எதிரியோடு முட்டுப்பட்டு சண்டை மூளக்கூடும். இயன்றவரை அவ்வணி இடையில் வரும் சண்டைகளைத் தவிர்க்கவேண்டும். இலக்குவரை வெற்றிகரமாக, சலனமின்றி, எதிரி அறியாவண்ணம் நகரவேண்டும். அவ்வணியில் மொத்தம் பதினொருபேர் இருந்தார்கள்.

குறிப்பிட்ட ஆட்லறித்தளம் வரை அணி வெற்றிகரமாக நகர்ந்தது. நீண்டநாட்களாக துல்லியமான வேவு எடுத்திருந்தார்கள். அதுவும் தற்போது அணியை வழிநடத்திவரும் வர்மனும் ஏற்கனவே வேவுக்கு வந்திருந்தான். எனவே அணியை இலகுவாக இலக்குவரை நகர்த்த முடிந்தது. ஆட்லறித்தளத்தின் சுற்றுக்காவலரண் தொடருக்கு மிக அருகில் வந்துவிட்டார்கள். இனி சண்டையைத் தொடக்கி காவலரணைத் தகர்த்து உள்நுழையவேண்டியதுதான். இந்தநிலையில் காவலரணிலிருந்து 25 மீற்றர்தூரத்தில் அணியினர் இருக்கும்போது எதிரியே சண்டையைத் தொடக்கிவிடுகிறான். தடைக்குள்ளேயே அவ்வணியின் முதலாவது வீரச்சாவு நிகழ்கிறது. கரும்புலி மேஜர் சுதாஜினி என்ற வீராங்கனை முதல்வித்தாக விழுந்துவிட்டாள்.

சண்டை தொடங்கியதும் கரும்புலியணி உக்கிரமான தாக்குதலைத் தொடுத்துக்கொண்டு காவரணைக் கைப்பற்றுகிறது. மின்னல்வேக அதிரடித் தாக்குதலில் எதிரி திகைத்து ஓடத் தொடங்குகிறான். தாக்குதல் நடத்துவது பத்துப்பேர் கொண்ட சிறிய அணியென்பதை அவன் அனுமானிக்கவில்லை. ஆட்லறித்தளத்தைப் பாதுகாத்துநின்ற நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் சண்டை தொடங்கிய மறுநிமிடமே ஓட்டமெடுத்துவிட்டனர். ஆட்லறித்தளம் எஞ்சியிருந்த பத்துப்பேர் கொண்ட அணியிடம் வீழ்ந்த்து.

ஆட்லறிகள் முழுமையாகக் கைப்பற்றப்பட்டன. மொத்தம் பதினொரு ஆட்லறிகள் இருந்தன. ஓடிய எதிரி பலத்தைத்திரட்டிக் கொண்டு மீண்டும் தளத்தைக் கைப்பற்ற வருவான். இருப்பதோ பத்துப்பேர் மட்டுமே. இது தாக்கயழிப்பதற்கான அணி மட்டுமே. மீண்டும் கைப்பற்றவரும் எதிரியோடு சண்டைபிடிக்க முடியாது. ஆனாலும் போதுமான நேரம் இருந்தது. எதிரி உடனடியாக தளத்தைக்கைப்பற்ற முனையவில்லை. குறிப்பிடடளவு நேரம் தளத்தைக் கட்டுப்பாட்டுள் வைத்திருந்து பின்னர் தலைமைப்பீட அறிவுறுத்தலின்படி ஆட்லறிகளைச் செயலிழக்கச் செய்யத் தொடங்கினார்கள். இந்த நடவடிக்கையில் கரும்புலி மேஜர் தனுசன் வீரச்சாவடைந்தான். பதினொரு ஆட்லறிகளையும் செயலிழக்கச் செய்துவிட்டு எஞ்சிய ஒன்பதுபேரும் பாதுகாப்பாகத் திரும்பினர். ஆட்லறிகள் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது குடாரப்புவில் தரையிறக்கம் நிகழ்ந்தது. அவ் ஆட்லறித்தளம் அழிக்கப்பட்டது தரையிறங்கிய அணியினருக்கான உடனடி எதிர்ப்பை இல்லாமல் செய்தது.

தளத்தை அழித்த கரும்புலியணி மீண்டும் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளால் இரகசியமாக நகர்ந்து விடிவதற்குள் பாதுகாப்பாக தளம் திரும்பினர்.

பளை ஆட்லறித்தள அழிப்பு ஆனையிறவு மீட்புப்போரில் மிகப்பெரிய திருப்புமுனை. எதிரிக்கு மிகப்பெரிய பாதிப்பை உண்டுபண்ணியது. இந்த அழிப்போடு தரையிறக்கமும் ஒன்றாக நிகழ்ந்ததால் எதிரி மிகவும் குழம்பிப்போனதோடு உடனடியான எதிர்வினையை அவனால் செய்யமுடியவில்லை. தன்னை மீள ஒழுங்கமைத்து தாக்குதல் தொடங்க குறிப்பிட்ட அவகாசம் தேவைப்பட்டது.



**குடாரப்பில் தரங்கி நீரேரியை கடக்கும் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களுடன் போராளிகள்...**

தாக்குதலின் பின்னணி

குடாரப்புத் தரையிறக்கம் - ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 26, 2000 ஆம் ஆண்டு மாலை நேரம் குடாரப்பு பகுதியினை இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் அடைகின்றனர் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள்.

குடாரப்புத் தரையிறக்க மோதல் - குடாரப்பு பகுதியில் மாலை 8:30 மணியளவில் தரையிறங்கும் வேளை ஏற்பட்ட மோதலில் 16 டோறாப் பீரங்கிப் படகுகள் கொண்ட இலங்கை இராணுவத்தினருடன் கடற்புலிகளின் போர்க்கலங்கள் மோதின.

தரையிறங்கு கலங்களிலிருந்த தமிழீழ விடுதலிப் புலிகளின் போராளிகள் சேதம் எதுவும் ஏற்படாது தரையிறக்கப்பட்டனர்.






கண்டி வீதியில் நிலை கொள்ளல் - குடாரப்பு பகுதியில் தரையிறங்கிய தமிழீழ விடுதலிப் புலிகளின் போராளிகள் தொண்டமனாறு, கடல் நீரேரி ஊடே இத்தாவில் பகுதியில் உள்ள கண்டி வீதியில் நிலை கொண்டனர். இக்கண்டி வீதியினூடாகவே ஆனையிறவுப் படைத்தளத்திற்கான பிரதான விநியோகங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

பளை ஆட்லெறித் தள உள்நுழைவு - கண்டி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் நிலை கொண்டிருக்கும் வேளை பளை ஆட்லெறித் தளத்தில் உட்புகுந்த கரும்புலி, கரும்புலி அணியினர் அங்கமைந்திருந்த 11 ஆட்லெறிகளைச் செயல் இழக்கச் செய்தனர்.

தமிழீழ விடுதலிப் புலிகளின் வழங்கல் தொடர்பு - வெற்றிலைக்கேணி முதல் குடாரப்பு வரையிலான 12 கிலோமீற்றர் தூரம் வரையிலான இலங்கை இராணுவத்தினரின் படை முகாம்கள் அழிக்கப்பட்டு அங்குள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் ஆனையிறவின் பல பாகங்களிலும் உள்ள தமது போராளிகளிடையே வழங்கல் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சித்தனர்.

இலங்கை இராணுவத்தின் தீவிரப்படுத்தப்பட்ட தாக்குதல் - தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளை எதிர்நோக்கிய தீவிர தாக்குதல் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. டாங்கிகள், கவச வாகனங்கள், எறிகணைகள் எனப்பல்வேறு வகையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்களிற்கு எதிர்த் தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

பால்ராஜ் உயிருடன் பிடிபட்ட செய்தி - இத்தாவில் பகுதியில் நிலைகொண்டிருந்த புலிகளின் அணியினை ஒருங்கிணைத்த தளபதி பால்ராஜ் உயிருடன் பிடிபட்ட செய்தியினை தம் களமுனைத் தளபதிகளிடமிருந்து கொழும்புப் படைத் தலைமை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக செய்திகள் வந்தது குறிப் பிடத்தக்கது.

உடுத்துறை வழியான தரைவழி விநியோகம் - வத்திராயன், தாளையடி, மருதங்கேணி முகாம்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டு உடுத்துறை வழியான தரை வழி விநியோகம் மார்ச் 28 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டது. இத் தரைவழி விநியோகத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் எல்லைப்படை வீரர்களும் பங்காற்றினர்.

காமினி ஹெட்டியாராச்சி பதவியிலிருந்து விலக்கப்படல் - இத்தாவில் நிலைகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளினைத் தோற்கடிக்க எட்டுற்கு மேற்பட்ட தடைவைகள் மேற்கொண்ட இலங்கை இராணுவத்தினரால் அவர்களை முறியடிக்காத நிலைக்குத் தள்ளப்பட்டதும் ஆனையிறவுப் படைத்தளத்தில் 53ஆம் படையணியின் தளபதியாக விளங்கிய காமினி ஹெட்டியாராச்சி அவர்தம் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.



ஆனையிறவு படைத்தளத்தில் வெற்றியில் தமிழீழ தேசியக் கொடியை தாக்குதல் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு அவர்கள் ஏற்றிவைத்தார்.

ஆனையிறவுப் படைத்தளம் மீதான முற்றுகை – இலங்கைப் படைத் தரப்பினரின் விநியோகங்களைத் தடுத்தவாறே ஆனையிறவுப் படைத் தளத்தினை முற்றுகையிட்டனர் தமிழீழ விடுதலைப் புலிகள். குடாரப்புத் தரையிறக்கத் தாக்குதல் தொடங்கிய நாளில் இருந்து 34 ஆம் நாட்களின் பின்னர் ஊடறுப்புத் தாக்குதல் யுக்திகளால் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ந்தது.



# அன்னையர் திலகம்



# பூபதி கணபதிப்பிள்ளை

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் ஒன்று கூடி, தொழிலாளர் வேலை செய்யும் நேரம் எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்பட்ட வேண்டும் என்று முதலாளிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். அதில் தொழிலாளர்கள் இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்து கோரிக்கையை வென்றெடுத்த தினமே தொழிலாளர்தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தொழிலாளர்களின் வேலை எட்டு மணித்தியாலங்களாகக் குறைக்கப்படதோடு தொழிலாளர்கள் பிரச்சனைகள் தீர்ந்து விடவில்லை. சுரண்டும் வர்க்கம் வெவ்வேறு வழிகளில் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொண்டு இருக்கிறது.

சுரண்டலின் உச்சக்கட்டமாக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை மிகவும் கொடூரமான முறையில் பல வழிகளிலும் சுரண்டுவதுடன், அங்கே உள்ள தேசிய இனங்களிடையே திட்டமிட்ட ரீதியில் விரிசல்களை ஏற்படுத்தி தொழிலாளர்களிடையே பிரிவினையை வளர்த்திருக்கிறது.

இனவேறுபாடு, மொழிவேறுபாடு, மதவேறுபாடு, பிரதேசவேறுபாடு காரணமாக ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை ஒடுக்குவதற்கு மூல காரணமாக இருப்பதும் ஏகாதிபத்தியமே. இன்றைய மேதினம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களினது, தினமாகவே உலகமெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் ஒடுக்கப்படுகின்ற தமிழ்பேசும் மக்களுக்காக உயிர்த்தியாகம் செய்த அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூருதல் பொருத்தமானதாகும்.

சிறீலங்கா அனவாத அரசால் ஒடுக்கப்படுகினற் தமிழ்த்தேசிய இனத்தின் இறைமையைக் காப்போம், சுதந்திரத்தை நிலைநாட்டுவோம் என்று புறப்பட்ட இயக்கங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர ஏனையை சுவடு தெரியாமல் அழிந்துபோயின. சில ஏகாதிபத்தியத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் பிரஜைகள் குழுக்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள், இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தன.

தொழிலாளர் சங்கங்களும், மாதர் சங்கங்களும், மாணவர் சங்கங்களும், இணைந்து அரசிற்கெதிரான உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்ற வெகுஜனப் போராட்டகளை நடத்தினர்.

இச்சமயம் அன்னையர் முன்னணி, மிதவாத அரசியல் நிலையைக் கடைப்பிடிக்கும் ஒரு சுயாதீன அணியாக நின்று போராட்டங்களை நடாத்தியது.

இவ்வமைப்பு தமிழ்மக்களின் எல்லையில்லா நலன்கருதி எமது பிரச்சனை சம்பந்தமாக நிரந்தரமான தீர்வை, ஒரு புரட்சிகரமான தீர்வை முன்வைக்கவில்லை.

இவர்கள் முன்வைத்த நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அரசு கடைப்பிடிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒரு தற்காலிகமான அமைதியையும், நின்மதியையும் ஏற்படுத்தக் கூடியனவாகவே இருந்தன. தவிர நீண்ட காலப்போக்கில் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இறைமையையும் காக்கக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும், மட்டக்களப்பு அன்னையர் முன்னணி போன்றவை தமது போராட்டத்தில் தீவிரத் தன்மையைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

1987 யூலை 29 இல் இந்தியாவும் சிறீலங்காவும் ஒப்பந்தம் செய்து கொண்டபின், எம்மைச் சூழவிருந்த அரசியல் இராணுவ நிலைகளில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இந்தியா தன்னை ஒரு சமாதானப் பரிரியனாகக் காட்டிக் கொண்டு சதி செய்யப்புறப்பட்டு வந்தது. இந்தியாவின் இத்துரோகத் தனத்தைக் துகிலுரித்துக்காட்டும் அவசியம் எமக்கு ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் அகிம்சைப் போராட்டத்தை எமது ஆயுதமாக்கிக் கொண்டோம். இதில் முதலாவது சத்தியாக்கிரகியாகத் திலீபன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஆகாரமோ நீரோ அருந்தாது தனது சாகும்வரை உண்ணாவிரத்தை நல்லூர் முன்றலில் ஆரம்பித்தான். திலீபனைத் தொடர்ந்து திருகோணமலையில் கிருபாவும், மட்டக்களப்பில் மதனும், முல்லைத்தீவில் திருச்செல்வமும் விடுதலைப் புலிகளின் உண்ணாவிரத்தைத் தொடர்ந்தனர்.

மக்கள் புரட்சி வெடிக்கட்டும், மக்ளுக்காக மரணிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம் என்றான் வீர மரணத்தைத் தழுவிகொண்ட திலீபன்.

விடுதலைப் புலிகள் நடத்திய இந்தப் போராட்டம். இந்திய ஏகாதிபத்தியத்தாலும், சிறீலங்கா இனவாத்தினாலும் அடக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ்பேசும் மகனின் நெஞ்சிலும் விடுதலைத் தீயை மூட்டிவிட்டது.

மேற்கொண்ட இந்திய சிறீலங்கா கூட்டுச் சதியை எதிர்த்துப் பொதுமக்களும் பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் இந்தியா அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் பாரிய துரோகம் இழைத்து விட்டது. உண்ணாவிரதமிருந்த திலீபன் சாக விடப்பட்டான்.

மீண்டும் ஆயுதப் போர் தவிர்க்கமுடியாததாகியது. அமைதி காக்க வென்று காலடி எடுத்து வைத்த, இந்திய இராணுவம் கனிகளையும், காய்களையும், பிஞ்சுகளையும் கசக்கிப் போடடது. ஆம்! ஏராளமான தமிழ் மக்களைக் கொன்று குவித்தது.

இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களை, உயிராபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக நிரந்தர யுத்தநிறுத்தத்தை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று சகல பொதுமக்கள் அமைப்புக்களும் ஒருமித்து கொடிபிடித்தன.

ஆனால் இந்திய அரசுக்கு அவையாவும், செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தது.

இந்திய அரசின் இந்தப் பிடிவாதப் போக்கை உறுதியாக எதிா கொண்ட அன்னையர் முன்னணி, இந்திய அரசின் போக்கில் மாற்றத்தைக் கொண்டுவரத் தமது உயிரையே பணயம் வைக்கத் தலைப்பட்டது. இந்த வேளையில்தான், அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள், பல இலட்சக் கணக்கான தமிழ் பேசும் மக்களை, ஆதிக்க வெறியர்களின் துப்பாக்கிக் குண்டிலிருந்தும், பீரங்கிக் குண்டிலிருந்தும் காப்பதற்காகத் தன்னுயிரை அழித்துக் கொள்ள திடசங்கற்பம் பூண்டார்.

அன்னையர் திலகம் 19-03-1988 இல் தனது பிறந்த இடமான மட்டக்களப்பிலேயே தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

மகிழ்ச்சியோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார். சாதாரண குடும்ப உறவு, பாசவலைகள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு அனைத்துத் தமிழ்பேசும் மக்களினதும் மேல் கொண்ட நேசத்தினால் தன்னுயிரைத் தியாகம் செய்யத் தலைப்பட்டார்.

அன்னையின் வீரமும், உறுதியும் மிக்க போராட்டம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுச்சி அலையை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங்களும் ஆங்காங்கே நடைபெற்றன. (அந்நியரின் அச்சுறுத்தல் மத்தியிலும்)

இந்த நிலையில் அன்னையின் போராட்டம் உலகின் கண்களைத் திறந்து இந்திய அரசின் அமைதிகாப்புப்படலம், இங்கே எவ்வாறு நிகழ்கின்றது என்பதைப் புலப்படுத்திவிடும் என மிரண்ட இந்திய இராணுவம், அன்னையின் உறுதிதளராத போராட்டத்தை, இருட்டடிப்புச் செய்வதற்கும், குழப்புவதற்கும் பல வழிகளிலும் முயன்றது. ஆனால் நடக்கவில்லை. தனது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிட அன்னை மறுத்துவிட்டார்.

ஆனால் இந்திய அரசின் போக்கில் மாற்றமில்லை. அன்னையின் போராட்டம் தொடங்கி முப்பது நாட்களில் அவரின் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக இந்திய அரசின் மமதைக்கு இரையாகியது.

ஐம்பது வருட கால விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த வீரம் செறிந்த குடும்பப் பெண்ணாவார் அன்னையர் திலகம்.

உலகிலேயே உண்ணாவிரதமிருந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதற் பெண்மணியும் இவரே.

அன்னையின் விடுதலை வேட்கையும், தியாகமும் தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராட்டத்தில் என்றுமில்லாத எழுச்சி நிலையை உலகிற்குக் காட்டி நிற்கிறது.

அன்னையின் தியாகவேள்வி முடிவடைந்து இப்போது 35ஆம் ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது. தன்னுடைய உன்னத தியாகத்தால் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட அன்னை அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ச
த்
தி
ய
த்
தி
ற்
க
ா
ச்
ச
ா
க
த்
து




**ணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும். இதற்கு அன்னை பூபதியின் தியாகம் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டு. சத்தியத் திற்காக, தர்மத்திக்காக அவர் சாவை அரவணைத்துக் கொண் டார். இந்த ஒப்பற்ற ஈகையால் ஒரு சாதாரண தாயான அவர், அசாதாரண சாதனையைப் புரிந்து தேசியத்தாய் என்ற அந்தஸ் திற்கு உயர்ந்தார்.**

**அறப்போரிலும் சரி, ஆயுதப் போரிலும் எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கறிது."**

- தமிழீழத் தேசியத் தலைவர் மதகு வே. பிரபாகரன் அவர்கள்



# தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊடகவியலாளர் சந்திப்பு!

2002 ஏப்ரல் மாதத்தின் 10ம் நாள் சிங்களதேசத்தின் ஊடகங்கள் அனைத்தும், இந்தியாவின் அச்சு, ஒலி, ஒளி, இலத்திரனியல் ஊடகங்கள் முழுதும், சர்வதேசத்தின் மிக முக்கியமான ஊடக நிறுவனங்கள் எல்லாம் கிளிநொச்சியில் குழுமி இருந்தனர்.






தமிழர்களின் வரலாற்றில் ஒரு தமிழனின் செய்திக்காக அவர் சொல்லப்போகும் பதில்களுக்காக ஒரே நேரத்தில் இவ்வளவு பத்திரிகையாளர்களும் ஊடகங்களும் குழுமியது வரலாற்றில் முதலானது. அதனைவிட சிங்களதேசத்தின் அதிபர்கள் நடாத்திய எந்தவொரு ஊடகவியலாளர் சந்திப்பிலும் அதுவரை இவ்வளவு பெருந்திரளாக வந்ததே இல்லையென்றே சிங்கள ஊடகங்கள் கூட வர்ணித்திருந்தன அந்த சந்திப்பை. இந்த ஊடகவியலாளர் சந்திப்புக்குத் திகதி குறித்த பின்னர் இது நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வடக்கையும் சிங்கள தேசத்தையும் இணைக்கும் ஏ9 பாதை திறந்துவிடப்பட்டது. தமிழர்களின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் இந்த நாள் மிக முக்கியமான நாளாகும்.

தமிழீழ விடுதலையின் மூலஇயக்கு சக்தியான தேசியத் தலைவர் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஊடகவியலாளர்களுக்கு பேட்டிகள் வழங்கி இருந்தாலும் 2002 ஏப்ரல் 10ம்நாள்தான் விடுதலைப்புலிகள் தமது தலைவருடன் உலக ஊடகவியலாளர்கள் அனைவரும் சந்திக்கும் ஒரு பெரும் அழைப்பை விடுத்திருந்தனர். உலக ஊடகங்களுக்கும் இது வித்தியாசமான ஓர் அனுபவமாகவே அவர்கள் பதிந்தார்கள். அதுநாள் வரைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கைப் பிரகடனமாக, வேலைத்திட்ட அறிவிப்பாக, உலகத்துக்கு செய்தியாக உலகம் கணித்து வந்தது ஒவ்வொரு மாவீரர் நாளிலும் தேசியத்தலைவரின் குரலில் வெளிவரும் மாவீரர் உரையை வைத்துத்தான்.

முதல்முறையாகத் தமது சந்தேகங்களை தமது கேள்விகளை தேசியத் தலைவரிடம் நேரடியாக கேட்பதற்கு கிடைத்த இந்தச் சந்தர்ப்பம் முக்கியமான ஒன்றாகவே கருதப்பட்டது. இது ஒரு புறம் இருக்க, இந்தச் சந்திப்பை சிங்களதேசத்தின் ஆளும்தரப்பு அவ்வளவாக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டதாக இல்லை. தேசியத்தலைவரின் இந்த ஊடகவியலாளர் சந்திப்பை நேரடியாக சிங்களதேசத்தின் தேசியத் தொலைக்காட்சியாக கருதப்பட்ட ரூபவாகினியில் நேரடியாக ஒளிபரப்பியே தீரவேண்டிய தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமும் சிங்களத்துக்கு ஏற்பட்டது.



விடுதலைப்புலிகளை சுற்றி மர்மங்களையும் விடைகள் இல்லாத கேள்விகளையும் தொடர்ச்சியாக இருக்கவைப்பதன் மூலமே விடுதலைப்புலிகளை ஒரு பயங்கரவாத சக்தியாக உலகின் கண்களுக்குள் தக்க வைக்கமுடியும் என்பதே சிங்களத்தின் எண்ணம். இத்தகைய மர்மங்கள் நீங்குவதிலோ, உலகின் கேள்விகளுக்கு விடுதலைப்புலிகளின் அதிஉச்சமான தலைவரே நேரடியாக பதில் வழங்குவதோ சிங்கள ஆட்சியாளர்களுக்கு பிடிப்பதமானதாக இருந்திருக்கவே முடியாது. ஆனாலும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம், மற்றும் முக்கியமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற நாடகத்தில் இத்தகைய அடுத்த தரப்பினரின் இத்தகைய ஊடக சந்திப்புகளை மறுப்பதோ தடை செய்வதோ முடியாது என்பதால் தான் சிங்களமும் இதற்கு ஒப்புகொள்வதாக சொல்லவேண்டி வந்தது. ஆயுதந்தாங்கிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் ஒரு அமைப்பு என்ற முறையில் மாறிவரும் உலக நிலைமைகளில் தமது நிலைப்பாட்டை வெளி உலகத்துக்கு பகிரங்கமாக அதே நேரம் முடிவுகளை எடுக்கும் ஆற்றல் மிக்க ஒரே சக்தியான தேசியத்தலைவரின் குரலில் சொல்வதற்கான சந்தர்ப்பாக இதனைக் கணித்திருந்தார்கள். அதிலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடப்பதற்கு சரியாக ஏழு மாதத்துக்கு முன்னர் உலகின் அனைத்து சமநிலைகளையும் ஆயுதந்தாங்கிய போராட்டங்கள் பற்றிய கணிப்புகளையும் தலைகீழாக மாற்றிய இரட்டை கோபுரச் சம்பவம் 2001 செப்டம்பர் 11ல் நிகழ்ந்தேறி இருந்தது. (இந்த கேள்வியும் தலைவரின் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்டது). இராணுவ பல சமநிலையில் ஏறத்தாழ சிங்கள தேசத்துக்கு ஒப்பானதாக விடுதலைப்புலிகள் அந்நேரம் பலத்துடன் இருந்தாலும் செப்டம்பர் 11க்கு பின்னான உலகின் கேள்விகள் வித்தியாசமானதாக இருந்ததால், அதற்கு தேசியத் தலைவர்தான் பதில் அளிப்பது காத்திரமானதாக இருக்கும் என்பதாலும் நடாத்தப்பட்டது. இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் அதற்கான தேசியத்தலைவரின் பதில்களுக்கும் அப்பால் தேசியத்தலைவர் தன்னை நோக்கி கேட்கப்பட்ட கேள்விகளை உள்வாங்கும் முறைமையும் எந்தவொரு கட்டத்திலும் உணர்ச்சி வசப்படாமல் ஒரு மிகத்தேர்ந்த தலைவனுக்கு உரிய அணுகுமுறையைக் கையாண்டதாகவே, ஒரு பழுத்த இராஜதந்திரிக்கே உரிய வார்த்தை பிரயோகங்களை வெளிப்படுத்தியதாகவுமே ஆச்சரியத்துடன் உலக ஊடகங்கள் எழுதின. இந்த பத்திரிகையாளர் சந்திப்பு பற்றி அதில் கலந்துகொண்ட சிங்கள ஊடகவியலாளரான ரஞ்சன் பெரேரா கூறுகையில் "பிரபாகரனின் செய்தியாளர் மாநாடு வரலாறு காணாத நிகழ்வாகும். 300க்கும் மேற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மிகுந்த சிரமத்துடன் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். இந்த மாநாடு மூலம் உலகில் விடுதலைப்புலிகளுக்கு இருந்த முக்கியத்துவத்தை உணர முடிந்தது. தேசியத் தலைவர் பிரபாகரனைப் பற்றிய எவ்வளவோ கதைகளும் கற்பனைகளும் பரவி இருந்த வேளையில் செய்தியாளர்கள் மாநாட்டில் மிகச் சாதாரணமாக காட்சியளித்தார். அவரது ஒவ்வொரு சொல்லும் அவரைப் பற்றிய தவறான கருத்துகளை போக்கின என்றே சொல்ல வேண்டும்" என்று சொன்னார். இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தலைவர் கொடுத்த பதில்கள் வெறுமனே அந்த ஊடகம் கேட்ட கேள்விக்கான பதில் என்பதாக மட்டும் இல்லாமல் அதனை பார்க்கும், கேட்கும், வாசிக்கும் உலக அரங்கிற்கு சொல்லப்பட்ட பதில்களாகவே மிகவும் அற்புதமாக அமைந்திருந்தன. என்றுமே சிங்கள பேரினவாதம் அதன் அடக்குமுறை முகத்தை மாற்றிக்கொள்ளாது என்று வரலாற்று அனுபவங்கள் மூலம் தெரிந்து கொண்டிருந்தாலும் பிரிந்து செல்லும் முடிவை மாற்றுவதற்கான அணுகுமுறை சிங்களத்தின் நடைமுறையில்தான் இருக்கின்றது என சொல்லி இருந்தார். மீண்டும் ஆயுதந்தாங்கி போராட விடுதலைப்புலிகள் போகப்போகிறார்கள் என்ற கருத்தை தேசியதலைவரின் வாயால் சொல்ல வைப்பதற்காக "பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால்.?" என்று கேட்கப்பட்டபோது மிகவும் இலாவகமாக வார்த்தையை தெரிவுசெய்து "பேச்சுவார்த்தை தோல்வியடைந்தாலும் தொடர்ந்து சமாதான முயற்சிகளை மேற்கொள்வோம்" என்று சொன்னதும், "பேச்சுவார்த்தையில் அதிபர் சந்திரிகா குழப்பம் ஏற்படுத்துவார் என்று நினைக்கிறீர்களா"? என்று கேட்கப்பட்டபோது சிங்களதேசத்தின் ஒரு அதிபர் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுப்பதற்கு எத்தகைய தடங்கல்களை கொடுப்பார் என்று தெரிந்திருந்தும் "சந்திரிகா குழப்பம் ஏற்படுத்துவார் என்று நாங்கள் நினைக்கவில்லை." என்பதுடன் நின்றுவிடாமல் "அவர் அப்படி ஏதும் செய்தால் அதைப் பார்த்துகொள்வது ரணிலின் பொறுப்பு" என்று சொன்னதன் மூலம்



பதிலிலேயே ரணிலுக்கான செய்தியையும் சொல்லி இருந்தது இன்றும் ஆச்சர்யத்துடன் நோக்கப்படுகிறது. ஏறத்தாழ இதே மாதிரியான கேள்வி ஒன்று இந்த ஊடகவியலாளர் சந்திப்புக்கு பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் 1984ம் ஆண்டு மார்ச் மாதம் 'சண்டே' இதழுக்காக அனிதா பிரதாப்பால் கேட்கப்பட்டபோது "ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓர் உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்தி இருந்திருக்க மாட்டேன்" என்று கூறியிருந்ததும் தலைவர் சிங்களதேச அதிபர்களை எப்படி பார்க்கிறார் என்று காட்டியிருந்தது. என்னை பொறுத்தவரையில் இந்த இனத்துக்கென்று தனியான ஏதும் கைகாட்டிநூலோ, வழிகாட்டி புத்தகமோ தேவையில்லை. தேசியத்தலைவரின் அனைத்து பேட்டிகளையும் அவரது அனைத்து மாவீரர் உரைகளையும் தொகுத்தாலே அதற்குள் இந்த இனம் இப்போது செல்லவேண்டிய திசையும் பாதையும் அதற்கான பக்குவமான முறைகளும் பொதிந்து கிடக்கும். இருள்நிறைந்த இந்நேரத்தில் அவைகளே பாதை வெளிச்சங்களாக ஒளிதரக் கூடியவை.

நன்றி: ச.ச.முத்து


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
அட்சய திருதிய
மார்க்கம் and ஸ்ரில்ஸ்
நியுரங்கனாஸ் தங்க சுரங்கம்
வழங்கும் தமிழர் திருநாளாம் சித்திரை
வருடப் பிறப்பை முன்னிட்டும்
வருகின்ற ஏப்ரல் 21, 22, 23, திகதிகளில்
சிங்கப்பூர் துபாய் நகைகளை மாபெரும்
விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.
Tel: (647) 702-2159
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
SUBRA MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

## புதுக்குடியிருப்பு ஐயன்கேவிலடி படுகொலை 21 ஏப்பிரல் 1985

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் புதுக் குடியிருப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு தொழில் களைச் செய்யும் மக்கள் வாழ்கின்றனர். கூடுத லானவர்கள் விவசாயத்தையே தொழிலாக மேற்கொள்கிறார்கள்.

இக்கிராமம் அடிக்கடி இராணுவச் சுற்றி வளைப்புக்கு உட்படுவதுண்டு. 21-04-1985 அன்று இக்கிராமம் அதிகாலை சுற்றிவளைக் கப்பட்டுப் பல பொதுமக்கள் கைது செய்யப்பட் டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியி ருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களென அடை யாளம் காணப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர். விடுதலை செய்யப்படாத அனை வரும் அன்று மாலை மூன்று மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்து கொண்டு சென்றவர்களில் இரு பத்து நான்கு பேரை இராணுவம் காட்டுக்குள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டது. இவர் களில் இராமநாதன், துரைரட்ணம் ஆகிய இருவரும் காயப்பட்ட நிலையிலும், செபஸ்ரியாம்பிள்ளை, நடனசபாபதி ஆகியோர் காயம் எதுவுமின்றியும் தப்பினார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு உட் பட்டவர்கள் அனைவரையும் இராணுவ ராக் வண்டியில் ஏற்றி ஒட்டுசுட்டான் நோக்கிச் செல்லும் வழியில் காயாமோட்டை என்னும் இடத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்களையம் கைது செய்துகொண்டு இடை யில் இறக்கிவிட்டு சென்றனர். காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று கத்தியபடி பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் கற்சிலைமடுவில் வைத்து மக்க ளைக் கொண்டு ரயர்கள் சேகரித்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச்சென்று ஒட்டுசுட்டான் காவல்துறை நிலையத்தின் பின்புறத்தில் வைத்து ரயர்கள் மீது இறந்தவர்களின் உடல் களை அடுக்கித் தீமூட்டி எரித்தார்கள்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் துரைரட்ணம் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,
“அதிகாலையில் நகரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்தனர். அதில் அரசாங்க ஊழியர்கள் விடுவிக்கப்பட் டனர். விசாரணை முடிந்த பின்னர் எல்லோரையும் 3.00 மணியளவில் ஏற்றி ஒட்டுசுட்டான் வீதி நோக்கிச் சென்றனர். பின் காட்டுப்பகுதியில் வைத்து எல்லோரையும் இறக்கி அவ்வீதியிலிருந்த சிறு வீதியில் வைத்து வரிசையாக நிறுத்திச் சுட்டனர். இதில் நானும் நடனசபாபதியும் படுகாயத்துடன் உயிர் தப்பினோம்.”

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. கனகசுந்தரம் கருணானந்தம், 39, -
2. சீனி ஜோசப், 32, -
3. சீனி தேவதாஸ், 24, -
4. அதிரியான் அமலதாஸ், 19, -
5. அப்பையா இந்திரன், 32, -
6. றைமேந்து இருதயநாதன், 45, -
7. தாமோதரம்பிள்ளை, 20, -
8. மாணிக்கம் பௌளின்ராசா, 21, -
9. கிட்டினன், 32, -
10. சங்கரப்பிள்ளை சத்தியசீலன், 21, மாணவன்
11. சிங்கரத்தினம் இளங்கோ, 18, மாணவன்
12. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, 32, விவசாயம்
13. அந்தோனிப்பிள்ளை டைட்சிங்ஸ்சி, 16, தொழிலாளி
14. அப்பையா புவனேந்திரன், 32, விவசாயம்
15. வினாயகமூர்த்தி ரகுநாதன், 28, தனியார்தொழில்
16. பெரியதம்பி பாலசுந்தரம், 30, தொழிலாளி
17. இலட்சுமணன், 30, -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

## பட்டித்திடல் படுகொலை – 26 ஏப்பிரல் 1987

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரி லிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவ சாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர் களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத் தினரின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்றவண்ணம் இருந்தன. பட்டித்திடற் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.

பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலை யின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிக சாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரைவிட்டு அகன்று விட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக் களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடும்ப மான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறீத்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறைவழிபாட்டில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர்.

வீடுவீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத் தினர் இறைவழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும், குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும், வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந் தைகளும் பாடசாலை மாணவ, மாணவி களும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டி லிருந்து கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. உலகநாதன் ஜெயப்பிரியா - 06
02. உலகநாதன் ஜெயரதி குழந்தை 01
03. உலகநாதன் யோகேஸ்வரி வீ.பணி 26
04. கோணன் பத்தினியன் தொழிலாளி 42
05. பத்தினியன் சீதையம்மா வீ.பணி 34
06. பத்தினியன் நேசன் மாணவன் 17
07. பத்தினியன் பிரகாஸ் மாணவன் 13
08. பத்தினியன் சோபனா மாணவி 12
09. பத்தினியன் கிருசாந்தி மாணவி 10
10. பத்தினியன் அற்புதராசா மாணவன் 08
11. கோணன் பொன்னம்மா வீ.பணி 60
12. கோணன் மேரி - 23
13. சின்னத்துரை யோகேஸ்வரி - 29
14. சிந்தாமணி பாலமுருகன் மாணவன் 11
15. சிந்தாமணி யோகராசா மாணவன் 14
16. சிந்தாமணி கோகுலேஸ்வரி மாணவி 15
17. சிந்தாமணி செந்தில்மணி கமம் 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

## கரப்பொழை, முத்துக்கல் படுகொலை ஏப்பிரல் 1987

கரப்பொழை, முத்துக்கல் கிராமங்கள் பொல நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களாகும். இக்கிராம மக்களின் பிரதான தொழில் கூலிவேலை செய்தல், மந்தை வளர்த்தல், காடுகளிற் தேனெடுத்தல் என்பனவாகும்.

29.04.1992 அன்று நள்ளிரவு இராணுவத் தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து பகல் முழுவதும் வேலை செய்த களைப்பில் இரவு நல்ல உறக்கத்திலிருந்த கரப்பொழை, முத்துக்கல் கிராமமக்களை, அவர்களின் வீடுகளினுட் புகுந்து வெட்டிப் படுகொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென தொண்ணூற்றேழிற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இரண்டு கிராம மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# புத்தூர் படுகொலை – 18 ஏப்பிரல் 2006

புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கி விடுவார். வழமைபோல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கர வண்டியில் மேலும் மூன்று நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில் நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கர வாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள். இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.















இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி கௌரிபாலன், 32
02. செல்லன் கமலதாசன், 25
03. தங்கராசா கவீந்திரன், 23
04. மகாதேவன் கிசோக்குமார், 22
05. சுப்பிரமணியம் கண்ணதாசன், 27

# திருகோணமலை மூதூர் படுகொலை 25 ஏப்பிரல் 2006

திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்பிரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறீலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களென 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நசுக்கப்பட்ட 12 பொதுமக்களின் உடல்கள் இத்தாக்குதலின் பின் கண்டெடுக் கப்பட்டது. இதில் 4, 15, 16 வயதான மூன்று சிறுவர்கள் அடங்குவர் இத்தாக்குதலைத் தொடர்ந்து 3000 குடும்பங்கள் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 25 பொதுமக்கள் மேற்சொன்ன தாக்குதலில் காயப்பட்டவகளாவர்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. ஞானசேகரம் ரேணுகரன், 23
2. செல்வராணி, 32
3. மெய்யன், 34
4. மெய்யன் கிருசாந்தன், 04
5. நாகையா ருக்குமணி, 49
6. நவரட்னம் ரஞ்சிதமலர், 56
7. பத்தினியன் நாகம்மா, 67
8. தர்மலிங்கம் சுரேஸ்ரூபன், 23
9. துரையப்பா ரதீஸ், 15
10. வரதன் ராஜ்குமார், 16
11. வீரபத்திரன் பகவதிப்பிள்ளை, 67
12. ஏ.மயூரன், 21
13. விழிராசா மயூரன், 21



# நாட்டுப்பற்றாளர் நாள் அன்னை பூபதி ஒரு குறியீடு!

தமிழீழத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதி அவர்களின் நினைவு தினத்தை, நாட்டுப் பற்றாளர் தினமாக 2006ம் ஆண்டு தமிழீழத்தேசியத் தலைமை பிரகடனப்படுத்தியிருந்தது.

அன்னை பூபதியின் நினைவு தினத்தை நாட்டுப்பற்றாளர் தினமாகத் தமிழீழத்து மக்களும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் உணர்வு பூர்வமாக நினைவு கூர்ந்து வருகின்றார்கள். விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் நாட்டுப்பற்றாளர்கள் எவ்வளவு ஒரு பெரிய சக்தியாக திகழ்ந்து வருகின்றார்கள் என்கின்ற உண்மையைத் தர்க்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழீழத் தேசத்தினுள் நுழைந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறித் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தமிழீழத் தேசியத்திற்குத் ஆதரவாக தமிழீழப் பொதுமக்கள் பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினார்கள். இந்தத் தேசத்திற்கான பங்களிப்புக்களின் சிகரமாக தியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.

'இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்'- என்று கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள் அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1988ம் ஆண்டு மார்ச் மாதம் பத்தொன்பதாம் திகதி சனிக்கிழமை காலை 10-45 மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மரநிழலின் கீழ் அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் மிக நெருக்கடியான வேளையைச் சந்தித்த காலம் அது! "இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடி எடுத்து வைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன். எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது ஓர் இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்" - என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் இந்த இராணுவ ஆக்கிரமிப்புக் குறித்துக் கூறுமளவுக்கு அன்றைய காலகட்டம் பல நெருக்கடிகளை நேர்கொண்டது. உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியப் படையினர் ஒரு புறம் சிங்கள பௌத்தப் பேரினவாத சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் சிறீலங்காவின் இராணுவம் மறு புறம் இவையிரண்டிற்கும் துணையாக நிற்கின்ற தமிழ் ஒட்டுக்குழுக்கள் ஒரு புறம் என்று ஈழத் தமிழினம் இன்னல்களை எதிர்கொண்ட வேளை அது! தேசியத் தலைவர் சொன்னதுபோல் தமிழீழப் போராட்ட வரலாற்றில் இருண்ட அத்தியாயத்தின் காலம் அது!

இத்தனை அபாயங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் ஒரு சாதாரணப் பெண்மணி, குடும்பத் தலைவி, எவற்றிற்கும் அஞ்சாமல் தனது போராட்டத்தை அகிம்சை வழியில் ஆரம்பிப்பதற்கு எத்துணை நெஞ்சுரமும், தியாக மனப்பான்மையும் அவருக்கு இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

"எம்மைப் பாதுகாக்கவென வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாகவே மாறிவிட்டார்கள். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம். வீரச்சாவுகளை கண்டு நாம் பழகிப் போனவர்களே. எனது இறப்பை அடுத்தும், எமது நோக்கை நாம் அடைவோம். ஒருபோதும் அன்னையர் முன்னணி தளராது" - என்று அன்னை பூபதி அவர்கள் தியாக உணர்வோடு, நெஞ்சுரத்தோடு முழங்கினார்.

1988ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை காலை 10-45 மணிக்குத் தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்களின் இறுதி மூச்சு, தமிழீழக் காற்றோடு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-45 மணியளவில் கலந்து பரவியது.

**முப்பத்தியொரு நீண்ட நாட்கள்!**

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அன்னை பூபதி அவர்கள் போராடினாரோ அந்த இராணுவம் - இந்திய இராணுவம் - பாரிய இழப்புக்களுடனும், அளவிடற்கரிய அவமானத்துடனும் தமிழீழத்தை விட்டு 24-03-1990 அன்று வெளியேறிச் சென்றது.




திருமதி பூபதி கணபதிப்பிள்ளை என்கின்ற ஒரு சாதாரணத் தமிழ்ப் பெண்மணியின் விடுதலை வேட்கையும் அதற்கான தியாகமும் நாட்டுப்பற்றின் சிகரமாக அமைந்தன.

அன்னை பூபதியின் தியாகத்திற்கு முன்னரும் பின்னரும் தமிழீழத்தில் எத்தனையோ நாட்டுப்பற்றாளர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் யாவருடைய நாட்டுப்பற்றும், தியாகமும், பங்களிப்பும் எந்த ஒரு விதத்திலும் எவருடைய தியாகத்திற்கும் குறைவானதல்ல! ஆயினும் சகல நாட்டுப்பற்றாளர்களினதும் ஒரு குறியீடாக அன்னை பூபதி அவர்கள் விளங்குவது ஒரு பொருத்தமான விடயம் என்றே நாம் கருதுகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகத் தமது பங்களிப்புக்களை நல்கி வந்த நல்கி வருகின்ற சகல நாட்டுப்பற்றாளர்களில் தமிழ்ப்பெண்ணினத்தின் பங்களிப்பு என்பதானது தனித்துவமானது! தமது இனத்திற்கு எதிராக நடத்தப்படுகின்ற ஆக்கிரமிப்புப் போர்களுக்கும் வன்முறைகளுக்கும் பெண்கள் கொடுக்க கூடிய விலையும் அளப்பரியது. தங்களுடைய கணவன்மார்களையும், தங்களுடைய புதல்வர்களையும் அவர்கள் பறிகொடுத்தார்கள். அந்நியப் படைகளின் பாலிய வல்லுறவுகளுக்கும் ஆளானார்கள். தாங்களும் கொலை செய்யப்பட்டு இறந்தார்கள். இவற்றிற்கும் அப்பால் தங்களது குடும்பங்களைப் பாராமரித்துக் கொண்டு தமது நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பினையும் தொடர்ந்து செய்து வந்தார்கள்.

ஒரு போராட்டக் காலத்தில் பெண்ணின் பங்கு கணிசமானது என்பதைப் போராட்ட வரலாறுகள் இன்றும் உணர்த்தி நிற்கின்றன. போராளிகளுக்கு உணவு அளிப்பதுவும், உறைவிடம் தந்து உபசரிப்பதுவும், காயம் பட்டவர்களைப் பராமரிப்பதுவும் பெண்களாகத்தான் இருந்து வருகின்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ்ப் பெண்ணினத்தின் பங்களிப்பானது உலக சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒப்பீட்டளவில் உன்னத இடத்தை வகிக்க கூடிய ஒன்றாகும்.

இந்த வகையில் ஒட்டு மொத்தத் தமிழீழப் பெண்களினதும், தமிழர்களினதும் ஆத்திரத்தினையும் சுதந்திர வேட்கையையும் வெளிப்படுத்தும் விதமாகவே அன்னை பூபதியின்

**அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை. தமிழீழத் தாயக்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.**
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

# தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

அகிம்சைப் போராட்டத்தை நாம் கருத வேண்டும். ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியிருந்தபடி உலகத்தின் நான்காவது பெரிய இராணுவமான இந்தியப் படைகளின் வன்முறைகளையும் சிங்கள இராணுவத்தின் நெருக்கடிகளையும் தமிழ் ஒட்டுக் குழுக்களின் அடாவடித்தனங்களையும் ஒருங்கு சேர எதிர் கொண்டு, அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தை சாகும்வரை மேற்கொண்டது என்பதானது விடுதலை வேட்கை யின் உறுதியின் உச்சமானதுமாகும்.

ஓர் இனத்தின் அரசியல் விடிவிற்காகவும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகவும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்தி, உயிர்த் தியாகம் செய்திட்ட உலகின் முதற் பெண்மணி என்ற வகையிலும் ஒரு சாதாரணக் குடும்பப் பெண் தனது தனிப்பட்ட வாழ்வைத் துறந்து, தனது நாட்டுக்காக முன்னெடுத்த உண்ணாவிரதப் போராட்டம் என்ற வகையிலும் அன்னை பூபதி அவர்களின் போராட்டம் பல விழுமியங்களைத் தொட்டு நிற்கின்றது. இவர் ஒரு விடுதலைப் போராளி அல்லர்! விடுதலைப் போராளி என்ற வகையில் தியாகி திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை ஈந்திருந்தார். ஆனால் போராளியாக இல்லாத ஒருவர் - சாதாரணப் பெண்மணி - குடும்பத் தலைவி – தன்னைத் தன் மக்களுக்காக மட்டுமன்றி, தனது போரா ளிகளுக்காகவும் தன்னைத் தற்கொடையாக்கிய செயல் என் பதானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்!

மக்களைக் காப்பாற்றுவதற்காகத் தம் உயிரைத் தருகின்ற போராளிகளின் இலட்சியத்திற்காகத் தன் உயிரைத் தாரை வார்க்க முன்வந்த அன்னை பூபதியின் தியாகம் நாட்டுப்பற் றாளர்களின் தியாகத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் ஒரு குறி யீடாகும்! அந்த வகையில் அன்னை பூபதியின் நினைவு தினம் என்பதானது, “நாட்டுப்பற்றாளர் தினம்” என்று தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப்படுத்தப்பட்டது மிகப் பொருத்தமானதாகும்.

அன்னை பூபதி அவர்கள் தமிழீழ நாட்டுப் பற்றாளர்களின் குறி யீடாக அறியப்படுகின்ற இந்த வேளையில், நாட்டுப்பற்றாளர் களின் சக்தி குறித்துச் சில கருத்துக்களை முன் வைப்பது பொருத்தமானதாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

ஒரு தேசத்தின் நாட்டுப்பற்றாளர்கள் விடுதலைப் போராட் டத்தைத் தாங்குபவர்களாக இருந்து வருகின்றார்கள். நாட்டுப் பற்றாளர்களை அழிப்பதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடுகின்ற முயற்சியில் அடக்குமுறை அரசுகள் தொடர்ந்தும் செயல்பட்டு வந்திருப்பதை வரலாறு சுட்டிக் காட்டு கின்றது. ஈராக்கில் போர் புரிகின்ற அமெரிக்க இராணுவத் தினருக்குப் போர்த்திரைப்படம் ஒன்றை அமெரிக்க அரசு திரையிட்டு காட்டியிருப்பதாக முன்னர் செய்திகள் தெரிவித் திருந்தன. இச்சம்பவம் குறித்துச் சற்று ஊன்றிக் கவனித்தால் புலப்படாத பல விடயங்களை நாம் அவதானிக்கக் கூடும்.

இந்தப் போர்த் திரைப்படத்தின் பெயர் ‘Battle of ALGIERS’. இத் திரைப்படம் ஒரு புதிய திரைப்படமும் அல்ல! ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் இத் திரைப்படம் வெளி வந்திருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். இந்த நவீனகாலத்தில் அதாவது போரியல் துறையானது மிகுந்த தொழில் நுட்ப வளர்ச்சியை அடைந்துள்ள இக்காலகட்டத்தில் மிகப் பழைய திரைப்படம் ஒன்றை அமெரிக்க அரசு தன்னுடைய இராணுவத் தினருக்குத் திரையிட்டுக் காட்ட வேண்டிய காரணம் என்ன?

**இதற்குப் பின்னால் மிக முக்கியமான காரணம் உள்ளது.**

இந்த ‘Battle of ALGIERS’ என்ற போர்த் திரைப்படம் பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்பை எதிர்த்து அல்ஜீரிய மக்கள் நடாத்திய போராட்டத்தைச் சித்தரிக்கின்றது. அல்ஜீரியா சுமார் நூற்றியிரு பத்திநான்கு ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டின் காலனித்துவ ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தது. அல்ஜீரியாவின் சுயாட் சிக்கான இந்தப் போராட்டத்தை எதிர்த்து மிகக் கொடூரமான முறைகளில் படு கொலைகளை பிரான்ஸ் கட்டவிழ்த்து விட்டது. அல்ஜீரியாவின் நாட்டுப்பற்றாளர்கள் ஈவு இரக்கமின்றிப் படு கொலை செய்யப்பட்டார்கள். மிகக் கொடுமையான சித்திரவதை களுக்கும் ஆளானார்கள். அல்ஜீரிய மக்களின் மனவலிமை யைக் குலைத்து அவர்களைப் போராட்டத்தில் இருந்து விலக்குவதற்காகச் சகலவிதமான கொடூரங்களையும் பிரான்ஸ் இராணுவம் மேற்கொண்டது.

ஆயினும் அல்ஜீரிய மக்கள் தொடர்ந்து போராடினார்கள். மிகக் கொடிய வறுமைக்கு மத்தியில் கண்ணீரையும் துன்பத்தையும் சுமந்து கொண்டு தமது விடுதலைக்காக அவர்கள் போரா டினார்கள். மிகப் பெரிய அவலங்களையும் இழப்புக்களையும் அவர்கள் எதிர்கொண்டார்கள்.

1954ம் ஆண்டு தொடக்கம் 1962ம் ஆண்டு வரையில் இந்த யுத்தம் நீடித்தது. கடைசியில் அல்ஜீரிய மக்களின் போராட்டம் வெற்றி பெற்று பிரான்ஸ் வெளியேறியது.

ஆனால் இந்தப் போராட்டத்தைச் சித்தரிக்கின்ற திரைப்படத்தை ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு அமெரிக்க அரசு திரையிட்டுக் காட்ட வேண்டிய அவசியம் என்ன?



ஏனென்றால் இந்தப் போர்த் திரைப்படம் ஒரு மக்கள் போராட் டத்தை அடக்குவதற்குரிய கொடிய வழிகளைப் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றது. எப்படிப்பட்ட கொடிய வழிகளை உபயோ கித்து பிரான்ஸ் இராணுவம் அல்ஜீரிய மக்களை - நாட்டுப்பற் றாளர்களை - துன்புறுத்திக் கொன்று அவர்களின் மன உறுதியைக் குலைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதனை இத் திரைப்படம் விபரமாகச் சித்தரித்துள்ளது. பிரான்ஸ் இராணுவத்தின் இந்தக் கொடிய வழிமுறைகள் ஈற்றில் பலன் அளிக்காமல் போயிருந்தாலும் அன்று ஒரு போராட்டத்தை அழிப்பதற்கு எத்தகைய வழி முறைகள் கையாளப்பட்டன என்பதை இந்தத் திரைப்படம் எடுத்துக் காட்டியுள்ளது.

இதனைத்தான் ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு அமெரிக்க அரசு எடுத்துக் காட்டியுள்ளது.

இந்தத் திரைப்படத்தைத் திரையிட்டுக் காட்டிய சம்பவம் ஒரு விடயத்தை மீண்டும் நிரூபணமாக்கியுள்ளது. அதாவது ஒரு மக்கள் எழுச்சிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென்றால் அந்தப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் நாட்டுப்பற்றாளர்களை முதலில் நசுக்க வேண்டும் என்று அடக்கு முறையாளர்கள் தொடர்ந்து சிந்தித்தும் செயல்பட்டும் வருவதை இச்சம்பவம் நிரூபித்து நிற்கின்றது.

அந்த அளவிற்கு ஒரு விடுதலைப் போராட்டத்தைத் தாங்கி நிற்பவர்கள் நாட்டுப்பற்றாளர்கள் என்பதை வரலாறு சுட்டிக் காட்டி நிற்கின்றது.

இந்த வரலாற்று உண்மைகளின் அடிப்படையில்தான் தமிழீ ழத்து நாட்டுப்பற்றாளர்களையும் அவர்தம் அளப்பரிய பணி யையும், தியாகத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில சமயங்களில் விடுதலைப்புலிகள் எதிர் கொள்ளாத இடர்களை நாட்டுப்பற்றாளர்கள் எதிர் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இங்கே அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். போராளிகள் கள யதார்த்த நிலைக்கும் போர் முறைகளுக்கும் ஏற்ப இடம் மாறிச் செல்வார்கள். ஆனால் பொது மக்களாகிய நாட்டுப் பற்றாளர் களோ தமது வதிவிடத்திலேயே தொடர்ந்து தங்கியிருந்து ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடுவார்கள். ஆக்கிரமிப்பின் வன்முறையை எதிர்ப்பதற்குத் தம்மிடம் படைக்கருவிகள் இல்லாதபோதும் அந்த வன்முறைக்கு முகம் கொடுத்து அதனை உள்வாங்குவார்கள். அதன் காரணமாக உயிரழிவையும், சொத்தழிவையும் தாங்கியும் கொள்வார்கள். ஆயினும் தொடர்ந்தும் விடுதலைப் போராட்டத்தைத் தாங்கி நிற்பார்கள்.

சிறீலங்கா அரசுகளும் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு உத்திகளைக் கையாண்டு தமிழீழத்து நாட்டுப்பற்றாளர்களை அழிக்கவும் அடக்கவும் முயன்று வருகின்றன. ஆனால் நாட்டுப் பற்றாளர்களின் விடுதலை வேட்கையை அழித்து விடமுடியாது என்பதைப் பல்வேறு விடுதலைப் போராட்டங்களோடு தமிழீழ விடுதலைப் போராட்டமும் நிரூபித்து நிற்கின்றது.

இங்கே மேலும் ஒரு மிக முக்கியமான விடயத்தையும் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். அன்னை பூபதி அவர்களின் அகிம்சை வழியிலான உண்ணாவிரதப் போராட்டமும் தியாகி திலீபனின் அகிம்சை வழியிலான உண்ணாவிரதப் போராட் டமும் சமாதானத்தினை வேண்டி நடாத்தப்பட்ட போராட்டங் களாகும். சமாதானத்தையும், அமைதியையும் நாடி நடாத்தப் பட்ட அமைதி வழி அகிம்சைப் போராட்டங்களை ஆதிக்க சக்திகள் பொருட்படுத்துவதில்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அடிப்படையில் மகாத்மா காந்தியின் போதனைகளையும் அகிம்சை வழிப் போராட்டங்களையும் ஏற்றுக்கொண்ட ஒரு தேசம்தான் இந்தியா! ஆனால் அத்தகைய இந்தியா கூட அடக் குமுறை என்று வரும்போது அகிம்சையையும் சமாதானத் தையும் தூக்கி எறிந்து விடுகின்றது என்பதற்கு அன்னை பூபதியும் தியாகி திலீபனும் சாட்சிகளாக விளங்குகின்றார்கள். அகிம்சையைப் போதிக்கின்ற இந்தியாவே இவ்வாறு நடந்து கொள்ளும்போது தொடர்ந்து இரத்தவெறி கொண்டு அடக்கு முறையை மேற்கொண்டு வருகின்ற சிங்கள பௌத்தப் பேரின வாத அரசுகள் சமாதானத்தைக் கடைப்பிடிப்பார்கள் என்று எவ ராவது இன்றும் நம்புவார்களாக இருந்தால் அது மடமைத் தனமானதாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை தமிழீழத்து நாட்டுப் பற்றாளர் களைச் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் கொலை செய்து வரு வதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்குரிய காரணங் களையும் நாம் வரலாற்று ரீதியாகத் தர்க்கித்திருந்தோம். ‘மக்கள் எழுச்சிப் பேராட்டத்தை அடக்கி ஒடுக்க வேண்டு மென்றால் அந்தப் போராட்டத்தைத் தாங்கி நிற்கும் நாட்டுப் பற்றாளர்களை நசுக்க வேண்டும்’ என்று அடக்கு முறை யாளர்கள் தொடர்ந்து சிந்தித்தும் செயல்பட்டு வருவதையும் தமிழீழத்து நாட்டுப்பற்றாளர்கள் மீதான படுகொலைகள் நிரூபித்து நிற்கின்றன.

இத்தகைய உயரிய நாட்டுப்பற்றாளர்களும் அவர்களுடைய குறியீடான அன்னை பூபதியும் எம் போன்ற சாதாரண மக்களுக்கு மிகச் சிறந்த உதாரணங்களாகத் திகழுகின்றார்கள்.

நன்றி: சபேசன் சண்முகம்


**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

**RASAN** Cell: 647.532.4162
Off: 647.821.0356

rassan311@gmail.com www:jathurenovation.com



# Preparation of Income Taxes T1 and T2 with E/File

**Location:**
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6

**Tel: 905.554.5606**
**Fax: 905-554-3236**



Please contact:
**Yo K Gamar ( C.M.A)**
**Cell : 416-917-7263**
Accountant since 1993

# The ESTATE

BANQUET AND EVENT CENTRE



**The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"**

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions

**For all events ranging from 50 - 500 Guests**
**International Menu with Premium Bar**

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4

**Tel:416 400 5993**

info@estatebanquets.com www.estatebanquets.com

## Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




**Let us help with...**

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

# PTR DOORS & WINDOWS

-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com






# அனுராதபுரத்தில் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த காளி கோயில்




20.07.2017

அனுராதபுரம் புனித நகரில் கவனிப்பாரற்று அவல நிலையில் கிடக்கும் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த காளி அம்மன் கோயிலும், அங்கு கண்டெடுக்கப்பட்ட அழகிய அம்மன் சிலையும்.

ஒரு தடவை அனுராதபும் புனித நகரத்திற்குச் சென்றபோது மிகவும் மோசமான, அவல நிலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த பண்டைய காளி கோயிலின் இடிபாடுகளைக் கண்டேன். இக் கோயில் சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

அனுராதபுரம் புராதன நகரின் மத்தியில், தூபராம தாதுகோபத் திலிருந்து அபயகிரி தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் பாதையின் இடது பக்கத்தில் இக்காளி அம்மன் கோயில் அமைந் திருந்தது. தூபராம தாதுகோபத்தின் வடக்குத் திசையில் 500 மீ தொலைவில் வீதியின் இடது புறத்தில் இக்கோயிலின் இடி பாடுகள் காணப்படுகின்றன. இவ்வீதி முன்பு வை வீதி என அழைக்கப்பட்டது. புராதன அனுராதபுரக் கோட்டையின் மேற்கு வாசலுக்கு நேராக இவ்வாலயம் அமைந்திருந்தமை குறிப்பிடத தக்கது.

அகழியாலும், அரணாலும் சூழப்பட்ட இக்கோட்டைப் பகுதியில் முதலாம் விஜயபாகுவின் அரண்மனையின் இடிபாடுகளும் கெடிகே, தலதாமாளிகை போன்றவற்றின் எச்சங்களும் காணப் படுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அனுராதபுரக் கோட்டையின் மேற்கு வாசற் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது ஆய்வாளர் உ.ஊ.டீ. பெல் அவர்களால் இங்கிருந்த இந்துக் கோயிலின் இடிபாடுகளும், சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடிபாடுகளுக்கு மத்தியில் அழகிய அம்மன் விக்கிரகம் ஒன்றும் கண்டெடுக் கப்பட்டது. இச்சிலை மகிஷமர்த்தினியின் தோற்றத்தை உடைய தாகும்.

அனுராதபுரம் காளி கோயிலில் கண்டெடுக்கப்பட்ட இந்த மகிஷமர்த்தினி அம்மன் சிலை இலங்கையில் கிடைக்கப்பெற்ற தெய்வச் சிலைகளிலேயே மிகவும் உன்னதமானதும், அழகிய வடிவமைப்பையும் கொண்டதாகும். எட்டு கைகளையுடைய



இந்த அம்மன் சிலை ஓர் செங்குத்தான நீள் வட்டக்கல்லில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

அம்மனின் முகத்தில் மூக்குப்பகுதி சற்று சிதலமடைந்து காணப் படுகின்றது. மேலும் சிலையின் அடியில் கணுக்கால் பகுதி முற்றாக வெடித்து சிலை இரண்டு துண்டுகளாகக் காணப் படுகிறது. வெடித்த இந்தப்பகுதி சிலையுடன் சேர்த்து ஒட் டவைத்து முழுமையாக்கப்பட்டுள்ளது.

அம்மனின் எட்டுக் கைகளிலே மேற்பகுதியிலுள்ள கைகளில் சங்கும், கதாயுதமும் ஏந்திய வண்ணம் உள்ளன. அடுத்த இரண்டு கைகளில் வாளும், வில்லும் காணப்படுகின்றன. அடுத்த இரண்டு கைகளில் உள்ள ஆயுதங்கள் உடைந்திருக் கலாம் எனத் தெரிகிறது. இக்கைகளில் திரிசூலமும், ஈட்டியும் இருந்திருக்க வேண்டும். கீழே உள்ள கைகளில் இடது கையில் பெரிய கத்தியை நிலத்தில் ஊன்றிய வண்ணமும், வலது கையை இடுப்பில் வைத்தவாறும் செதுக்கப் பட்டுள்ளது.

தலையிலே கிரீடமும், காதுகளில் வளையமும், தோள்களிலே அம்புக் கூடையும், கழுத்திலே மணிமாலைகளும், மார்பிலே ஆடை அணிகளும், கைகளிலே வளையல்களும், இடையிலே ஒட்டியாணமும், இடுப்பிலே கச்சையும், கால்களிலே சிலம்பும் அணிந்த வண்ணம் வடிவமைக்கப்பட்ட இத்தனை நேர்த்தி யான புராதன சிலையை இலங்கையில் வேறு எங்கும் காண முடியாது.

இப்படிப்பட்ட அழகிய, நேர்த்தியான மகிஷமர்த்தினியின் சிலை கொழும்பு தேசிய நூதனசாலையை அலங்கரிக்கும் அதே வேளை, இச்சிலையைப் பாதுகாத்த கோயில் கவனிப்பாரின்றி பற்றைகள் வளர்ந்து கற்தூண்கள் அங்கொன்றும், இங்கொன் றுமாக வீசப்பட்டு அவல நிலையில் காணப்படுகின்றது.



இந்த மகிஷமர்த்தினியின் உருவம் நானாதேசிக வணிகர் களின் வணிக முத்திரையிலும் பொறிக்கப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது. நானாதேசிக வணிகர்கள் அனுராதபுரத்தில் அரச செல்வாக்குப் பெற்று விளங்கியிருந்தபடியால், இவர்களின் வர்த் தக நகரங்கள் அனுராதபுரத்தின் பிரதான பௌத்த விகாரை களுக்கு சமீபத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. இவர்களின் குலதெய்வமான பரமேஸ்வரியின் வடிவமே மகிஷமர்த்தினி என்பதால் இவ்வம்மனை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆல யத்தை இவ்விடத்தில் அமைத்திருந்தனர். இவ்வாலயம் பொலநறுவைக் காலத்தில் அமைக்கப் பட்டிருந்தது.





தூபராம தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் இவ்வாலயம் அமைந்திருந்ததால், தாதுகோபத்தைத் தரிசிக்க வரும் மக்கள் அதிகமாகக் கூடும் இடமான இப்பகுதியில் வணிகர்களின் விற்பனை நிலையங்கள் இருந்த இடத்திற்கு அருகிலேயே அவர்களால் அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது என்று ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வம்மன் ஆலயம் கர்ப்பக்கிருகம், அந்தராளம், மண்டபம் போன்ற பகுதிகளைக் கொண்டிருந்தது. 20 தூண்கள் கூரையைத் தாங்கியிருந்தன. கோயில் பிரகாரத்தின் மதில்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன.

பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான லீலாவதி தனது ஆட்சியின் போது அனுராதபுரத்திலுள்ள தூபிகளைத் தரிசிக்க வரும் மக்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக ஓர் தான சாலையை அமைத்தாள். இதற்கு வேண்டிய அரிசி முதல் சரக்குகள் போன்ற பொருட்களை பெறுவதற்காக "பலவலவி மேதாவி" என்னும் மடிகையினை தானசாலைக்கு அருகில் நானாதேசிக வணிகரைக் கொண்டு அமைப்பித்தாள். இத் தானம் பற்றிய லீலாவதியின் கல்வெட்டு ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதன் மூலம் அனுராதபுரத்தில் தமிழ் நானாதேசிக வணிகர்கள் அரச ஆதரவுடன் விற்பனை மையங்களை அமைத்து வணிகத் தில் ஈடுபட்டிருந்தனர் என்பது நிரூபனமாகிறது.

இவ்வணிகர்களால் தமது விற்பனை நிலையங்களுக்கருகில் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வம்மன் ஆலயத் தைத் தவிர வேறுபல ஆலயங்களும் இவர்களால் அனுராதபுரத் தில் அமைக்கப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

அநுராதபுரத்தில் உள்ள பண்டைய பௌத்த வழிபாட்டிடங்கள் எல்லாம் புனரமைக்கப்பட்டு மக்களால் வழிபடப்படுகின்றன. ஆனால் இக்காளி கோயில் புனரமைக்கப்படவில்லை. கண் கொண்டு பார்க்க முடியாத அவல நிலையில் இக்கோயில் காணப்படுவது மனதுக்கு வேதனையை அளிக்கிறது.

என்.கே.எஸ்.திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை.

நன்றி: என்.கே. எஸ். திருச்செல்வம்










விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.

இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

# தமிழ் ஈழத்தின் தாய் அன்னை பூபதி





ஈகைச் சாவடைந்த அன்னை பூபதி அவர்கள்



அன்னைக்கு மகளிர் வணக்கம்



அன்னைக்கு குடும்பத்தினர் வணக்கம்



அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம்

# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?

08.03.2023

வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம், கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம், புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது... போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?




முதலாவதாக, ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவா கூட்டத்தொடர் முடிவுக்கு வந்தது. இரண்டாவதாக, இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போய் வந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களை கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம். அதன்பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவுக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது, ஐ.எம்.எஃப்பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால்இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போடவேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால், அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐஎம்எஃபின் நிபந்தனைகளுக்கு பணிந்து மானியங்களை வெட்டும்போது அல்லது பொது நிறுவனங்களை தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்களப் பொது மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம் உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற முன்நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது. மூன்றாவது காரணம் தன்னை விட்டால் வேறு தெரிவு உலக சமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் அண்மை வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐஎம்எஃபின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும்போது ஏழைகள் கொதித்து எழுவார்கள். பொதுச்சேவை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும்போது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் கொதித்துக்கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இனவிவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன்மூலம் சாதாரண சிங்களமக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல. ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான். தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது. தமிழ்மக்கள் பௌத்தமயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராக போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டுவிடும்.

இது ஒரு காரணம். அடுத்த காரணம், அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.

அவ்வாறு முன்வைத்திருந்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்களபௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் வெளித்தரப்புக்கள் குறிப்பாக மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒரே விதமாகச் சிந்திக்கின்றன. இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜேவிபி படிப்படியாக வளர்ந்து வருவதாகக் கருதப்படுகிறது. இடது பண்புடைய ஒரு கட்சி குறைந்தபட்சம் பலமான எதிர்கட்சியாக மேலெழுவதைக்கூட, மேற்படி நாடுகள் விரும்பாது. எனவே ஜேவிபியின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும். அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

அதாவது ஜே.வி.பிதான் இப்பொழுது ரணிலுடைய பலம். எப்படியென்றால் ஜேவிபி மற்றும் ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றன முன்னெடுத்த “அரகலய” போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது. இப்பொழுது ஜேவிபி பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நிதிமுகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜேவிபி அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும்வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் அதனதன் பயம். இதில் தமிழ் மக்களின் பயத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? நாட்டின் பொருளாதார நெருக்கடியை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக்கூடும். ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனை தமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாகக் கருதிக் கையாள்வதாகத் தெரிகிறது. இலங்கை நொடிந்து போயிருக்கும் காலகட்டத்தில் உதவிகளின்மூலம் இலங்கையை எப்படித் தம்வசப்படுத்தலாம் என்றுதான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குட் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐஎம்எப்பின் கடன் பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன. இப்படியாக பேரரசுகள் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்த தொடங்கினால், உதவிகளையும் இனப்பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும், ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர். ஐஎம்எஃப் போன்ற நிறுவனங்களை ஏற்கனவே கையாண்டவர். எனவே ஏற்கனவே பரிச்சயமான ஒருவரோடு விவகாரங்களை கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃப்பும் கருதக்கூடும். அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக் கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும்வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான். இப்படிப்பார்த்தால், உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான். வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐஎம்எஃப்பிற்கும், உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் கிடைத்துவிட்டது.

எனவே, நிறைவேற்று அதிகாரம், மேற்கத்திய ஆதரவு, ராஜபக்சக்களின் தங்கு நிலை, ஆழங்காண முடியாத தந்திரம், வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவேசம்... போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள் ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச் சிதைந்து போய்விட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால்தான் தன்னையும் நிமித்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம், சஜித்தையும் உடைக்கலாம் என்று அவருக்குத் தெரியும். பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக வேண்டும். மேற்கின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும். அந்த எதிர்ப்பைத் திசைதிருப்ப அவருக்கு இனவாதம் தேவை. அதைத்தான் அவர் செய்கிறார். அதுவும் ஜெனிவாக கூட்டத்தொடர் காலகட்டத்திலேயே செய்கிறார். ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்மக்கள் பலமான ஒரு திரட்சியைக் காட்டமுடியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலை கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களே கோபப்படுத்துகின்றது.

ஒருபுறம் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது. இன்னொரு புறம் அதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் சிங்கள




மக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பி விடுகிறது. ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது. அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவது. ஆகமொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து உழைக்க தொடங்கி விட்டார்.

நன்றி: நிலாந்தன்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் [1957 தொடக்கம் 2005 வரை]:

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| மானவீரன் திருமலைத்தியாகி நடராசன் | திருகோணமலை | 02.04.1957 |
| மாமனிதர் ஆ.இராசரத்தினம | யாழ்ப்பாணம் | 01.01.1976 |
| இரத்தினம் விஸ்வஜோதி (இன்பம்) | யாழ்ப்பாணம் | 17.07.1979 |
| ரி.எஸ்.பாலேந்திரா | | 4.07.1979 |
| ஐயாத்துரை இந்திரராஜன் | யாழ்ப்பாணம் | 21.07.1979 |
| பரநிருபசிங்கம் இறைகுமாரன் | யாழ்ப்பாணம் | 27.05.1982 |
| சிவபாலசிங்கம் உமைகுமாரன் | யாழ்ப்பாணம் | 27.05.1982 |
| அந்திரேஸ்பிள்ளை விமலதாசன் | யாழ்ப்பாணம் | 24.07.1983 |
| (மனிதநாகமணின் பத்திரிகை ஆசிரியர்) | | |
| இரெட்ணம் | மட்டக்களப்பு | 04.03.1985 |
| தனபாலசூரியர் ரஜந்தன் | யாழ்ப்பாணம் | 16.09.1985 |
| கந்தையா கந்தசாமி | திருகோணமலை | 16.09.1985 |
| சிவா (படகோட்டி) | வவுனியா | 13.02.1986 |
| பிக்கப் ரவி | யாழ்ப்பாணம் | 18.06.1986 |
| மாணிக்கம் தவசீலசேகரம் (வினோத்) | யாழ்ப்பாணம் | 17.07.1986 |
| கனகரத்தினம் சதானந்தன் (குஞ்சு) | கிளிநொச்சி | 17.08.1986 |
| மாப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 15.10.1986 |
| நாகமணி (நாட்டுப்பற்றளர்) | | |
| நாகமணி கைலைநாதன் | முல்லைத்தீவு | 14.06.1986 |
| கந்தையா ஏகாம்பரம் | திருகோணமலை | 28.06.1987 |
| ஆறுமுகநாதன் | திருகோணமலை | 08.06.1987 |
| காளிதாசன் செல்லக்குமார் (செல்வம்) | திருகோணமலை | 08.10.1987 |
| சவரிப்பிள்ளை சுழியாம்பிள்ளை யோகரத்தினம் (யோகம்) | மன்னார் | 23.09.1987 |
| வின்சன் (நவநிதி) | | |
| திருநாவுக்கரசு சுரேஸ்குமார் | யாழ்ப்பாணம் | 10.11.1987 |
| ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை | யாழ்ப்பாணம் | 10.11.1987 |
| (பெரியபுலம் மாகவித்தியாலய ஆசிரியர்) | | |
| சிவகுருநாதன் கணேசநாதன் (வவா) (நாடகநெறியாளர்) | யாழ்ப்பாணம் | 10.12.1987 |
| வீ.எம்.குகராஜா | | 13.10.1987 |
| செல்லச்சாமி | யாழ்ப்பாணம் | 24.10.1987 |
| சண்முகம் ரங்கநாதன் (மாஸ்ரர்) | யாழ்ப்பாணம் | 16.11.1987 |
| நாகரட்ணம் சிவசங்கர் | யாழ்ப்பாணம் | 21.12.1987 |
| விஸ்ணுமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | | |
| சிவலிங்கம் விஸ்ணுமூர்த்தி | யாழ்ப்பாணம் | 20.12.1988 |
| மொட்டைநாதன் கனகலிங்கம் புஸ்பநாதன் | யாழ்ப்பாணம் | 16.01.1988 |
| நடேசன் | அம்பாறை | 02.08.1988 |
| அன்னை பூபதி கணபதிப்பிள்ளை | மட்டக்களப்பு | 19.04.1988 |
| கணபதிப்பிள்ளை நவரத்தினராசா | கிளிநொச்சி | 24.04.1988 |
| ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை | கிளிநொச்சி | 04.08.1988 |
| த.முகுந்தன் (சிறீகரன்) (மாணவன்) | கிளிநொச்சி | 28.04.1988 |
| கந்தையா பாக்கியம் (பாக்கியம் அக்கா) | யாழ்ப்பாணம் | 06.01.1988 |
| கதிரிப்பிள்ளை நடராசா | யாழ்ப்பாணம் | 06.01.1988 |
| எம்.துரைராஜா | யாழ்ப்பாணம் | 24.08.1988 |
| பொன்னுத்துரை கணேசமூர்த்தி | யாழ்ப்பாணம் | 22.09.1988 |
| வைத்திலிங்கம் பரமநாதன் (சோதி) | யாழ்ப்பாணம் | 10.01.1988 |
| நந்தன் | | 10.02.1988 |
| வேலுப்பிள்ளை செல்லக்கண்டு | யாழ்ப்பாணம் | 10.04.1988 |
| செல்லக்கண்டு சோதிலிங்கம் | யாழ்ப்பாணம் | 04.10.1988 |
| திருமதி செல்லக்கண்டு இராசமுத்து | யாழ்ப்பாணம் | 04.10.1988 |
| கணபதிப்பிள்ளை வேல்முருகன் | | |
| சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் | | 10.05.1988 |
| பொன்னம்பலம் | | 10.06.1988 |
| அருளானந்தம் ரவி (டிஸ்கோரவி) | யாழ்ப்பாணம் | 13.10.1988 |
| கதிர்காமநாதன் | யாழ்ப்பாணம் | 14.10.1988 |
| பொன்னையா சிறீதரன் | யாழ்ப்பாணம் | 14.10.1988 |
| சின்னத்துரை சற்குணராசா | யாழ்ப்பாணம் | 18.10.1988 |
| (குளிர்பான நிலைய உரிமையாளர்) | | |
| மாமனிதர் சிவஞானசுந்தரம் (பிரஜைகள் குழுத்தலைவர்) | யாழ்ப்பாணம் | 21.10.1988 |
| செல்லையா கிளேற்றன் (கிற்றார் இசைக்கலைஞர்) | யாழ்ப்பாணம் | 21.10.1988 |
| சிவசிதம்பரப்பிள்ளை சிவராசபிள்ளை | யாழ்ப்பாணம் | 25.10.1988 |
| இராஜசங்கரி | யாழ்ப்பாணம் | 26.10.1988 |
| (தென்மராட்சி பிரஜைகள் குழு தலைவரும் சட்டத்தரணியுமான) | | |
| வெள்ளையன் | மட்டக்களப்பு | 11.02.1988 |
| சுந்தரம் | யாழ்ப்பாணம் | 11.03.1988 |
| காளிராஜா | திருகோணமலை | 11.04.1988 |
| கனகசபை தனபாலசிங்கம் | யாழ்ப்பாணம் | 11.04.1988 |
| சரவணமுத்து செல்வராசா (மாமா) | யாழ்ப்பாணம் | 11.05.1988 |
| (சாவகச்சேரி வர்த்தகர்சங்க செயலாளர்) | | |
| ரகு | திருகோணமலை | 11.07.1988 |
| கிருஸ்ணபிள்ளை வல்லிபுரம் (சுகந்தன்) | யாழ்ப்பாணம் | 11.08.1988 |
| பிறேம்குமார் | யாழ்ப்பாணம் | 11.08.1988 |
| பாலகிருஸ்ணன் (ஆசிரியர்) | | 11.11.1988 |

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| நாகேந்திரம் கிருஸ்ணதாஸ் (உயர்தர வகுப்பு மாணவன்) | யாழ்ப்பாணம் | 11.12.1988 |
| சுந்தரம் வைகுந்தநாதன் | யாழ்ப்பாணம் | 13.11.1988 |
| சங்கர் | | 14.11.1988 |
| கிளியன் | | 14.11.1988 |
| நாகச்செல்வன் குணாளன் (மாணவன்) | யாழ்ப்பாணம் | 19.11.1988 |
| தம்பிராசா சங்கரன் | கிளிநொச்சி | 21.11.1988 |
| பூலோகசிங்கம் | வவுனியா | 22.11.1988 |
| ந.பாலகுரு | வவுனியா | 22.11.1988 |
| மரியநாயகம் யூட்சக்காரியஸ் (சந்திரகுமார்) | யாழ்ப்பாணம் | 27.11.1988 |
| திருமதி மனோகதி பிரபாகரன் | யாழ்ப்பாணம் | 28.11.1988 |
| சின்னத்துரை குணரத்தினம் (குணம்) | கிளிநொச்சி | 11.01.1988 |
| தம்பிப்பிள்ளை சிவா | | 12.02.1988 |
| அண்ணா சிவதாசன் நிர்மலன் | யாழ்ப்பாணம் | 12.03.1988 |
| நாகமுத்து கருணானந்தசிவம் | யாழ்ப்பாணம் | 12.04.1988 |
| பொன்னுத்துரை வண்ணக்கிளி (முகுந்தன்) | யாழ்ப்பாணம் | 12.11.1988 |
| அரசலிங்கம் தேவதாசன் | யாழ்ப்பாணம் | 15.12.1988 |
| செல்வி மஞ்சுளாதேவி கனகரத்தினம் | யாழ்ப்பாணம் | 16.12.1988 |
| அருச்சுணன் ஜெயதாசன் (தயா) | யாழ்ப்பாணம் | 23.12.1988 |
| தம்பையா இருகுலசிங்கம் | யாழ்ப்பாணம் | 23.12.1988 |
| சந்திரகுமார் கதிரவேலு | யாழ்ப்பாணம் | 24.12.1988 |
| இராசதுரை முருகையா | யாழ்ப்பாணம் | 31.12.1988 |
| பரமேஸ்வரன் முரளிதரன் | யாழ்ப்பாணம் | 06.05.1989 |
| நடராசா கிருபாகரன் (கிருபா) | யாழ்ப்பாணம் | 06.06.1989 |
| இ.சதாசிவம் | | 06.09.1989 |
| சுப்பையா நிக்கலஸ் | வவுனியா | 06.11.1989 |
| தங்கவேலாயுதம் | யாழ்ப்பாணம் | 19.06.1989 |
| இராமநாதன் கணேஸ்குமார் | | 24.06.1989 |
| (விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | |
| செல்வம் அக்கா (செல்வம் செந்திவேல்) | யாழ்ப்பாணம் | 28.06.1989 |
| சுப்பிரமணியம் பரந்தாமன் | யாழ்ப்பாணம் | 07.03.1989 |
| சரோஜினிதேவி தாமோதரம்பிள்ளை (சறோ அக்கா) | திருகோணமலை | 13.07.1989 |
| செல்லத்துரை சச்சிதானந்தம் (யாழ். செயலக ஊழியர்) | யாழ்ப்பாணம் | 15.07.1989 |
| ஆ.மகாலிங்கம் (நில அளவையாளர்) | யாழ்ப்பாணம் | 17.07.1989 |
| நாகரத்தினம் விக்கினேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 19.07.1989 |
| திருநாவுக்கரசு பாலேந்திரா (பாலன்) | யாழ்ப்பாணம் | 20.07.1989 |
| கந்தையா வேலாயுதகுமாரர் (தம்பி) | யாழ்ப்பாணம் | 23.07.1989 |
| மகாலிங்கம் மகேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 23.07.1989 |
| (யாழ். மத்தியகல்லூரி வர்த்தகபிரிவு மாணவனும் வி.பு.மாணவர் இயக்க நீர்வேலி பொறுப்பாளரும்) | | |
| ரங்கராஜன் கிரிதரன் | யாழ்ப்பாணம் | 27.07.1989 |
| கனகரத்தினம் ரவீந்திரன் | யாழ்ப்பாணம் | 26.07.1989 |
| அந்தோனிமுத்து அன்ரனிபெனியஸ் (துரை) | யாழ்ப்பாணம் | 08.08.1989 |
| ரங்கநாதன் மாஸ்ரர் | | 15.08.1989 |
| செல்வி சோபா அடைக்கலமுத்து (மகள்) | யாழ்ப்பாணம் | 23.08.1989 |
| அடைக்கலமுத்து (தந்தை) | யாழ்ப்பாணம் | 23.08.1989 |
| க.இந்திரன் | யாழ்ப்பாணம் | 25.08.1989 |
| தர்மகுலேந்திரன் | கிளிநொச்சி | 23.09.1989 |
| இந்திரநாதகன் | யாழ்ப்பாணம் | 23.09.1989 |
| நாகநாதன் பாலேந்திரா | யாழ்ப்பாணம் | 23.09.1989 |
| செல்லையா யோசப்முல்லைத்தீவு | | 26.09.1989 |
| தர்மலிங்கம் ரவிச்சந்திரன் (ரவி) | கிளிநொச்சி | 10.06.1989 |
| கறுப்பையா குமாரராசா (குமார்) | கிளிநொச்சி | 10.06.1989 |
| செல்லத்தம்பி (செல்வம்) | யாழ்ப்பாணம் | 17.11.1989 |
| கனகசபை சுதாகரன் (சுதா) | கிளிநொச்சி | 27.11.1989 |
| திருஞானசேகரம் | யாழ்ப்பாணம் | 12.01.1989 |
| பாஸ்கரன் (ரஞ்சன்) | யாழ்ப்பாணம் | 25.12.1989 |
| தம்பு நடேசு (குளிர்பான நிலைய உரிமையாளர்) | கிளிநொச்சி | 22.12.1989 |
| பாலா | | 28.12.1989 |
| விஜயரட்ணம் தேவகுமார் (அறிவொளி) | யாழ்ப்பாணம் | 30.12.1989 |
| க.செல்வராசா (சின்னத்துரை) | யாழ்ப்பாணம் | 01.12.1990 |
| குணரத்தினம் விஜயகுமார் (விஜி) | யாழ்ப்பாணம் | 01.01.1989 |
| கணேசலிங்கம் ஜீவகுமார் (ஜீவன்) | யாழ்ப்பாணம் | 01.03.1989 |
| சின்னத்தம்பி சாந்தராசா (கண்ணன்) | யாழ்ப்பாணம் | 30.01.1989 |
| சுப்பிரமணியம் நித்தியானந்தராசா | யாழ்ப்பாணம் | 30.01.1989 |
| தனபாலசிங்கம் சந்தியேந்திரா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்) | | 11.07.1965 |
| சின்னத்தம்பி ஜெகநாதன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்) | | 02.02.1989 |
| சிவஞானசுந்தரம் சிவரஞ்சன் (ரஞ்சன்) | யாழ்ப்பாணம் | 02.02.1989 |
| சின்னத்தம்பி ரவீந்திரன் (ராகவன்) | யாழ்ப்பாணம் | 02.04.1989 |
| கந்தசாமி சண்முகசுந்தரம் | யாழ்ப்பாணம் | 02.05.1989 |
| செல்லத்துரை தனபாலசிங்கம் | யாழ்ப்பாணம் | 02.06.1989 |
| தெய்வேந்திரபாலன் (மெண்டிஸ்) | யாழ்ப்பாணம் | 02.09.1989 |
| சுதர்சன் (சுதன்) | முல்லைத்தீவு | 15.02.1989 |
| நாகலிங்கம் தேவராசா (சின்னத்தம்பி) | யாழ்ப்பாணம் | 03.07.1989 |

## 19.04.2023 நாட்டுப்பற்றாளர் நாள்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் [1957 தொடக்கம் 2005 வரை]:

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| கதிர்காமு கந்தையா | யாழ்ப்பாணம் | 03.07.1989 |
| செல்லையா தவலோகநாதன் (சந்திரன்) | யாழ்ப்பாணம் | 31.03.1989 |
| தம்பிராசா கிருபாகரன் (ஜீவா) | யாழ்ப்பாணம் | 15.04.1989 |
| கந்தையா செல்லத்துரை | யாழ்ப்பாணம் | 04.12.1989 |
| சபாபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் | யாழ்ப்பாணம் | 04.12.1989 |
| பாரத் | கிளிநொச்சி | 24.04.1989 |
| சின்னத்துரை பிரபாகரன் | முல்லைத்தீவு | 30.04.1989 |
| (யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன்) | | |
| செல்லப்பா பாலேந்திரன் (செல்வந்தன்) | வவுனியா | 05.01.1989 |
| கந்தையா கணேசலிங்கம் | வவுனியா | 05.01.1989 |
| சிறீவையாபுரி செல்வம் | முல்லைத்தீவு | 05.01.1989 |
| கந்தவேல் | யாழ்ப்பாணம் | 01.08.1989 |
| கனகசபை சண்முகசோதி (சோதி) | யாழ்ப்பாணம் | 05.09.1989 |
| திருச்செல்வம் அகிலன் | யாழ்ப்பாணம் | 05.10.1989 |
| (யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர மாணவன்) | | |
| தவேந்திரராசா | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| செ.சிவலிங்கம் | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| இ.பார்த்தீபன் | யாழ்ப்பாணம் | 16.05.1989 |
| சபாபதி பாலசிங்கம் (பாலு) | | 25.05.1989 |
| குலசேகரம் பத்மநாதன் | திருவிளங்கம் | 28.05.1989 |
| செல்வநாதர் கிறிஸ்தோப்பர் | யாழ்ப்பாணம் | 28.05.1989 |
| கதிரிப்பிள்ளை நடராசா | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| நாகரட்ணம் ஆனந்தராசா (ஆனந்தி) | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| (யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மாணவன்) | | |
| செல்வராணி உருத்திரசிங்கம் | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| சிவஞானவதி சிவசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் | 06.01.1989 |
| இராசதுரை றொபின்சன்தோமஸ் | யாழ்ப்பாணம் | 06.03.1989 |
| விக்கினேஸ்வரன் (வவி) | | 21.05.1990 |
| மார்க்கண்டு அருமைநாயம் (டங்கா) | திருகோணமலை | 14.06.1990 |
| (பல்கலைக்கழக மாணவன்) | | |
| கனகரத்தினம் | அம்பாறை | 17.06.1990 |
| செந்தில்வேல் மணிமாறன் (ரவி) | யாழ்ப்பாணம் | 20.06.1990 |
| செல்வரத்தினம் செல்வக்குமார் (ராசன்) | யாழ்ப்பாணம் | 08.07.1990 |
| காசிலிங்கம் சிவபாலன் (மாம்பழம்) | யாழ்ப்பாணம் | 08.07.1990 |
| லிங்கம் | யாழ்ப்பாணம் | 23.09.1990 |
| பொன்ராசா | | 23.09.1990 |
| செல்வராசா | | 23.09.1990 |
| சுப்பிரமணியம் தியாகராஜா | யாழ்ப்பாணம் | 11.10.1990 |
| மாமனிதர் பொ.அருணாசலம் | வவுனியா | 12.01.1990 |
| பாலசுந்தரம் ரவீந்திரன் | மட்டக்களப்பு | 04.04.1991 |
| ஜெயதாஸ் | வவுனியா | 16.06.1991 |
| சிவபாதம் சுரேஸ்குமார் | யாழ்ப்பாணம் | 07.01.1991 |
| இரத்தினம் வர்ணகுலசிங்கம் (குயிலன்) | யாழ்ப்பாணம் | 16.07.1991 |
| சுரேஸ் | யாழ்ப்பாணம் | 28.07.1991 |
| சிவஞானம் சிறீயானந்தம் (தேவன்) | யாழ்ப்பாணம் | 30.07.1991 |
| அருமை | மட்டக்களப்பு | 16.09.1991 |
| விஸ்மா | மட்டக்களப்பு | 28.10.1991 |
| தேவராஜா | மட்டக்களப்பு | 28.10.1991 |
| இ.உதயகுமார் (ரவி) | மட்டக்களப்பு | 28.11.1991 |
| திருமதி சிவக்கொழுந்து ஞானமுத்து | முல்லைத்தீவு | 13.12.1991 |
| சி.நிதி | | 28.12.1991 |
| பீதாம்பரம் | மட்டக்களப்பு | 28.12.1991 |
| சந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சுந்தரலிங்கம் சந்திரலிங்கம் | யாழ்ப்பாணம் | 06.09.1991 |
| ராசா (நாட்டுப்பற்றாளர்) நாகராசா புலேந்திரராசா | யாழ்ப்பாணம் | 16.01.1991 |
| ஆனந்தம் | மட்டக்களப்பு | 01.09.1992 |
| ராஜன் | மட்டக்களப்பு | 01.10.1992 |
| இராசா | மட்டக்களப்பு | 21.01.1992 |
| பொன்னர் பாலசுப்பிரமணியம் (பெரியண்ணன்) | வவுனியா | 29.02.1992 |
| க.தீஸ்வரன் (சததியநாதன்) | யாழ்ப்பாணம் | 03.02.1992 |
| (விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | |
| கணபதிப்பிள்ளை திருத்தணி | மட்டக்களப்பு | 05.12.1992 |
| ஞானசேகர் ஜெயகணேஸ் | மட்டக்களப்பு | 14.05.1992 |
| கணபதிப்பிள்ளை | திருகோணமலை | 14.05.1992 |
| (திருகோணமலை முட்டுச்சேனை பாடசாலை அதிபர்) | | |
| மதிவாணன் (விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்) | | 14.05.1992 |
| கதிர்காமப்போடி கனகரத்தினம் | மட்டக்களப்பு | 06.03.1992 |
| கணபதிப்பிள்ளை ஜெயசீலன் | மட்டக்களப்பு | 26.07.1992 |
| புண்ணியம் பாலசிங்கம் | திருகோணமலை | 08.07.1992 |
| யோகநாதன் ரூபகுமார் (ரூபன்) | மட்டக்களப்பு | 08.08.1992 |
| தயாளன் | மட்டக்களப்பு | 26.09.1992 |
| நாகராசா சூரியபாலன் (ஆதரவாளர்) | யாழ்ப்பாணம் | 27.10.1992 |

| அழைக்கும் பெயர் முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|
| நடேசு | கிளிநொச்சி | |
| சீனித்தம்பி யோகநாதன் | மட்டக்களப்பு | 13.12.1992 |
| (யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை 4ம் ஆண்டு மாணவன்) | | |
| பொன்னுத்துரை முருகமூர்த்தி (இராசா) | கிளிநொச்சி | 01.04.1993 |
| சின்னவன் பஞ்சலிங்கம் ஜெகநாதன் (ஆதரவாளர்) | யாழ்ப்பாணம் | 27.01.1993 |
| மாகாலிங்கசிவன் (நாட்டுப்பற்றாளர்) ஞானசம்பந்தர் | மட்டக்களப்பு | 18.10.1993 |
| வேலுப்பிள்ளை (நாட்டுப்பற்றாளர்) | | |
| வெள்ளைக்குட்டி வேலுப்பிள்ளை | அம்பாறை | 19.04.1994 |
| கந்தன் (ஆதரவாளர்) | மட்டக்களப்பு | 24.01.1994 |
| சின்னத்தம்பி (ஆதரவாளர்) | | |
| றெட்ணசிங்கம் சின்னத்தம்பி | மட்டக்களப்பு | 30.01.1994 |
| வசந்தன் (ஆதரவாளர்) கந்தையா வசந்தன் | மட்டக்களப்பு | 28.02.1994 |
| ரவீந்தீரன் (ஆதரவாளர்) சீனித்தம்பி ரவீந்தீரன் | மட்டக்களப்பு | 03.07.1994 |
| பிரபா (ஆதரவாளர்) கோணமலை பிரபா | திருகோணமலை | 05.08.1994 |
| நற்குணம் (ஆதரவாளர்) நவரெட்ணம் நற்குணம் | மட்டக்களப்பு | 07.10.1994 |
| சிவலிங்கம் (ஆதரவாளர்) சித்திரவேல் சிவலிங்கம் | மட்டக்களப்பு | 18.07.1994 |
| சின்னவன் (ஆதரவாளர்) கிருஸ்ணபிள்ளை கிருபைராஜா | மட்டக்களப்பு | 09.04.1994 |
| யோகநாதன் (ஆதரவாளர்) ஏரம்பமூர்த்தி யோகநாதன் | மட்டக்களப்பு | 10.12.1994 |
| சதாகரன் (ஆதரவாளர்) சின்னத்துரை சதாகரன் | மட்டக்களப்பு | 25.11.1994 |
| சந்திரசேகரம் (நாட்டுப்பற்றாளர்) கணபதிப்பிள்ளை சந்திரசேகரம் | மட்டக்களப்பு | 19.04.1994 |
| நாவேந்திரன் (புலிமாமா) செல்லையா தர்மசேனன் | யாழ்ப்பாணம் | 08.05.1995 |
| ரவீந்திரராசா (நாட்டுப்பற்றாளர்) செல்லத்துரை ரவீந்திரராசா | யாழ்ப்பாணம் | 15.09.1995 |
| கணேசன் (ஆதரவாளர்) கணேசன் | மட்டக்களப்பு | 01.01.1996 |
| ஞானச்செல்வன் (ஆதரவாளர்) ஞானச்செல்வன் வேல்ராஜ் | மட்டக்களப்பு | 23.02.1995 |
| இன்பன் (ஆதரவாளர்)தியாகராசா இன்பராசா (இன்பன்) | மட்டக்களப்பு | 23.11.1995 |
| சின்னவன் (ஆதவாளர்) மாணிக்கம் சின்னவன் | மட்டக்களப்பு | 13.06.1995 |
| ரவீந்திரன் (ஆதரவாளரர்) அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன் | யாழ்ப்பாணம் | |
| சத்தியானந்தன் (நாட்டுப்பற்றாளர்) சிதம்பரப்பிள்ளை சத்தியானந்தன் | மன்னார் | 15.03.1996 |
| யோகேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சிவபாலசுப்பிரமணியம் யோகேந்திரன் | யாழ்ப்பாணம் | 21.11.1996 |
| தியாகதாஸ் (நாட்டுப்பற்றாளர்) வீரசிங்கம் தியாகதாஸ் | யாழ்ப்பாணம் | 21.11.1996 |
| நிமலேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) பிரான்சிஸ் ஜஸ்மின் நிமலேந்திரன் | திருகோணமலை | 02.05.1997 |
| கவிதன் (நாட்டுப்பற்றாளர்) கந்தசாமி சிறிகிருபாகரன் | கிளிநொச்சி | 02.05.1997 |
| தனிநாயகம் (நாட்டுப்பற்றாளர்) போனிஸ் தனிநாயகம் | கிளிநொச்சி | 02.05.1997 |
| ராமு (நாட்டுப்பற்றாளர்) சுப்பிரமணியம் சிறிராம் | யாழ்ப்பாணம் | 02.05.1997 |
| பேச்சிமுத்தன் (நாட்டுப்பற்றாளர்) கணபதி பேச்சிமுத்தன் | திருகோணமலை | 02.08.1997 |
| தங்கராஜ் (நாட்டுப்பற்றாளர்) சிவராசா தங்கராஜ் | மட்டக்களப்பு | 04.01.1997 |
| நெவில்நிலான் (நாட்டுப்பற்றாளர்) சூசைப்பிள்ளை லெனிஸ்லால் நெவில்நிலான் | மன்னார் | 05.10.1997 |
| ரவி (நாட்டுப்பற்றாளர்) தங்கராசா ரவீந்திரன் | மட்டக்களப்பு | 18.05.1997 |
| பிரபாகரன் (நாட்டுப்பற்றாளர்) பொன்னம்பலம் பிரபாகரன் | முல்லைத்தீவு | 10.06.1997 |
| விஜயகுமார் (நாட்டுப்பற்றாளர்) சின்னத்தம்பி விஜயகுமார் | திருகோணமலை | 23.12.1997 |
| தோமாஸ் (நாட்டுப்பற்றாளர்) யோகரத்தினம் தோமாஸ் | மலேசியா | 16.10.1997 |
| ஜெகதீஸ்குமார் (நாட்டுப்பற்றாளர்) சிங்கராசா ஜெகதீஸ்குமார் | யாழ்ப்பாணம் | 21.12.1998 |
| தர்மசீலன் (நாட்டுப்பற்றாளர்) வேலு தர்மசீலன் பம்சிவா | கிளிநொச்சி | 02.03.1998 |
| ராஜ்குமார் (நாட்டுப்பற்றாளர்) துரைசிங்கம் ராஜ்குமார் (குட்டி) | யாழ்ப்பாணம் | 02.03.1998 |
| தயாகரன் (நாட்டுப்பற்றாளர்) பத்மநாதன் தயாகரன் | யாழ்ப்பாணம் | 02.03.1998 |
| வையின்குமார் (நாட்டுப்பற்றாளர்) சின்னையா வையின்குமார் | கிளிநொச்சி | 02.03.1998 |
| சுந்தரவதனன் (நாட்டுப்பற்றாளர்) அழகேந்திரன் சுந்தரவதனன் | திருகோணமலை | 21.02.1998 |
| சூரி (நாட்டுப்பற்றாளர்) சீவரட்ணம் சூரி | மட்டக்களப்பு | 16.03.1998 |
| வெள்ளைக்குட்டி (நாட்டுப்பற்றாளர்) நாகமுத்து சேதுராசா | மட்டக்களப்பு | 12.03.1998 |
| ரவீந்திரன் (நாட்டுப்பற்றாளர்) சுப்பிரமணியம் ரவீந்திரன் | மட்டக்களப்பு | 24.04.1998 |
| பாஸ்கரன் (நாட்டுப்பற்றாளர்) மாணிக்கம் பாஸ்கரன் | மட்டக்களப்பு | 04.08.1998 |
| தியாகு (நாட்டுப்பற்றாளர்) சண்முகம் தியாகராஜா | யாழ்ப்பாணம் | 04.11.1998 |
| தவராசா (நாட்டுப்பற்றாளர்) சுந்தரசேகரம் தவராசா | திருகோணமலை | 22.06.1998 |
| தேவதாஸ் (நாட்டுப்பற்றாளர்) இராசமாணிக்கம் தேவதாஸ் | மட்டக்களப்பு | 18.06.1998 |
| சுரேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) கிருஸ்ணபிள்ளை சுரேந்திரன் | மட்டக்களப்பு | 16.06.1998 |
| சுப்பையா (நாட்டுப்பற்றாளர்) வெள்ளையன் வேலு சுப்பையா | முல்லைத்தீவு | 06.08.1998 |
| வினோ (நாட்டுப்பற்றாளர்) மாணிக்கவேல் வினோகரன் | மட்டக்களப்பு | 06.12.1998 |
| பாலன் (நாட்டுப்பற்றாளர்) சின்னத்தம்பி பாலன் | அம்பாறை | 02.09.1999 |
| ராம் (நாட்டுப்பற்றாளர்) ஏகாம்பரம் யோகேஸ்வரன் | முல்லைத்தீவு | 03.01.1999 |
| இராசன் (நாட்டுப்பற்றாளர்) குமரநாயகம் இராசன் | அம்பாறை | 20.12.1999 |
| ராசன் (நாட்டுப்பற்றாளர்) குமாரநாயகம் ராசன் | அம்பாறை | 20.12.1999 |
| சின்னவன் (நாட்டுப்பற்றாளர்) கலாமோகன் சுகந்தன் | யாழ்ப்பாணம் | 23.05.2000 |
| ரகு (நாட்டுப்பற்றாளர்) தம்பித்துரை ரகுநாதன் | கிளிநொச்சி | 15.06.2000 |
| ரமேஸ் (நாட்டுப்பற்றாளர்) வடிவேலு ரமேஸ்குமார் | மட்டக்களப்பு | 18.06.2000 |
| கஜேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) குணசேகரம் கஜேந்திரன் | முல்லைத்தீவு | 07.10.2000 |
| பிரபாகரன் (நாட்டுப்பற்றாளர்) செல்லத்துரை பிரபாகரன் | யாழ்ப்பாணம் | 22.07.2000 |
| குமார் (நாட்டுப்பற்றாளர்) மத்தியாஸ் குமார் | யாழ்ப்பாணம் | 22.02.2000 |

## 19.04.2023 நாட்டுப்பற்றாளர் நாள்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து சாவினைத் தழுவிக்கொண்ட நாட்டுப்பற்றாளர்களின் விபரம் (1957 தொடக்கம் 2005 வரை):

| அழைக்கும் பெயர் | முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|---|
| மதி (நாட்டுபற்றாளர்) | வைரவன் வேலும்மயிலும் | கிளிநொச்சி | 4.09.2000 |
| சேரமான் (நாட்டுப்பற்றாளர்) | முருகையா நவநீதன் | யாழ்ப்பாணம் | 26.10.2000 |
| ரவீந்திரகுமார் (நாட்டுப்பற்றாளர்) | ரங்கநாதன் ரவீந்திரகுமார் | முல்லைத்தீவு | 28.12.2000 |
| சிவநாதன் (நாட்டுப்பற்றாளர்) | கந்தசாமி சிவநாதன் | யாழ்ப்பாணம் | 30.07.2001 |
| பத்மாவதி (நாட்டுப்பற்றாளர்) | தில்லைநாயகம் பத்மாவதி | யாழ்ப்பாணம் | 21.01.2001 |
| வாசுகி (நாட்டுப்பற்றாளர்) | வாசுகி தியாகராசா | யாழ்ப்பாணம் | 18.01.2001 |
| றெஜினா (நாட்டுப்பற்றாளர்) | பத்மாவதி ஜெகநாதன் | யாழ்ப்பாணம் | 17.02.2001 |
| கைலைராசா (நாட்டுப்பற்றாளர்) | பெரியகறுப்பன் புஸ்பராஜ் | மன்னார் | 02.08.2001 |
| தொப்பி (நாட்டுப்பற்றாளர்) | சின்னத்தம்பி நல்லையா | கிளிநொச்சி | 03.02.2001 |
| ராஜா (நாட்டுப்பற்றாளர்) | சின்னையா கந்தையா | முல்லைத்தீவு | 13.04.2001 |
| தவமணி (நாட்டுப்பற்றாளர்) | செல்வரத்தினம் தவமணி | முல்லைத்தீவு | 29.04.2001 |
| குமார் (நாட்டுப்பற்றாளர்) | பெருமாள் விஜயகுமார் | கிளிநொச்சி | 15.05.2001 |
| சக்திவேல் (நாட்டுப்பற்றாளர்) | ரங்கன் சக்திவேல் | முல்லைத்தீவு | 26.06.2001 |
| கனகலிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | கணபதிப்பிள்ளை கனகலிங்கம் | கிளிநொச்சி | 28.06.2001 |
| குயிலன் (நாட்டுப்பற்றாளர்) | சிவசுப்பிரமணியம் சதானந்தன் | திருகோணமலை | 07.08.2001 |
| மோகனாம்பிகை (நாட்டுப்பற்றாளர்) | கணேசன் மோகனாம்பிகை | யாழ்ப்பாணம் | 10.04.2001 |
| கந்தசாமி (நாட்டுப்பற்றாளர்) | கணபதிப்பிள்ளை கந்தசாமி | கிளிநொச்சி | 29.10.2001 |
| ராஜ்குமார் (நாட்டுப்பற்றாளர்) | பொன்னுத்துரை தர்மகுலசிங்கம் | திருகோணமலை | 27.11.2001 |
| மரியதாஸ் (நாட்டுப்பற்றாளர்) | ஞானப்பிரகாசம்ம் மரியதாஸ் செல்வக்கோன் | யாழ்ப்பாணம் | 03.04.2001 |
| இராசரத்தினம் (நாட்டுப்பற்றாளர்) | வேலுப்பிள்ளை இராசரத்தினம் | கிளிநொச்சி | 24.04.2001 |
| புஸ்பராசா (நாட்டுப்பற்றாளர்) | கந்தசாமி புஸ்பராசா | கிளிநொச்சி | 27.04.2001 |
| சந்திரசிறி (நாட்டுப்பற்றாளர்) | பாலசிங்கம் சந்திரசிறி | வவுனியா | 28.06.2001 |
| ஆச்சி (நாட்டுப்பற்றாளர்) | கந்தையா சின்னப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 16.02.2002 |
| கணபதிப்பிள்ளை (நாட்டுப்பற்றாளர்) | பரமானந்தர் கணபதிப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 27.02.2002 |
| கருணாநிதி (நாட்டுப்பற்றாளர்) | மார்க்கண்டு கருணாநிதி | யாழ்ப்பாணம் | 23.09.2002 |
| அமுதீஸ்வரன் (நாட்டுப்பற்றாளர்) | இரத்தினராசா அமுதீஸ்வரன் | யாழ்ப்பாணம் | 06.07.2002 |
| ரவீந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | முருகேசு ரவீந்திரன் | முல்லைத்தீவு | 08.06.2002 |
| செல்வம் (நாட்டுப்பற்றாளர்) | அரியக்குட்டி செல்வம் | யாழ்ப்பாணம் | 03.12.2002 |
| ஞானசம்மந்தன் (நாட்டுப்பற்றாளர்) | மகாலிங்கம ஞானசம்மந்தன் | மட்டக்களப்பு | 10.10.2003 |
| ரவி (நாட்டுப்பற்றாளர்) | கதிரமலை ரவி | அம்பாறை | 09.10.2003 |
| சதீஸ்குமார் (நாட்டுப்பற்றாளர்) | மகேந்திரம் சதீஸ்குமார் | அம்பாறை | 09.10.2003 |
| சந்திரநாதன் (நாட்டுப்பற்றாளர்) | மனோகரன் சந்திரநாதன் | அம்பாறை | 09.10.2003 |
| செல்வகுமார் (நாட்டுப்பற்றாளர்) | அரசரத்தினம் செல்வகுமார் | அம்பாறை | 09.10.2003 |
| சிவகுமார் (நாட்டுப்பற்றாளர்) | நாகராசா சிவகுமார் | அம்பாறை | 09.10.2003 |
| ஜெயபிரகாஸ் (நாட்டுப்பற்றாளர்) | விஜயராசா ஜெயபிரகாஸ் | அம்பாறை | 09.10.2003 |
| குமாரசிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | நல்லையா குமாரசிங்கம் | அம்பாறை | 09.10.2003 |
| அமலராஜ் (நாட்டுப்பற்றாளர்) | அமரசிங்கம் அமலராஜ் | மட்டக்களப்பு | 16.11.2003 |

| அழைக்கும் பெயர் | முழுப்பெயர் | இடம் | வீரச்சாவு |
|---|---|---|---|
| குலேந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | தவராசா குலேந்திரன் | மட்டக்களப்பு | 16.11.2003 |
| மிராஜ் (நாட்டுப்பற்றாளர்) | வடிவேல் நிமலநாதன் | மட்டக்களப்பு | 24.11.2003 |
| பிரதீபன் (நாட்டுப்பற்றாளர்) | நாகன் பிரதீபன் | யாழ்ப்பாணம் | 20.11.2003 |
| பாலசுந்தரம் (நாட்டுப்பற்றாளர்) | பலகிருஸ்ணன் பாலசுந்தரம் | கிளிநொச்சி | 22.12.2003 |
| கணேசமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | பொன்னம்பலம் கணேசமூாத்தி | கிளிநொச்சி | 22.01.2004 |
| மதி (நாட்டுப்பற்றாளர்) | கார்த்திகேசு மதியழகன் | யாழ்ப்பாணம் | 09.01.2004 |
| யோகநாதன் (நாட்டுப்பற்றாளர்) | செல்லத்துரை யோகநாதன் | முல்லைத்தீவு | 24.01.2004 |
| சுரேஸ் (நாதன்) (நாட்டுப்பற்றாளர்) | வீரசிங்கம் சுரேஸ்நாதன் | யாழ்ப்பாணம் | 25.01.2004 |
| விமல் (நாட்டுப்பற்றாளர்) | கணேசையா விமலேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 04.01.2004 |
| கணேசலிங்கம் (நாட்டுப்பற்றாளர்) | கறுவல்தம்பி கணேசலிங்கம் | மட்டக்களப்பு | 31.03.2004 |
| நடேசதுரை (நாட்டுப்பற்றாளர்) | ஆறுமுகம் நடேசதுரை | யாழ்ப்பாணம் | 04.02.2004 |
| ஜெயந்திரன் (நாட்டுப்பற்றாளர்) | சண்முகம் ஜெயந்திரன் | மட்டக்களப்பு | 04.11.2004 |
| நடேசன் ((நாட்டுப்பற்றாளர்) | ஐயாத்துரை நடேசன் | யாழ்ப்பாணம் | 31.05.2004 |
| பத்மநாதன் (நாட்டுப்பற்றாளர்) | சீனியப்பா பத்மநாதன் | யாழ்ப்பாணம் | 25.06.2004 |
| இரத்தினம் (நாட்டுப்பற்றாளர்) | செல்லையா இரத்தினம் | யாழ்ப்பாணம் | 15.08.2004 |
| தினேஸ் (நாட்டுப்பற்றாளர்) | குமாரசூரியம் மகேஸ்வரன் | மட்டக்களப்பு | 17.10.2004 |
| பாசியரட்ணம் (நாட்டுப்பற்றாளர்) | புவனசிங்கம் பாசியரட்ணம் | மட்டக்களப்பு | 17.10.2004 |
| கணேசமூர்த்தி (நாட்டுப்பற்றாளர்) | கதிர்காமத்தம்பி கணேசமூர்த்தி | மட்டக்களப்பு | 19.10.2004 |
| காந்தன் (நாட்டுப்பற்றாளர்) | சாமித்தம்பி உமாகாந்தன் | அம்பாறை | 26.11.2004 |
| சொக்கன் (நாட்டுப்பற்றாளர்) | கந்தப்புசெட்டியார் சொக்கலிங்கம் | யாழ்ப்பாணம் | 12.10.2004 |
| புலோமினம்மா (நாட்டுப்பற்றாளர்) | ஜோர்ஜ் புலோமினம்மா | | 26.12.2004 |
| நிக்சன் (நாட்டுப்பற்றாளர்) | சின்னராசா (அருளானந்தம்) நிக்சன் (பிரியராஜ்) | யாழ்ப்பாணம் | 26.12.2004 |
| லிங்கேஸ்வரன் (நாட்டுப்பற்றாளர்) | வைரவநாதன் லிங்கேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 31.05.2004 |
| மணியம்மை(நாட்டுப்பற்றளர்) | சூசைப்பிள்ளை மணியம்மா | முல்லைத்தீவு | 26.12.2004 |
| சந்திரநேரு(நாட்டுப்பற்றளர்) | அரியநாயகம் சந்திரநேரு | அம்பாறை | 02.08.2005 |
| ஏரம்புஜயா(நாட்டுப்பற்றளர்) | கந்தையா ஏரம்பு | யாழ்ப்பாணம் | 23.02.2005 |
| சிவராசா(நாட்டுப்பற்றளர்) | கணபதிப்பிள்ளை சிவராசா | யாழ்ப்பாணம் | 03.06.2005 |
| தில்லைக்கூத்தன் (நாட்டுப்பற்றளர்) | இளையதம்பி நடராசா | யாழ்ப்பாணம் | 05.08.2005 |
| மணியம்மா((நாட்டுப்பற்றளர்) | சூசைப்பிள்ளை மணியம்மா | முல்லைத்தீவு | 26.12.2005 |

தொடரும்...




## 19.04.2023 நாட்டுப்பற்றாளர் நாள் அன்னை பூபதி ஒரு குறியீடு!

# தெருவெல்லாம் சுடுகாடாய்

## உண்மைக் கதை

**இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

**இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.**

**சிங்கள வெறிப்படை ,**

**"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...**

**எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.**
**அவற்றில்... இருந்து.**

**தெருவெல்லாம் சுடுகாடாய்**

"வயிறு நோகுதப்பா.. என்னால தாங்க முடியுதில்லையே..."

பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டிவிட்டு - வீட்டின் உள்ளே போய் மனைவியைத் கை கொடுத்து நடந்தது போலவும் தூக்கியது போலவுமாக அழைத்து வந்து, உழவுப்பொறியின் பின் புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்கவைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். வண்டி கிளம் பிற்று.



தெருவெல்லாம் சுடுகாடாய்

பனை மரங்கள் அசைவற்று நின்றன.

ஒரு மரங்கொத்தி பட்ட மரத்தை அலகால் குத்திப் பொந்து போட்டுக்கொண்டிருந்தது.

"வயிறு நோகுதப்பா... என்னால தாங்க முடியுதில்லையே..."

விம்மிக்கொண்டே கண்ணீர் தலையணையை நனைக்க, பாயில் புரண்டு துடித்தாள் அவள்.

பிள்ளைப் பேறு,

ஊரெல்லாம் வீட்டுச் சுவருக்குள்ளே அடைபட்டுக்கிடந்த அந்த 1987 கார்த்திகையில், அவன் வெளியே எட்டிப் பார்த்தான் - வானம் இருண்டு கிடந்தது.

எங்கோ பத்து வீடு தள்ளி இந்திய வெறிப்படையின் பீரங்கிக் குண்ட விழுந்து வெடித்தபோது எழுந்த பேரோசையில் நடுங்கியவனாய், மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தான். வயிற்றைப் பொத்திப் பிடித்தபடி அவனை அண்ணாந்து பார்த்து "ஓ" என்று அழுதாள் அவள்.

புத்தூரில் இருந்து யாழ்ப்பாணம் மருத்துவ நிலையத்துக்கு பத்துக் கட்டை போயாக வேண்டும். இந்த நேரத்தில் எப்படிப் போவது? எவன் காரை வாடகைக்கு விடப்போகிறான்? வழி நெடுகிலும் இந்தியப் படை வெறியர்கள் நிற்கிறார்களாம் யாழ்ப்பாண மருத்துவ நிலையம் கூட இப்போது அவர்கள் கையில்தானாம், தலை சுற்றி, முகமெல்லாம் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

புத்தூரில் அது புதுக் குடும்பம். இதுதான் அவளுக்குத் தலைப் பிள்ளைப் பேறு. அறுவடை நேரத்தில் நெற்பயிர் ஒன்று கதிர் கருகிவிடும் போல - கூருண்டு வளைந்து துடித்துப் போராடுகிறது. தமிழீழம் முழுவதையும் எரித்துக்கொண்டிருக்கும் நெருப்பின் அலைகள் ஓங்கி வீசுகின்றன.

புலிப்படை பழையபடி தலைமறைவு இயக்கமாகிவிட்டதாம். இந்தியப் படைக்கு நல்ல அடியாம். நூற்றுக்கணக்கில் இந்தியப் படை வெறியர்களின் பிணங்கள் விமானங்களில் போகின்றனவாம். இந்தியப் படைபோடும் வெறியாட்டத்துக்கு புலிகள் வேறு எப்படித்தான் பரிசு கொடுப்பார்கள்? பெண்களை எல்லாம் அம்மணம் ஆக்கி - கெடுத்து - கணவன்மார்களைக் கொன்று - மொத்தத்தில் மகாத்மா காந்தியையே இந்தியப் படை கேவலப் படுத்திக் கொண்டிருக்கிறது.

புத்தூரில் தெரிந்த நாலு "கார்க்" காரர்களை அணுகி "அவளுக்கு நோவு தொடங்கிற்றுது பாருங்கோ - யாழ்ப்பாணம் போக வேணும்..." என்று கலங்கிய கண்களோடு கெஞ்சினான் அவன், எல்லோரும் துடித்தார்கள் - ஆனால் உதவுவதற்கு அவர்கள் மனம் விரும்பினாலும், விட்டுவிட்டு அதிரும் அந்தத் துப்பாக்கிகளின் கொடுமையான வேட்டோசை... பாவம்... அவர்களும் மனிதர்கள்...

"இந்த நேரத்தில் எப்படியப்பா" என்று முனகினார் ஒரு கிழவர்.

அவன் தொங்கிய தலையோடு வீடு திரும்பினான்.

வாசலை நெருங்கும்போதே அலறல் ஓசை கேட்டது. அவள் துடிக்கிறாள்... துடியாய்த் துடிக்கிறாள்... யாழ்ப்பாணத்துச் செம்பாட்டு மண்ணைப் போல முகமெல்லாம் சிவந்தது.

பெட்டியோடு சிற்றுழவுப் பொறி ஒன்று தோட்டத்துக்குப் பக்கத்தில் நின்றது. "லான்ட் மாஸ்டர்" என்ற பெயரில், உழவுக்கு ஒரு காலத்தில் சிறீலங்கா அரசு அறிமுகப்படுத்திய உழவு வண்டி அது. மனைவியை இதில் ஏற்றிக்கொண்டால் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து விடலாம். ஓடிப்போய் அதில் ஏறி, அவனே வண்டியை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான். அவனுக்கு அதை ஓட்டத் தெரிந்திருந்தது. பழைய வேட்டி ஒன்றைக் கிழித்து வந்து உழவு வண்டியில் வெள்ளைக் கொடி கட்டி விட்டு - வீட்டின் உள்ளே போய் மனைவியை கைகொடுத்து நடந்தது போலவும் தூக்கியது போலவுமாக அழைத்து வந்து, உழவுப் பொறியின் பின்புறம் இருந்த பெட்டியில் மெதுவாக ஏற்றி, சாய்ந்து படுக்கவைத்தான். துடித்து அலறிக் கொண்டிருந்தவள், அவன் படும் பாட்டைப் பார்த்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள், வண்டி கிளம்பிற்று.

வீட்டுக்குப் பக்கத்தில் ஆடுகள் தெருவோரத்தில் காய்ந்துபோய்ப் படுத்துக் கிடந்தன. ஆடுகளுக்குப் பலா இலைச் சருகு பொறுக்கிப் போடும் கிழவர் எங்கே போனாரோ தெரியவில்லை. யார்தான் தெருவில் இருக்கிறார்கள்...? மனிதர்களே இல்லாத "வெறிச் சென்ற பாலைவனம் தெருவாகிக் கிடக்கிறது.



போன ஓர் ஆண்டு காலத்தில் இந்தத் தெருவால் அவனும் அவளும் பலமுறை பயணம் போயிருக்கிறார்கள். அது புலிகள் கையில் யாழ்ப்பாணம் இருந்த காலம். திருமணம் ஆகி குனிந்த தலை நிமிராமல் இதே தெருவால் தானே அவள் போனாள்... ஒருமுறை, சிங்களப் படைவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட விடுதலைப் புலித்தளபதி லெப். கேணல் ராதாவின் வீர உடல் இதே தெருவால் ஊர்வலம் போனபோது, அவள் தெருவில் நின்று கண் கலங்கியிருக்கிறாள். அப்போது அவளைப் பார்த்துச் சொன்னது அவனுக்கு நினைவிருக்கிறது.

"நமக்குப் பக்கத்துலை இந்தியா இருக்கிறதைச் சிங்களவன் மறந்திட்டான்... இந்தியப் படை ஒரு நாள் இங்கே வந்து நம்மை எல்லாம் காப்பாத்தும்... இருந்து பார்!"

பெரிய வெடிகுண்டு ஒன்று எங்கோ அதிர்ந்து வெடித்தது. உழவு வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தவன் அசைந்து திரும்பிப் பார்த்தான் - அவள் காதைப் பொத்தியபடி வெட்டியில் நடுங்கிக் கொண்டிருந்தாள். "இந்தியப் படை சுடுகுது போலை... பயமா இருக்குதப்பா. ஐயோ வயிறு நோகுதே...!" அவளின் ஓலம் வண்டி இரைச்சலிலும் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

ஒரு கட்டை தூரத்தை வண்டி தாண்டி ஆயிற்று. தொலைவில் காக்கி உடைகளின் நடமாட்டம் தெரிவதை இப்போது அவன் கவனித்தான். இந்தியாப்படை தடை போட்டிருக்கிறதுபோலத் தெரிகிறது. வேகத்தை மெல்ல மெல்ல நத்தையைப்போல் வண்டியைச் செலுத்தினான். என்ன நடக்கும்? உடல் படபடக்கத் தொடங்கிற்று.

"ஸ்ராப்!" ஆங்கிலத்தில் யாரோ கத்தினார்கள்.

வண்டியை நிறுத்தினான். துப்பாக்கிகளோடு நாலு திசை களிலும் இருந்து நூற்றுக் கணக்கில் திடுதிடு என்று இந்தியப் படை வெறியர்கள் ஓடிவருவது தெரிந்தது. இத்தனை பேர் யாழ்ப்பாணத்திலோ? ஒரு மீசைக்காரன் துப்பாக்கி முனையை நேரே மார்பில் வைத்து அழுத்திப் பிடித்துக்கொண்டான். என்ன செய்வது? தளதளத்த குரலில் அவன் முனகினான்...

"இவள் கர்ப்பிணி ஐயா... பிள்ளைப் பேறு... யாழ்ப்பாணம் ஆசு பத்திரிக்குப் போக வேணும்..."

ஒரு முரடன் "ஓ!!" என்று வாய் கிழியச் சிரித்தான்.

அவர்கள் எல்லோரும் உழவுப் பொறியின் பின்னால் இருந்த பெட்டியை மொய்க்கத் தொடங்கினார்கள்.

வெறிபிடித்த காக்கி சட்டைக்காரன் ஒருவன் அவள் மார்பைக் கையால் இழுத்துப் பிடிக்க, அடுத்தவன் அவள் முகத்தைத் தடவத் தொடங்கினான்.

"அம்மா" என்று கத்திக்கொண்டே மயங்கி விழுந்தாள் அவள். அவனும் கூடவே "அம்மா!" என்று கூச்சலிட்டான்.

அமைதி நிலவிற்று.

தோய்த்துக் கசக்கிப்போட்ட துணியைப் போல் அவள் சுருண்டு கிடந்தாள்.

நெஞ்சில் இருந்த துப்பாக்கியைத் தள்ளி அவனைப் பார்த்து, "சரி, நீ போகலாம்" என்று கட்டளையிட்டான் மீசைக்காரன்.

மெதுவாக வண்டி தடை தாண்டி நகரத் தொடங்கிற்று.

"இது என்ன கொடுமை!"

வண்டியை ஓட்டியவன் கண்களில் ஆறாக நீர் பொங்கிப் பாய்ந்தது.

ஒரு கட்டை தூரம் தாண்டித் தெருவோரத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, பக்கத்து வீட்டில் போய் தண்ணீர் வாங்கி வந்து அவள் முகத்தில் தெளித்தான் அவன் - மெதுவாகக் கண்களைத் திறந்தவள், வயிற்று நோவால் மீண்டும் "ஓ" என்று அலறத் தொடங்கினாள். தண்ணீர் கொடுத்த வீட்டுக்காரர் குடும்பம் வீட்டுக்கு வெளியே வராமல், வேலிக்கு உள்ளேயே நின்று இரங்கி முனகியது.

"பல்லைக் கடிச்சுத் தாங்கிக்கொள்ளு... எப்படியோ யாழ்ப் பாணம் போயிரலாம்..." என்று தலையை வருடி விட்டான் அவன்.

"வேணாமப்பா... வீட்டுக்கே போயிடுவம்... இந்த மிருகங்களை இன்னொரு தடவை பார்க்கக்கூடாது... ஐயோ!"

வயிற்றைப் போத்திக்கொண்டு அவள் மீண்டும் கத்தினாள்.

அவன் அவள் பேச்சைக் கேட்கவில்லை.

அவளுடைய உடல்நிலை அவனுக்குத் தெரியும் யாழ்ப் பாணத்தை நோக்கி வண்டியைச் செலுத்தினான். முரட்டுவேகத் தில் வண்டி இயங்கிற்று. ஆற்றலுக்கு மேலே வண்டியின் சில்லுகள் சுழன்று கதறின.

தொடர்ந்து வந்த மூன்று தடைகளையும் அவர்கள் நெருப்பைக் கடப்பது போலவே தாண்டினார்கள். ஒரு தடையில் அவள் வயிற் றைத் தடியன் ஒருவன் விரல்களால் அழுக்கிப் பார்த்தபோது. அவள் இரண்டாவது தடவை மயங்கி விழுந்ததைக் கண்டு அவன் விம்மிவிம்மி அழுதான்.

இம்முறை அவள் தானாகவே மயக்கம் தெளிந்தாள்.

ஐந்து கட்டைத் தூரத்தை எப்படியோ கடந்து, கோப்பாயை இப்போது அவன் வண்டி நெருங்கிக்கொண்டிருந்தது.

பாதிவழிப் பயணம் முடிந்தாயிற்று.

கண்களைக் கூர்மையாக்கிக்கொண்டு நன்றாக உற்றுப் பார்த் தான் - தூரத்தில் தெளிவாகத் தெரிந்தது. மீண்டும் வேகத்தைத் தொடங்கினான்... இங்கே என்ன நடக்கும்? முந்திய தடைகளில் கண்ணுக்கு முன்னாலேயே மனைவிக்கு நிகழ்ந்த கொடு மைகள் நெஞ்சை உலுக்கி எடுத்தன, புயலை நோக்கி அவன் வண்டியைச் செலுத்துகிறானா? தெரு ஓரத்தில் ஒரு சொறிநாய் பட்டப்பகலில் மாறிமாறி ஊளையிட்டது. தடைமுகாமுக்குப் பக் கத்தில் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினான் அவன்.

ஆங்கிலமும் - இந்தியும் ஏதேதோ கூச்சலுமாய் அந்தக் கொடிய விலங்குகள் பாய்ந்து வருவதை இப்போது அவர்கள் பார்த் தார்கள்.

இந்திய வெறிப்படை தன் வழமையான காட்டுமிராண்டித் தனத்தில் இறங்கிற்று.

வானத்தை நோக்கி ஒரு முரடன் துப்பாக்கி வேட்டுக்களை மளமளவென்று தீர்த்தான்.

கூட்டமாக அவர்கள் வண்டியை மொய்த்துக்கொண்டார்கள்.

"பாரத் மாதா கீ ஜெய்!"

வானத்தை இடித்த முழக்கத்தோடு ஒருவன் துப்பாக்கியால் ஓங்கி முகத்தில் அடிக்க - கீழே விழுந்த கணவனைப் பார்த்து, "அவரை அடியாதீங்கோ!" என்று முழு வலிமையையும் திரட்டிக் கூச்சலிட்டாள் அவள்.

சண்டாளர்கள் அவள் பக்கம் திரும்பினார்கள்.

கையைக் கொடுத்து, ஒருவன் அவளை வெறித்தனமாகப் பெட்டியில் இருந்து கீழே இறக்கினான்.

"அவள் கர்ப்பிணி பாருங்கோ - அவளைத் தொடாதீங்கோ!"

நிலத்தில் - இரத்தம் தோய்ந்த முகத்தோடு கிடந்து கத்திய அவன் குரலை, யாருமே பொருட்படுத்தியதாய் தெரியவில்லை.

"சேலைக்குள்ளே குண்டு இருக்குதா?"

ஒரு வெறியன் குடிபோதைச் சிரிப்போடு, அரைகுறைத் தமிழில் அவளைப்பார்த்துக் கேட்டான்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"சேலையை உயர்த்து!" என்று கத்தினான் ஒருவன்.

"பாவிகளே ஐயோ! ஐயோ!" என்று அவள், தலையில் அடித்து ஓலமிட்டாள்.

எல்லாம் முடிந்துவிட்டது, வதைகளைச் சுமந்த சடலமாய் அவள் வானத்தை விறைத்துப் பார்த்த கண்கள் மூடாமல் - அசை வற்றுக் கிடந்தாள்.

முகத்தைக் கைகளால் பொத்திப் பிடித்துக்கொண்டு, ஒரு சின் னஞ்சிறு பள்ளிக்கூடச் சிறுவனைப் போல் அவன் தேம்பித் தேம்பி அழுதான்.

தெருவில் உழவு வண்டி நெருப்பில் எரிந்துகொண்டிருந்தது.

"ஐயா, சவத்தை ஊருக்குக் கொண்டுபோகவேணும்"

இந்தியப்படை அதிகாரி ஒருவரைப்பார்த்துக் கெஞ்சினான், அவன்.

வாயில் இருந்த சுங்கானை அவர் வெளியே எடுத்தார்.

"அதெல்லாம் முடியாது - தெரு ஓரத்தில் எரி - போ!"

அவன் அவளைத் தூக்கிச் சென்று தெருவோரத்தில் நின்ற நெடிய பனை மரத்துக்குக் கீழே கிடத்தினான். பட்ட பனைமரத் தின் கட்டைகளைத் தூக்கிவந்து அவள் உடலின் மேல் போட்டான்.

நெருப்பு வைத்த நேரத்தில், அவன் காதில் இந்தியப்படை வெறியர்கள் கூட்டமாகச் சந்தியில் நின்று பாடிய அந்தப் பாடல் தெளிவாகவே கேட்டது!

அவர்கள் கூத்தாடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள்,

**"ஜன கண மன அதி**
**நாயக ஜயஹே**
**பாரத பாக்ய விதாதா!"**

நன்றி: தமிழீழம் - பங்குனி 1988

# வெளிவந்துவிட்டது

## உலக வணிகம்
## ULAGA VANIKAM
## 2023




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

**437-345-4203**

# இந்துத் தமிழர்கள்?

12.03.2023




இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள இந்து அமைப்புகள் கடந்த ஐந்தாம் திகதி, இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதி கோரி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தன. இலங்கையில் இந்து ஆலயங்கள் இடிக்கப்படுவதும் இந்துக்களுக்கு தீங்கு இழைக்கப்படுவதும் ஒரு கலாசார இனப்படுகொலை என்றும் மேற்படி இந்து அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையை இந்து தமிழர்களின் பிரச்சினையாக குவிமையப்படுத்தி இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியை கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் தாயகத்தில் ஒரு பகுதியினரும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் ஒரு பகுதியினரும் கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வசிக்கும் காசியானந்தன் உட்பட ஈழத் தமிழர்கள் சிலர் அவ்வாறான அணுகுமுறையை முன்வைத்து ஓர் அமைப்பையும் உருவாக்கியிருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் கடந்த ஆண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரின் ஒருங்கிணைப்பில் நாட்டில் உள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது மாநாடும் புதுடில்லியில் நடத்தப்பட்டது. இம் மாநாடுகளில் டெல்லியில் உள்ள சிவசேனை அமைப்பைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள்.

இந்திய ஆளுங்கட்சியாக உள்ள பாரதிய ஜனதாவை அணுகுவதற்கு இந்துத்துவாவை ஒரு வாகனமாக கையாள வேண்டும் என்ற முனைப்பு ஈழத் தமிழர்கள் மத்தியில் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. அதற்குப் பின்வரும் காரணங்கள் உண்டு.

முதலாவது காரணம் தமிழகத்தைச் சேர்ந்த திராவிட கட்சிகளில் தங்கி இருப்பதனால் எந்தப் பயனும் இல்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டது. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் கலைஞர் கருணாநிதி நடந்து கொண்ட விதம் தொடர்பில் ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அவர் மீதும் அவருடைய கட்சி மீதும் தொடர்ந்து வெறுப்போடு காணப்படுகிறார்கள். இந்த வெறுப்பும் பாரதிய ஜனதாவை நோக்கிப் போக ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், காங்கிரஸ் கட்சி மீதான எதிர்ப்பும் பாரதிய ஜனதாவின் மீதான விருப்பமும். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடுகையில், பாரதிய ஜனதாவின் ஆட்சிக் காலங்களில் ஒப்பீட்டளவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முடிவுகள் எடுக்கப்பட்டதான ஒரு நம்பிக்கை ஈழத் தமிழர்கள் மத்தியில் உண்டு. எனவே பாரதிய ஜனதாவின் ஆட்சிக்காலத்தில் ஈழத் தமிழர்களுக்கு நல்லது நடக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மூன்றாவது காரணம், ஈழத்தில் சிவசேனை, உருத்திர சேனை போன்ற அமைப்புக்கள் துடிப்பாகச் செயற்பட்டு வருகின்றன. மலையகத்திலும் ஆர். எஸ்.எஸ் பரவலாக கால் பதித்து வருகின்றது. இந்த அமைப்புகளின் ஊடாக ஈழத்தமிழ் அரசியலை இந்துத்துவா தடத்தில் ஏற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்கு உலகில் உள்ள எந்த பிசாசோடும் கூட்டிச் சேர்வதற்கு தயாராக காணப்பட்டன, காணப்படுகின்றன. அவ்வாறு ஒரு பெரிய இனம் எந்த பிசாசோடும் கூட்டுச் சேர்ந்து தமிழர்களை ஒடுக்கலாம் என்றால், ஒரு சிறிய இனம் மத ரீதியாக இந்திய ஆளும் கட்சியை கையாள்வதில் என்ன தவறு உண்டு? என்று அவர்கள் கேட்கிறார்கள்.

மேற்கண்ட காரணங்களை முன்னிறுத்தி ஈழத் தமிழ் அரசியலை இந்து அரசியலாக சுருக்குவதோடு இந்திய மத்திய அரசாங்கத்தை அணுகும் முயற்சிகளில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ் பரப்பிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் சக்திகளும் தொடர்ச்சியாக உழைத்து வருகின்றன.

இதில் தொகுத்துக் கவனிக்க வேண்டிய விடயம் என்ன வென்றால், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வழிவந்த அமைப்புகளும் உட்பட விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் இப்பொழுது மொழி உண்டு, தேவையான பணம் உண்டு, உலகம் முழுவதும் தொடர்புகள் உண்டு. எனவே அவர்கள் தமிழகத்திலும் டெல்லியிலும் உள்ள பாரதிய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களை எளிதாக அணுகுகிறார்கள், நெருங்கி வருகிறார்கள். அதன்மூலம் தாயகத்தில் வாழும் மக்களுக்கு எதையாவது செய்யலாமா என்று சிந்திக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறு சிந்திக்கும் அமைப்புகளும் தனி நபர்களும் தாயகத்தில் மக்களாணையைப் பெற்றவர்கள் அல்ல என்பதே இந்த ராஜதந்திரத்தில் உள்ள அடிப்படைப் பலவீனம் ஆகும். ராஜதந்திரம் எனப்படுவது அதிகாரத்தின் கலை. ஒரு அதிகார மையம் தனது நலன்சார் நோக்கு நிலையில் இருந்து ஏனைய அதிகார மையங்களோடு இடையூடாடுவதுதான் ராஜதந்திரம். அப்படிப்பார்த்தால் ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிகார மையமாக இருப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் தான். ஆனால் தாயகத்தில் பலமாக உள்ள கட்சிகள் மேற்கண்டவாறு இந்துத்துவா ராஜதந்திரத்தை பின்பற்றுவதாக தெரியவில்லை. குறிப்பாக தாயகத்தில் உள்ள பலமான கட்சியாகிய தமிழரசுக் கட்சியின் மேலிடத்தில் காணப்படும் சம்பந்தரும் சுமந்திரனும் இந்த விடயத்தில் இந்தியாவில் முழுமையாகத் தங்கியிருக்கத் தயாரில்லை. 2021 இல் இந்தியா கூட்டமைப்பை டில்லிக்கு வருமாறு அழைத்த போது சம்பந்தர் அந்த அழைப்பை எதோ காரணங்களைக் கூறி ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும் தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவப் போட்டி காரணமாக சிறீதரனும் சுமந்திரனும் யார் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்வது என்ற ஒரு போட்டியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. அண்மை மாதங்களில் இருவருமே தமிழகத்துக்கு சென்றார்கள். இருவருமே அங்குள்ள பாரதிய ஜனதாக் கட்சிப் பிரமுகராகிய அண்ணாமலையோடு தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவது என்றால் இந்தியாவின் ஆசீர்வாதங்கள் தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ தெரியவில்லை.

ஆனால் இது கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவ போட்டி மற்றும் தனியாள் முனைப்பு போன்றவற்றின் விளைவுதான். மாறாக, தமிழர்களை ஒரு தேசமாகக் கருதி இந்திய தேசத்தோடு ராஜதந்திர உறவுகளை எவ்வாறு பேண வேண்டும் என்ற தீர்க்கதரிசனம் மிக்க விஞ்ஞானபூர்வமான ஒரு வெளியுறவுத் தரிசனத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளாகத் தெரியவில்லை. அவ்வாறான வெளியுறவுத் தரிசனங்கள் தேவை என்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எந்தக் கட்சியும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்குத் தான் எதிரில்லை என்று அடிக்கடி கூறி வருகிறது. அதே சமயம் 13 வது திருத்தத்தை இந்தியா தமிழ் மக்கள் மீது திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெளிவாகப் பிரித்து கூறுகிறது. ஆனால் நடைமுறையில் அக்கட்சியின் செயற்பாடுகள் இந்தியாவை எதிரியாகப் பார்பதாகவே தெரிகிறது. தனது அரசியல் எதிரிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூறும் போது மறைமுகமாக இந்தியா எதிரியாகிறது. அக்கட்சியின் லண்டன் ஆதரவாளர்கள் முகநூலில் எழுதும் குறிப்புகள் இந்தியாவை புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என்ற வெளியுறவுத் தரிசனத்தைக் கொண்டவைககளாகத் தெரியவில்லை. அவ்வாறு இந்தியாவை நீக்கிவிட்டு மேற்கு நாடுகளைக் கையாண்டு தமது அரசியல் இலக்குகளை எப்படி அடையலாம் என்பது தொடர்பாக அவர்கள் இதுவரையிலும் விஞ்ஞானபூர்வமான வெளியுறவுக் கொள்கை எதனையும் முன்வைத்ததாகவும் தெரியவில்லை. பூகோள, புவிசார் அரசியலைப் பற்றி அதிகம் பேசும் ஒரு கட்சி அதன் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதி தான் உள்நாட்டுக் கொள்கையும் என்பதனை இதுவரை தெளிவாக நிரூபித்திருக்கவில்லை.

அக்கட்சி மட்டுமல்ல, உள்ளதில் பெரிய தமிழரசுக் கட்சியிடமும் வெளியுறவுக் கொள்கை என்று ஏதும் உண்டா? இந்தியாவுக்கு கடிதம் எழுதிய ஏழு கட்சிகளிடமும் அப்படி எதுவும் உண்டா? இவ்வாறு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற, தமிழ் மக்கள் மத்தியில் செயல்படுகின்ற கட்சிகள் தமது வெளியுறவுக் கொள்கையை, வெளியுறவு நடைமுறையை வெளிப்படையாக முன்வைக்காத ஒரு வெற்றிடத்தில், மேற்படி கட்சிகளிடம் வெளியுறவுக் கட்டமைப்பு எதுவும் இல்லாத வெற்றிடத்தில், தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும், தமிழகத்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஒரு பகுதியினர் பாரதிய ஜனதாவை இந்துத்துவா ராஜதந்திரத்தின் மூலம் நெருங்கி செல்லலாம் என்று நம்புவதாக தெரிகிறது.

---

**இலங்கையில் வாழும் இந்து தமிழர்களின்**

## நீதிக்காக போராடும் இந்து போராட்ட குழு



சென்னை,ஏப்.08: பல்வேறு சூழல் மற்றும் பிரச்சினைகளால் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்பை அடைந்த இலங்கை அரசுக்கு இந்தியா பொருளாதார உதவி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தொடர்ந்து வழங்கி வருவதை நாம் அனைவரும் மறக்க முடியாது. அவ்வாறு இந்தியா செய்த உதவியை மறந்து இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் தொல் பொருள் ஆராய்ச்சி துறையும், ராணுவமும் இணைந்து இந்து மத வழிபாட்டுத் தலங்களை திட்டமிட்டு தொடர்ந்து சேதப்படுத்தி வருகின்றன. இந்த நிலையில் இலங்கையில் வாழும் இந்து தமிழர்களின் நீதியை நிலைநாட்டும் வகையில் அதற்கான போராட்டத்தை இந்து போராட்ட குழு முன்னெடுத்துள்ளது.

இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு வருகை தர உள்ள நிலையில் இந்த விஷயம் உலகம் முழுவதும் உள்ள இந்து அமைப்புகள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தி உள்ளது. இலங்கையின் தொல்பொருள் துறையும் மற்றும் சில பவுத்த துறவிகளும் சேர்ந்து பழைய சில இந்து கோவில்களை சேதப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றின் பெயர்களை மாற்றுவது மற்றும் அந்த கோவில்களை புத்தமத அடையாளங்களாக மாற்றுவது என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

---

ஆனால் இந்தியாவில் கடந்த 8 ஆண்டு கால பாரதிய ஜனதாவின் ஆட்சியைத் தொகுத்து பார்த்தால் அக்கட்சியும் 13ஆவது திருத்தத்தை தாண்டிச் செல்லத் தயாரில்லை. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளிடமிருந்து ஈழ விவகாரத்தை தன்வசப்படுத்த வேண்டும் என்று தமிழக பாரதிய ஜனதா தீவிரமாக உழைத்து வருகின்றது. இதுவிடயத்தில் திமுகவின் மீது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு உள்ள கோபத்தை அக்கட்சி பயன்படுத்த விளைகிறது. ஆனால் கடந்த எட்டு ஆண்டு கால அனுபவத்தின்படி இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கக்கூடிய தீர்வு 13-ஐத் தாண்டவில்லை.

எனவே இதுவிடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மக்கள் ஆணையைப் பெற்ற கட்சிகள் முதலில் தமது வெளியுறவுக் கொள்கையை பகிரங்க விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும். இதை இப்படி எழுதி எழுதியே எனக்குச் சலித்து விட்டது. முதலில் வெளியுறவுக் கொள்கை வேண்டும். பாரதிய ஜனதாவை அணுகத்தான் வேண்டும். ஏனென்றால் அது இந்திய மக்களின் ஆணையைப் பெற்ற கட்சி. இந்திய மத்திய அரசாங்கத்தில் யார் இருந்தாலும் அவர்களை அணுக வேண்டும். ஆனால் அதற்காக தமிழ்த் தேசியத்தை சைவத் தேசியமாகவோ இந்து தேசியமாகவோ குறுக்கத் தேவையில்லை. மாறாக தெளிவான வெளியுறவு இலக்குகளை முன்வைத்து இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு வியூகத்தில் ஈழத் தமிழர்கள் எப்படிப் பங்காளிகளாக மாறலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது அதுதான்.

நன்றி: நிலாந்தன்

# ஊடகர் லசந்த விக்ரமதுங்கவின் இறுதி வாக்குமூலம்:

## என் மரணத்தின் பாதையை நான் அறிவேன்...! என் மறைவு சுதந்திரத்தை வீழ்த்தாது.

02.04.2023



(ஊடகர் லசந்த விக்ரமதுங்கவின் 'Unbowed and Unafraid' வரலாற்றுநூல் வெளியீடு)

ஈழப்போர் உச்சமடைந்திருந்த 2009இல் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது. சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

**Unbowed and Unafraid வாழ்க்கை வரலாற்று நூல் :**

படுகொலை செய்யப்பட்ட ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் வாழ்க்கை வரலாறு 'Unbowed and Unafraid' என்ற ஆங்கில நூல் 27.3.23 அன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியதாக கூறப்படும் சில பொய்யான வாக்குறுதிகளையும் இந்நூல் அம்பலப்படுத்தி உள்ளது.

2015 தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் லசந்த விக்ரமதுங்கவின் குடும்பத்தாருக்கு கொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததாக கூறப்படுகிறது.

விக்கிரமசிங்கவிற்கும் லசந்த விக்கிரமதுங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற சில கலந்துரையாடல்களையும், அப்போதைய பிரதமர் வழங்கிய உறுதிமொழிகளையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது.

அவரது முன்னாள் மனைவி ரெய்ன் விக்கிரமதுங்கவால் எழுதப்பட்ட இந்நூல், 2009 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட தி சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் சகாக்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் மற்றும் முன்னாள் சகாக்கள் ஆகியோரின் முன்னிலையில் இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் வெளியிடப்பட்டது.

**மனைவி எழுதிய நூல்:**

வரவேற்பு உரையை லசந்த விக்ரமதுங்கவின் புதல்வியும், ஊடகவியலாளருமான ரைசா விக்கிரமதுங்கவும், அதனைத் தொடர்ந்து பீட்டர் டி அல்மெய்டாவின் பிரதான உரையும், கலாநிதி காயத்திரி பெர்னாண்டோவின் விமர்சனமும் இடம் பெற்றன. முதல் பிரதியை நூலாசிரியர் திருமதி சந்தியா எக்னலிகொடவிடம் வழங்கினார்.

லசந்த உண்மையின் நாட்டத்தில் வாழ்ந்து, சுவாசித்து, இறுதியாக இறந்தார். லசந்த ஆழ்ந்த அன்பு கொண்ட இலங்கை மக்களுக்கு இந்நூலை வழங்குவதில் நான் பெருமையடைகிறேன், என நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் பேசிய ரெய்ன் கூறினார்.

2009 ஜனவரியில் கொழும்பு வீதியில் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட பின்னர், தி சண்டே லீடர் நாளிதழில் வெளியிடப்பட்ட அவரது மரணத்திற்குப் பின் வெளியான தலையங்கம் 'அதன் பிறகு அவர்கள் எனக்காக வந்தார்கள்' என்ற தலைப்பில் இலங்கையர்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் எதிரொலித்தது.

"எனது கொலை சுதந்திரத்தின் தோல்வியாக கருதப்படாது, ஆனால் உயிர் பிழைப்பவர்களுக்கு அவர்களின் முயற்சிகளை முடுக்கிவிட ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். உண்மையில், இது நமது அன்புக்குரிய தாய்நாட்டில் மனித சுதந்திரத்தின் புதிய சகாப்தத்தை உருவாக்கும் சக்திகளை ஊக்கப்படுத்த உதவும் என்று நான் நம்புகிறேன்.

இந்நூல் மறைந்த ஊடகர் விக்கிரமதுங்கவின் வாழ்க்கை மற்றும் வேலையைப் பற்றிய ஒரு உள் பார்வையை வழங்குகிறது. இலங்கையின் முன்னேற்றத்திற்கான தனது தைரியம் மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக ஒரு தேசத்தின் கூட்டு இதயங்களை வென்ற ஒரு மனிதனின் வாழ்க்கையின் தனிப்பட்ட, உத்வேகமான பதிவு இது.

இந்த புத்தகம் விக்கிரமதுங்கவின் ஆரம்பகால வாழ்க்கை, பத்திரிகைத்துறையில் அவர் மேற்கொண்ட பயணம், ஆசிரியர் மற்றும் அவர்களது மூன்று குழந்தைகளுடனான அவரது குடும்ப வாழ்க்கை மற்றும் அவரது அரசியல் பணி ஆகியவற்றையும் தெளிவாக விவரிக்கிறது.

புத்தகம் முக்கியமாக ஒரு பத்திரிகையாளராக அவரது குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் மோதல்கள், குறிப்பாக தி சண்டே லீடரின் ஆசிரியராக, அவரது துயரமான படுகொலை மற்றும் அதன் பின்னர் நடந்த கொலை விசாரணையில் கவனம் செலுத்துகிறது. கனதியான இந்நூல் 400+ பக்கங்களில் 25 பக்க வண்ணப் புகைப்படங்களுடன் வெளியாகி உள்ளது.

**தமிழ் ஊடகம் மீதான அடக்குமுறை :**

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படுவதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. 1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூப சிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

**சிங்கள ஊடகவியலாளர் கொலை:**

இலங்கையில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறீலங்காவில் 1990ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

**14 வருடமாகும் லசந்த விக்ரமதுங்க படுகொலை :**

லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கெதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை "சண்டே லீடர்', மோர்னிங் லீடர் மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான "இருதின' என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாக்க தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்





களுக்குள்ளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்கள் ஆகின்றன. 2009ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின்படி, லசந்த விக்ரமதுங்கவின் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் இதுவரை முழுமையான தீர்ப்பு வரவில்லை.

மிகவும் இளவயதிலேயே "சன்" பத்திரிகையில் ஒரு செய்தி யாளராகச் சேர்ந்து தனது ஊடகத்துறை வாழ்வை ஆரம்பித்த லசந்த 1982 ஆம் ஆண்டில் தி ஐலண்ட் பத்திரிகையில் இணைந்தார்.

அதே நேரம் அரசியலிலும் தன்னை இணைத்துக் கொண்டார். 1989 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டார். ஆனாலும் அவர் தெரிவு செய்யப் படவில்லை. 1994 ஆம் ஆண்டில் சண்டே லீடர் பத்திரிகையை ஆரம்பித்தார்.

**லசந்த மீதான கொலை முயற்சிகள் :**

லசந்தவைக் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவ ரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 அக்டோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்திற்கு தீவைத்து நிர்மூலஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009, ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09:30 மணியள வில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்குட்பட்டாலும், பிற்பகல் 1.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**லசந்த படுகொலையை கண்டித்த சர்வதேசம் :**

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதனை கண் டித்து கொழும்பில் 2009 சனவரி 9 ஆம் நாளில் பெரும் கண் டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, உலக சமாதான சபை அத்தனையும் அவருக்காகக் அறிக்கைகள் வெளியிட்டன.

படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு ஐநாவின் கல்வி மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ 2009 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை சுதந்திர விருதை வழங் கியுள்ளது. இவ்விருது 2009, மே 3 ஆம் நாளன்று உலக பத்திரிகை சுதந்திர தினத்தில் கட்டார் நாட்டில் வழங்கப்பட்டது.

**இறுதி ஆசிரிய தலையங்கம் :**

ஜனவரி 11-ம் தேதி வெளியாக வேண்டிய 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு, "மரணத்தின் பாதையை நான் அறிவேன்" என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை ஜனவரி 7-ம் தேதியே லசந்த எழுதுவிட்டார். இந்த தலையங்கம் அவர் இறந்த பின் பிரசுர மானது. லசந்த விக்கிரமதுங்க எழுதிய தலையங்கத்திலிருந்து சில பகுதிகள்.

"என் மரணத்தின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு, போலீஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தர விட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால், ஒன்றும் வெளியில் வராது. நம் இருவருக்கும் தெரியும், என் மரணத்துக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று. ஆனால், துணிந்து அவர் பெயரைச் சொல்ல முடியாது உன்னால். என் வாழ்க்கையில் மட்டுமல்ல, உன்னைப் பொறுத்து இதுதான் உனக்கும். உன் காலத்தில்தான் என் மரணம் நடந்தது என்பதை எந்த நேரத்திலும் உன்னால் மறக்க முடியாது!

என் மறைவு, சுதந்திரத்தை வீழ்த்தாது. இதற்காகப் போராடு பவர்கள் தொடர்ந்து பணியாற்ற ஊக்கமாக அமையும். நமது தாய்நாட்டின் மனித சுதந்திரத்துக்கு ஒரு தொடக்கமாக அமை யும். தேசப்பற்று என்ற பெயரால் பலர் தங்களது உயிரைத் துறக்கும் உண்மையை தெரிந்துகொள்ள இது உதவும். மனிதநேயம் வளம் பெறும்.

லசந்த கொலை செய்யப்பட்டு பதினான்கு ஆண்டுகள் பூர்த்தி யாகிவிட்டன.

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி அத்திடிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர் களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர் கொல்லப் பட்டார்.

இதேவேளை, மிக் இராணுவ விமானக் கொள்வனவின் போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நாட்டுக்கு உண் மைகளை வெளிக் கொணர்ந்த காரணத்தினால் லசந்த படு கொலை செய்யப்பட்டதாக முன்னாள் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரட்ன குற்றம் சுமத்தியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

**நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:**

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் "கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்" என்ற அமைப்பு இலங் கையில் 1992ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்ட தாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

நன்றி: ஐங்கரன் விக்கினேஸ்வரா



# வள்ளுவரிலிருந்து வெடுக்குநாறி மலைக்கு?

06.04.2023




வவுனியா வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுருக்கள் சிதைக்கப்பட்டமை திட்டவட்டமாக ஒரு பண்பாட்டுப் படுகொலைதான். ஆனால் அந்தத் தீமைக்குள் ஒரு நன்மை உண்டு. அச்சம்பவம் தமிழ் மக்களை உணர்ச்சிகரமான ஒரு புள்ளியில் ஒன்றுதிரட்டியுள்ளது. இதுதொடர்பாக சைவ மகாசபை ஒழுங்குபடுத்திய எதிர்ப்பில் ஒரு கிறிஸ்தவ மதகுரு காணப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையின் நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு அது தொடர்பாக ஒரு அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது. இது, அண்மை நாட்களாக தமிழ்மக்கள் மத்தியில் மதரீதியான அக முரண்பாடுகளைத் தூண்டி வரும் சக்திகளின் வேகத்தை ஒப்பீட்டளவில் தடுக்குமா? ஒருபுறம் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இன்னொருபுறம், இந்து–கிறிஸ்தவ முரண்பாடுகள் ஊக்குவிக்கபடுகின்றன.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆவிக்குரிய சபைப் போதகரான போல் தினகரன், அவர் கலந்து கொள்ளவிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்ட காரணம் அவர் வணிக விசாவில் வந்தமைதான் என்று கூறப்பட்டது. ஆனால் வெளியில் சொல்லப்படாத காரணம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் ஈழத்துச் சிவசேனாவின் எதிர்ப்புதான் என்று ஊகிக்கப்படுகிறது. அல்லது சிவசேனையின் வற்புறுத்தலால் அவ்வாறு அப்போதகரை விசாரிக்க வேண்டி வந்தது என்ற ஒரு தோற்றம் உண்டாகக்கூடிய விதத்தில் அரசாங்கம் காய்களை நகர்த்தியிருக்கிறது என்றும் கூறலாம். போதகர் போல் தினகரன் இதற்கு முன்னரும் வந்து போயிருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவருக்கு வணிக விசாதான் வழங்கப்பட்டது. சுற்றுலா விசாவில் வருகை தருபவர்கள் மதப் பிரச்சார நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அவருக்கு விசாவை வழங்கியது சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம். அந்த விசாவை வழங்கும் பொழுது அவர் என்ன தொழிலுக்காக யாப்பாணத்துக்குப் போகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் வரவில்லை. முதலில் கொழும்புக்குத்தான் வந்தார். கொழும்பில் நான்கு நாட்கள் இருந்தார். அங்கே ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அவருக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்யும்பொழுது ரணில் விக்கிரமசிங்க அவருக்குமுன் அடக்க ஒடுக்கமாக நிற்கும் ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகிறது. அதன்பின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். பலாலி விமான நிலையத்தில் அவர் கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் விசேஷமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவரை விசாரிப்பதற்கு என்று இரண்டு அதிகாரிகள் கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்ததாகவும் ஒரு தகவல். அந்த விசாரணையின் விளைவாக அவர் ஏற்கனவே மானிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பிவிட்டார். இதுதொடர்பில் அந்த மத நிகழ்வை ஒழுங்கு படுத்தியவர்கள் ஜனாதிபதியோடு தொடர்புகொள்ள முற்பட்ட போதும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.



இதற்கு முன்னரும் அவரைப் போன்ற போதகர்கள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வணிக விசாவோடுதான் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மட்டும் வணிக விசா ஏன் ஒரு விவகாரமாக காட்டப்படுகிறது? அப்படியென்றால் அவரைப் போன்ற போதகர்கள் எந்த விசா எடுத்துக்கொண்டு நாட்டுக்குள் வரவேண்டும்? அதிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடக்காத ஒரு விசாரணை ஏன் பலாலி விமான நிலையத்தில் நடந்தது? யாழ்ப்பாணம் ஒரு தனி நிர்வாக அலகா? அவ்வாறு பலாலி விமான நிலையத்தில் ஒரு விசேஷ விசாரணையை நடத்தியதன்மூலம் சிவசேனையிடமிருந்து நெருக்குதல் வருகிறது, அதனால்தான் அவ்வாறு விசாரிக்க வேண்டி வந்தது என்று காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

எந்த ஜனாதிபதி, போதகர் போல் தினகரனிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றாரோ, அவருடைய அரசாங்கத்தின் இரண்டு அதிகாரிகள் போதகரை பிந்நேரம் நான்கு மணியிலிருந்து இரவு 8 மணிவரை விசாரித்திருக்கிறார்கள் என்றால் ரணில் விக்கிரமசிங்க இதில் யாருக்கு உண்மையாக இருந்திருக்கிறார்? போதகர் தினகரனுக்கா? அல்லது ஈழத்துச் சிவசேனைக்கா?

நிச்சயமாக அவர் இரண்டு தரப்புக்கும் உண்மையாக நடக்கவில்லை. மாறாக, அவர் சிங்கள பௌத்த அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு விசுவாசமாக நடந்திருக்கிறார். அதன்படி தமிழ் மக்களுக்கிடையே அக முரண்பாடுகளைத் தூண்டும் விதத்தில் நிலைமைகள் கையாளப்பட்டிருக்கின்றன. சிவசேனை நெருக்கடிகளை கொடுத்தபடியால்தான் அந்த மத நிகழ்வை நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது என்று ஒரு தோற்றம் ஏற்படக்கூடிய விதத்தில் நிலைமைகள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆவிக்குரிய சபைகளுக்கும் சிவசேனைக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உள்நோக்கம் உண்டா?

ஈழத்துச் சிவசேனை மேற்படி போதகரின் வருகையைப் பலமாக எதிர்த்தபடியால்தான் அவர் அவ்வாறு விசாரிக்கப்பட்டார் என்பது உண்மையென்றால் இந்த விடயத்தில் ஈழத்துச் சிவசேனைக்கு ஏதோ ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது என்று பொருள். அதாவது தமிழ்மக்கள் மத்தியில் அகமுரண்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு வெற்றி.

ஆனால், அதே ஈழத்துச் சிவசேனையால் குருந்தூர் மலையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களை ஏன் அகற்ற முடியவில்லை? அல்லது வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை? திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்றில், உயர் பாதுகாப்பு வலையங்களில் சைவ மரபுரிமைச் சின்னங்கள் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை?

இதுதான் கேள்வி. சிங்கள பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்துச் சிவசேனையால் வெற்றி பெற முடியவில்லை. அதாவது சிவசேனை எந்த எந்த விடயங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின் படிதான் நடக்கிறது. அதனால்தான் ஈழத்துச் சிவசேனைக்கு சிங்கள பௌத்த தீவிரவாத மதகுருவான ஞானசார தேரர் இணக்கமானவராக தெரிகிறார். ஆனால் சக கிறிஸ்தவர்கள் விரோதிகளாகத் தெரிகிறார்கள். வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கும் கிழக்கு மைய கட்சிகளுக்கு வடக்கு விரோதியாகத் தெரிகிறது. ஆனால் ராஜபக்சக்கள் நண்பர்களாகத் தெரிகிறார்கள்.

இப்பொழுது கூட்டிக்கழித்துப் பார்த்தால் விடை தெளிவாகக் கிடைக்கும். தமிழ் மக்களை பிரதேச ரீதியாக் சமய ரீதியாக் சாதி ரீதியாகப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகள் அதாவது தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அக முரண்பாடுகளை உருப்பெருக்கி அரசியல்செய்ய முற்படும் சக்திகள் ராஜபக்சங்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்துக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆயின் யாருடைய நிகழ்ச்சி நிரலை அவர்கள்

முன்னெடுக்கிறார்கள்?

கடந்த சில வாரங்களாக நான் எழுதிய கட்டுரைகளுக்கு எனது நண்பர் ஒருவர் வாட்ஸ் அப்பில் பதில்வினையாற்றியிருந்தார். கிறிஸ்தவ சிறு சபைகளின் மதமாற்ற நிகழ்ச்சி நிரல்தான் ஈழத்துச் சிவசேனை போன்ற அமைப்புக்களின் வளர்ச்சிக்கு காரணம் என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. அவர் படித்தவர், பொறுப்பான அரசு உத்தியோகத்தில் இருப்பவர், குறிப்பாக தன் தொழில் வரையறைகளைத் தாண்டி சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காக மகத்தான தொண்டைச் செய்பவர். ஆனால் மதம் மாற்றும் சபைகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டோடு காணப்படுகிறார். தமிழ்த் தேசியத்தை மதப் பல்வகைமைகளின் மீது கட்டியெழுப்ப வேண்டும் என்ற எனது விளக்கமானது மதம் மாற்றிகளுக்கு சாதகமானது என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இக்கட்டுரையானது கோட்பாட்டு ரீதியாக மத மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எந்த மதத்தை பின்பற்ற வேண்டும் என்பது ஒருவருடைய தனிப்பட்ட உரிமை. அந்த ஜனநாயக உரிமையில் யாரும் தலையிட முடியாது.

நான் மிகவும் மதிக்கும் ஒரு ஆன்மீகவாதி ஒருமுறை சொன்னார்... மதமாற்றம் அறியாமையின் மீதே நிகழ்கிறது என்று. எல்லா மதங்களும் ஒரே இறுதியிலக்கை நோக்கித்தான் வழிநடத்துகின்றன. தான் பிறந்த மதத்தைப் பற்றிய சரியான விளக்கம் உள்ள ஒருவர், இன்னொரு மதத்திற்கு மாற வேண்டிய தேவை இருக்காது. மதம் மாறும் ஒருவர் தன் மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர்மாறிய மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் என்று அவர் கூறுவார்.

அறியாமை தவிர மதமாற்றத்திற்கு வறுமை, சமூக ஏற்றத் தாழ்வுகள், நலன் சார் தேவைகள்...போன்ற காரணங்களும் உண்டு. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் மத






மாற்றத்தின் பின்னணியில் இருக்கும் அறியாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை அகற்ற வேண்டிய பொறுப்பு மதமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன் வைக்கும் மதப்பிரிவினருக்கு உண்டு. அதுமட்டுமல்ல தம்மை குறிப்பிட்ட ஒரு மதத்தின் காவலர்களாக காட்டிக் கொள்ளும் அனேகர் தமது மதம் கூறும் பேருண்மைகளை அறியாதவர்களே. உண்மையான ஆன்மீகவாதிகள் வெறுப்பை விதைப்பதில்லை, மகிழ்ச்சியையும் அன்பையும்தான் விதைக்கின்றார்கள்.

ஆனால், சில நாட்களுக்கு முன், ஈழத்துச் சிவசேனையின் தலைவர் தனது இல்லத்தில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் மதமாற்றிகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் என்று கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவர் அவ்வாறு கூறிய காலகட்டத்தில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான சட்டமூலம் வெளியிடப் பட்டிருந்தது. தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச்சட்டமே வேண்டாம் என்று கோரிக்கை வைக்கும் ஒரு காலகட்டத்தில் அச்சட்டத்தை பயன்படுத்தி தமிழ் மக்களில் ஒரு பிரிவினரைத் தண்டிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஆயின் அவர் யார் ? அவருடைய எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?

ஏற்கனவே தமிழ்மக்களை பிரதேச வாதத்தின் பெயரால் பிரிக்கும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவோடு கிழக்கில் பலமடைந்து வருகின்றன. இப்பொழுது வடக்கை மதரீதியாகப் பிரிக்கும் சக்திகள் துடிப்பாக உழைக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அதைக் குறித்து கருத்து தெரிவிக்கத் தயங்குகின்றன. இந்தவிடயத்தில் தலையிடத்தக்க வல்லமையோடு சிவில் சமூகங்களும் இல்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சமூக ஆன்மீக வெற்றிடத்தில், நேச முரண்பாடு எது? பகை முரண்பாடு எது? என்ற வேறுபாடு தெரியாமல் தமிழ்ச்சமூகம் ஆளையாள் கடித்துக் குதறிக் கொண்டிருக்க, அனாவசியமான விடயங்களில் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்க,சிங்கள பௌத்த மயமாக்கல் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது. கிண்ணியா வெந்நீரூற்றில், மயிலத்தமடு மாதவனையில்,குருந்தூர் மலையில், நெடுந்தீவில், கச்சதீவில் என்று பரவலாகத் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்துகொண்டிருக்கிறது. இதில் ஆகப்பிந்திய வெடுக்குநாறி மலை விவகாரம். அது தமிழ்மக்களைத் தற்காலிகமாகவேனும் ஒரு புள்ளியில் ஒன்றிணைத்திருக்கிறது என்பது சற்று ஆறுதலான விடயம். ஒரு தீமைக்குள் கிடைத்த நன்மையது. கடந்த வாரம் திருவள்ளுவருக்குத் திருநீறு பூசலாமா இல்லையா என்ற விவகாரத்தில் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்த ஒரு சமூகம் இப்பொழுது வெடுக்குநாறி மலையை நோக்கித் திரும்பியுள்ளதா?

நன்றி: நிலாந்தன்








"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் – The Thirst of Thamils is the Homeland of Thamileelam" சங்கத்தமிழ்